YARL OSAI
Regested No. QD/130/News/2011
# யாழ் ஓசை
வார இதழ்
ஓசை : 01 நாதம் : 31 வெள்ளிக்கிழமை 03.06.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# யாழ்.வாக்காளர் பட்டியலிலிருந்து 3,31,214 பேரின் பெயர்கள் நீக்கம்

## வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் மின்கம்பத்தில் மோதியது



வண்ணார்பண்ணை,

வேகக்கட்டுப்பாட்டை இழந்த 'பிக் அப்' வாகனமொன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் பாதுகாப்பு வேலியையும் மின்கம்பத்தையும் பதம்பார்த்துள்ளது.

இச் சம்பவத்தில் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான இப் பிக்கப் வாகனத்தின் சாரதி காயமடைந்து யாழ். போதனா வைத்தியாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த பிக்கப் வாகனம் யாழ். பிரதான வீதியூடாக யாழ். நகருக்குச் செல்லமுற்பட்ட போது வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது துரையப்பா (6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தலில் 4 ,84,791 பேர் வாக்களிக்க தகுதி

அச்சுவேலி,

யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வாக்காளர் இடாப்பிலிருந்து 3 இலட்சத்து 31 ஆயிரத்து 214 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கு அமைவாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தோரின் எண்ணிக்கை 8 இலட்சத்து 16 ஆயிரத்து 5 ஆகும். ஆனால் 2010 ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 பேரே (6ஆம் பக்கம் பார்க்க

## அரசின் பாரிய வேலைத்திட்டங்களை குறைத்து மதிப்பிட உள் நாட்டு, சர்வதேச சக்திகள் முயற்சி

### கவலைக்குரியது என்கிறது அரசாங்கம்

நாட்டில் 30 வருடகால யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ள போது அந்த முயற்சியை குறைத்து மதிப்பிடுவதற்கு சில உள்நாட்டு மற்றும் சர்வதேச (6ஆம் பக்கம் பார்க்க

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்த இலங்கையருக்கு பிரிட்டனில் மூன்று வருட கடூழிய சிறை

### தண்டனை முடிந்ததும் நாடு கடத்தப்படுவார்

சிறுமி ஒருவர் மீது பாலியல் குற்றம் புரிந்த வழக்கில் குற்றவாளியாக இனங் காணப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழருக்கு பிரிட்டனில் மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தண்டனைக் காலம் முடிவடைந்த பிற்பாடு அவர் நாடு கடத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மக்களின் எழுச்சிக்கெதிராக பயன்பட்ட ஆயுதம் தெற்கில் உழைக்கும் வர்க்கத்திற்கெதிராக பயன்படுகிறது

(எம். நேசமணி)

- வண.சக்திவேல்

வடக்கில் மக்கள் எழுச்சிக்கு எதிராக பாவிக்கப்பட்ட ஆயுதங்கள் இன்று தெற்கில் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக பிரயோகிக்கப்படுவதாக வண. சக்திவேல் குற்றம் சுமத்தியுள்ளார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீதான பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் இந்தியா முதற்கட்டமாக 250 மில்லியன் நிதி உதவி

### விரைவில் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படும் என்கிறார் உயர் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்றை அமைப்பது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்தியா முதற்கட்டமாக 250 மில்லியன் ரூபாவினை இந்தத் திட்டத்துக்காக வழங்கவுள்ளது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார். (6ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை பாதுகாவலர்கள் சுதந்திரமாக பணியாற்ற வேண்டும்

## ம. உ. ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ்

ஏழாலை,

மனித உரிமைப் பாதுகாவலர்கள் பிரதேசங்களில் இணைந்து செயற்படுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை பிரதேச அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோர் செயற்திட்டத்தின் கீழ் மனித உரிமைப் பாதுகாவலர் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தலைமையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக இடம்பெயர்ந்தோர் வசிக்கும் இடங்களிலிருந்து இளைஞர் யுவதிகள் தெரிவு செய்து மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை இனங்காண்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கு பயிற்சியைப் பெற்றவர்களுக்கு மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் உரிமைகள், சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான உரிமைகள், நீதிமன்ற கட்டமைப்பு, மனித உரிமைகள் தொடர்பான நிறுவன அமைப்பு மாவட்டத்தில் சேவையினைப் பெறக்கூடிய வசதிகள் என்பன தொடர்பாகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

அனர்த்த காலங்களில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் கல்வி தொடர்பான உரிமை, சுகாதாரம் தொடர்பான உரிமை, வாக்குரிமை மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கில் வெடிபொருட்கள் மீட்பு

வண்ணார்பண்ணை

வடமராட்சி கிழக்கு தாளையடி ரோமன் கத்தோலிக்க பாடசாலை வளாகத்தில் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்றும் புனித அந்தோனியார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் பனைவடலியில் வைக்கப்பட்டிருந்த வெடி பொருள் ஒன்றும் கண்டிபிடிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சர்வோதய நிறுவன மிதிவெடி அபாயக் கல்வித் திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள் மிதி வெடி அபாய விழிப்புணர்வு வழங்குவதற்கு சென்ற போதே அப்பகுதி மாணவர்கள் மற்றும் பொது மக்களால் இவ் வெடிபொருட்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன. இதனையடுத்து சர்வோதய மிதிவெடி அபாய கல்விக் குழுவினரால் இது தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். இங்கு மிதி வெடி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. எனினும் இவ் வெடிக்காத பொருட்கள் எவ்வாறு இவ்விடத்துக்கு வந்தன என்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

# யாழ். புற்றுநோயாளர்களுக்கு அமெரிக்காவிலிருந்து சத்துணவு

அச்சுவேலி,

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அமெரிக்காவிலிருந்து எடுத்துவரப்பட்ட அதி ஊட்டச்சத்து அடங்கிய சத்துணவு யாழ். போதனா வைத்திய சாலை விடுதியில் தங்கியிருக்கும் புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்பட்டது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட லயன்ஸ் கழக புற்றுநோய் நிதியத்தின் ஊடாக அமெரிக்காவிலிருந்து சத்துணவு எடுத்துவரப்பட்டு புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்பட்டது. நோயின் தாக்கத்தினால் ஏற்படக்கூடிய சக்தி இழப்பு மற்றும் போஷாக்கின்மையை நிவர்த்திசெய்வதற்கே இந்த அதி ஊட்டச்சத்து அடங்கிய சத்தணவு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புதுமுறிப்பு பிரதான பாலம் சேதமானது 3 கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிப்பு

கிளிநொச்சி,

கிளிநொச்சி, புதுமுறிப்பு பிரதான பாலம் பலத்த சேதமடைந்துள்ளதால் அக்கராயன், கோணாவில், ஸ்கந்தபுரம் உட்பட பல கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலம் சேதமாகிப் பல மாதங்களான நிலையில் இப்பாலத்தை திருத்தம் செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இதனால் மாவட்டத் தலைநகரான கிளிநொச்சிக்கும் ஏனைய இடங்களுக்கும் செல்ல முறிகண்டி - அக்கராயன் வீதியைப் பயன்படுத்துவதால் பல மணிநேர பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் வீணான காலதாமதம் ஏற்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, முறிகண்டி - அக்கராயன் வீதியும் சேதமாகிக் காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்பதிலும் அதிக சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும், அத்துடன் கோணாவில் - ஸ்கந்தபுரம் - அக்கராயன் வீதியும் திருத்தம் செய்யப்படாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் இதேபோல் வன்னேரிக்குளம் - ஜெயபுரம் - நாச்சிக்குடா வீதியும் சேதமாகியுள்ளதாகவும் இவ்வீதிகளைத் துரிதமாக திருத்தம் செய்யவும் புதுமுறிப்புப் பாலத்தை விரைவாகப் புனரமைக்கவும் ஆவனசெய்யுமாறு இப்பிரதேச மக்களும் பொது அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளன.

# சனல்-4 நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

## கேள்வி எழுப்புகின்றது ஐக்கிய தேசிய கட்சி

அரசாங்கம் கடந்த காலங்களில் கூறியதைப்போன்று சனல்- 4 விவகாரம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. சனல் -4 நிறுவனத்துக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று வினவுகின்றோம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது

கடந்தகாலங்களில் சனல்-4 விவகாரம் வந்ததும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்க மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை.

எனவே ஏன் இவ்வாறு சனல் -4 நிறுவனத்துக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மனித உரிமைகள் விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரி[illegible] வினவுகின்றோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியானது எப்போதும் நாட்டு மக்களின் நலன்குறித்து சிந்திப்பதுடன் சகல இன மக்களையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது

இதேவேளை கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் ஸ்தம்பிதமடைவதற்கோ செயலிழப்பதற்கோ ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் இடமளிக்காது. இந்தத்துறையை பாதுகாப்பது முக்கிய தேவையாகும்.

ஆடைத்துறையுடன் தொடர்புபட்ட ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நீக்கப்பட்டபோதும் நாங்கள் அதற்காக குரல் எழுப்பினோம். காரணம் சுதந்திர வர்த்தக வலயம் என்ற கட்டமைப்பை ஐக்கிய தேசிய கட்சியே உருவாக்கியது. அதனை மேலும் முன்னேற்றவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும். சுதந்திர வர்த்தக வலயம் ஸ்தம்பிதமடைவதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. ஐக்கிய நாடுகள் சபை கூறிவரும் விடயங்களை நிரூபிப்பது போன்ற சம்பவங்களுக்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது.

# தமிழ் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தலைமைத்துவ பயிற்சியை பெறுகின்றனர்

## தொடர்ந்து நடத்துவோம் என்கிறார் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி வேலைத் திட்டங்கள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் இடம்பெற்றுவருகின்றன. இது தொடர்பில் எந்தவொரு மாணவனும் முறைப்பாடு செய்யவில்லை. யாழ்ப்பாண மற்றும் கொழும்பு பகுதிகளை சேர்ந்த தமிழ் மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியான முறையில் இந்த தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபடுவதை நாங்கள் காண்கின்றோம் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி வேலைத் திட்டம் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் கூறுகையில் :-

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி வேலைத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. நாடளாவிய ரீதியில் 27 முகாம்களில் இந்த பயிற்சிநெறிகள் இடம்பெற்றுவருகின்றன.

உண்மையில் இந்த தலைமைத்துவ பயிற்சி நெறிகள் மாணவர்களுக்கு அத்தியாவசியமானவையாகும். மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இதில் பங்கெடுத்து வருகின்றனர்.

எந்தவொரு மாணவனிடமிருந்தும் இது தொடர்பில் முறைப்பாடுகள் இல்லை. முக்கியமாக அண்மையில் நான் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கலந்துரையாடினேன். அம்மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும், இந்த தலைமைத்துவ பயிற்சிநெறியில் ஈடுபடுகின்றனர்.

மேலும் நான் அடிக்கடி இந்த பயிற்சி முகாம்களை சென்று பார்வையிட்டுவருகின்றேன். அந்த வகையில் மணாவர்கள் எந்தளவு ஆர்வத்துடன் இதில் பங்கெடுக்கின்றறனர் என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

எனவே இந்த தலைமைத்துவ பயிற்சிநெறியை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும். தற்போது இது மிகவும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுவருகின்றது என்றார்.

இதேவேளை இவ்வாரம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் மைத்ரிபால சிறிசேன இந்த தலைமைத்துவ பயிற்சி நெறியை உயர்தர மாணவர்களுக்கு வழங்வேண்டும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடனான பேச்சும் மு.கா.வின் வாதமும்





தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு மூலாதாரமாகவுள்ள அரசியல் தீர்வு விடயம் பல தசாப்த காலங்களாக இழுபறிக்குட்பட்டுள்ள நிலையில் தற்போதைய முன்னெடுப்புகளிலும் நகர்வுகளிலும் மாற்றுத் தரப்பினரின் பங்கீடு அவசியம் என்றதொரு வாதம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த வாதத்தின் நியாயத் தன்மை அல்லது நியாயமற்றத்தன்மை என்பவை தொடர்பில் ஆராய்வது தகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினை எட்டிவிட வேண்டும் என்றதொரு நிலைப்பாட்டில் தமிழ்க் கட்சிகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. இதற்காக இலங்கை அரசு மட்டுமல்லாது, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவிகளும் நாடப்படுகின்றன. இந்நிலையில் எமது நாட்டின் உள்ளக பிரச்சினைகளுக்கு நாமே பேசித் தீர்வுகளை எட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்ற காரணத்தினால் அரசாங்கத்துடன் இயைந்து செயற்பட வேண்டியதொரு நிலை தமிழ்க் கட்சிகளுக்கு எழுந்துள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு கிழக்கு மக்களால் மேற்கொள்ளப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. தமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை உள்ளது உள்ளவாறே எடுத்துக் கூறி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் அரசாங்கத்திடம் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருக்கின்றது. அது மட்டுமல்லாது, முன்னைய அரசாங்கங்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு பேச்சுக்களை முன்னெடுத்திருக்கின்றது.

ஐந்து தசாப்த காலங்களாக தீர்வு காணப்படாத வகையில் வடுவாகிப் போயுள்ள தமிழ் மக்களின் உரிமை பிரச்சினை இன்று தேசிய இனப்பிரச்சினையாக தோற்றம் பெற்றிருக்கின்றது. இதனை தீர்த்துக் கொள்ளும்வகையில் இன்றுவரையில் இடம்பெறறு வருகின்ற பேச்சுவார்த்தைகளும் முன்னெடுப்புகளும் ஏதோ ஒரு வகையில் தடங்களுக்கு உள்ளாகி வருகின்றமை அறியாத் விடயமல்ல.

இவ்வாறான நிலையில்தான் தேசிய இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் அரசாங்கத்துடன் இடம்பெற்று வருகின்ற பேச்சுவார்த்தை முஸ்லிம்களினது பங்களிப்பும் இன்றியமையாதது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறி வருகின்றது. முஸ்லிம்கள் தரப்பிலான இந்த வாதம் இதற்கு முன்னரும் முன்வைக்கப்பட்டே வந்தது. தமிழர் பிரச்சினை எனும் போது அது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையாகவே கருதப்படுகின்றது. இந்நிலையில் இதற்கான தீர்வே முஸ்லிம்கள் தரப்பையும் இணைத்துக் கொள்வதில் தவறு இருக்க முடியாது. எனினும் அந்த இணைப்புக்கான முஸ்தீபானது இதய சுத்தியுடையதாக அமைதல் அவசியமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்துவதால் அது தமிழ் மக்களுக்கு மாத்திரமானதாக அமைந்து விடும் என அச்சம் கொண்டுள்ள முஸ்லிம் தரப்பு தமது இனத்தின் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்கிறது. முஸ்லிம்கள் தரப்பிலும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் பங்கெடுத்துக் கொள்வது அவசியம் என முஸ்லிம் தரப்புகள் கருதுகின்றன.

அண்மையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவூத் மேற்கண்ட விடயம் சம்பந்தமாக தமது கட்சியின் சார்பிலான கருத்தினை வெளிப்படுத்தியிருந்தமை ஊடகங்கள் வாயிலாக வெளிவந்திருந்தன. அதேபோல் பசீர் சேகுதாவூத் எம்.பி. யின் மேற்படி கருத்தாடலுக்கு பதில் கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி. யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமது கட்சியின் சார்பில் சில கருத்துக்களையும் கூறியிருந்தார். அதாவது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்கும் இடையில் நெருங்கிய உறவு நீடித்து வருகின்ற நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் சில உறுப்பினர்கள் சிலர் விடயமறியாத வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொள்ளுமாறு ஊடகங்களுக்கு தெரிவித்து வருகின்ற முஸ்லிம் காங்கிரஸ் அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றும் கூறியிருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தமது சமூகமும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும் அதேநேரம் தமது சமூகத்தின் மீது முஸ்லிம் காங்கிரஸ் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது என்பதை வெளிக்காட்டிக் கொள்வதாக நடந்து கொள்ளுமாயின் அது தனது நியாயமான போக்குகளை கடைப்பிடிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தி முடித்திருக்கின்றது. இந்த பேச்சுவார்த்தை ஆரம்ப கட்டத்தில் இருந்த சந்தர்ப்பத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் தனது சமூகம் சார்ந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதனை விடுத்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்று முடிந்துள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கின்றது. இது உண்மையில் மக்கள் மீதான பாசத்தினாலா அல்லது அரசியல் ரீதியான ஒரு செயற்பாடா என்று எழுப்படுகின்ற கேள்வி நியாயமானதாகும்.



இந்நாட்டை பொறுத்தவரை முஸ்லிம் தரப்போ அல்லது தமிழ்த் தரப்போ எதுவானாலும் தமது சமூகம் சார்ந்த ஒரே நோக்கம் கொண்டவையாக இல்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். முஸ்லிம் மக்களை ஆட்சி செய்வதற்கென பல தரப்பட்ட முஸ்லிம் கட்சிகளும் தமிழ் மக்களை ஆட்சி செய்வதற்கென பல்வேறு தமிழ்க் கட்சிகளும் அரசியல் பலத்தில் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த இரு தரப்புமே தமது சமூகத்துக்காக உருப்படியான அல்லது ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை, நடவடக்கைகளை முன்னெடுத்திருக்கின்றனவா என்பது தான் விடை தெரியாத வினாக்களாகிப் போயுள்ளன. இங்கு சிங்கள கட்சிகள் குறித்து பேசுவது அர்த்தம் இருக்காது என்பதையும் கூறி வைக்க வேண்டும். ஏனெனில் அது எமது பிரச்சினையல்ல.

தமிழ் பேசுகின்ற மக்களாகிய தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்கள் ஓரணியில் திரண்டெழுந்து தமது கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தங்களை கொடுக்க முன்வரும் பட்சத்தில் இலக்குகளை அடைவது இலகுவானதாக அமைந்திவிடும் அதேநேரத்தில் அரசாங்கத்தினால் தப்பிச் செல்ல முடியாத ஒரு இக்கட்டான நிலைமையும் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. ஆனாலும்இந்த இருதரப்புக்களும் இணைந்து செயற்படுவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதில் தான் பிரச்சினையே தங்கியிருக்கின்றது. ஏனெனில் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருக்கின்ற முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைவது எவ்வாறு சாத்தியமானது இல்லையோ அதே போல் தான் தமிழ் மக்கள்மத்தியில் இருக்கின்ற தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் இணையப் போவதில்லை. இந்த இரு தரப்புக்குமே தனிப்பட்ட ரீதியில் பிளவுகள் பிரச்சினைகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் ஈகோ தன்மையிலான நிலைமைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இந்த அனைத்து கட்சிகளும் இணைந்த ஓரணி என்பது சாத்தியமாகாது என்பது திண்ணமாகும். இதனை அரசாங்கமோ நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றது. பேச்சுவார்த்தை மேசையில் பங்கு வேண்டுமென கூறுகின்ற முஸ்லிம் காங்கிரஸ் அதற்கான முன்னோடி நடவடிக்கைகளை உண்மைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மாறாக இடை நடுவில் புகுந்து ஏற்கத் தகாத கருத்துக்களை வெளியிடுவது முறையல்ல.

**உறவுக்காரன்**

நடைபெற்று முடிந்த யுத்தத்தில் தமிழ் மக்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும் பாரிய இழப்புக்களை சந்தித்திருக்கின்றனர் என்பது எவராலும் மறக்க முடியாத ஒன்றாகும். இது சகலராலும் உணரப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை இழுத்தடித்து வருகின்ற அரசாங்கத்துக்கு உறைக்கும் வகையில் சில விடயங்களை புகுத்த வேண்டுமானால் அனைத்து முஸ்லிம் தரப்புக்களும் அனைத்து தமிழ்த் தரப்புகளுக்கும பேதங்களை மறந்து ஓரணியில் திரள வேண்டும் என்பதே தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
*2011 ஜூன் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*
**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## மீண்டும் வருகிறது டெங்கு அவதானமாக இருப்போம்

கடந்த வருடம் இலங்கைக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய டெங்கு நோயின் தாக்கம் தற்போது மீண்டும் உணரப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2010 ஆம் ஆண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் மிக அதிகமாகவிருந்தது. இதன் காரணமாக கடந்த வருடம் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 246 க்கும் அதிகமானோர் மரணமடைந்ததுடன் 34,105 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில்தான் இவ் வருடமும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமையானது மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் தற்போது டெங்கு நோயின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகியிருப்பது நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் நல்லூர் பிரதேசத்தில் மாத்திரம் இந்த ஆண்டில் நான்கு பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளான 192 பேர் இனங்காணப்பட்டனர். இவர்களில் 4 பேர் உயிரிழந்தமையும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தின் நிலை இவ்வாறிருக்க நாட்டின் ஏனைய பகுதிகளிலும் டெங்கு நோய் மிக வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரை 6,100 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 60 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி பபா பலியவதன தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மாத்திரம் மே மாதத்தில் 222 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஒருவர் மரணித்துள்ளதாகவும் மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் 2011 ஜனவரி முதல் இதுவரை 905 பேர் டெங்கு நோய்க்கு ஆளாகியுள்ளதாகவும் இவர்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்தான் சுகாதார அமைச்சானது டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு ஜூன் மாதம் 20 திகதி முதல் 26 வரையான காலப்பகுதியை நுளம்பு தடுப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இக் காலப்பகுதியில் நுளம்பு பெருகுவதற்கு சாத்தியமுள்ள இடங்களை இனங்கண்டு அவற்றை சுத்தப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களை வேண்டியுள்ளார்.

இதன்போது குடியிருப்புகள், அரச தனியார் நிறுவனங்கள் என்பன பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளன. இப் பணியில் இராணுவத்தினரும் பொலிசாரும் சிவில் பாதுகாப்புப் பிரிவினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் இக் காலப்பகுதியில் விமானங்களைப் பயன்படுத்தியும் நுளம்பு பெருகும் பகுதிகளை இனங்காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு தன்னாலான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற அதே நேரம் இந் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பில் பொது மக்களின் ஒத்துழைப்பே அதிகம் அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தாம் வசிக்கும் குடியிருப்புகளையும் சுற்றயல் பிரதேசங்களையும் சுத்தமாக வைத்திருப்பதுடன் நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை முற்றாக இல்லாதொழிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது விடயத்தில் மக்கள் மிகவும் அக்கறையாக செயற்படுவதுடன் டெங்கு நுளம்புகள் பெருக வழிவகுப்பதன் மூலம் அநியாயமாக உயிர்களைப் பலிகொடுக்க காரணமாக இருந்துவிடக் கூடாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## அன்று தொடக்கம் இன்று வரை துரோகம் இழைக்கும் கருணாநிதி

**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி அன்று முதல் இன்றுவரை ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார் என்று சாரப்பட பழ. நெடுமாறனால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

5

### வரதராஜபெருமாளின் தவறுகளை சுட்டிக்காட்டிய பாலசிங்கம்

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையில் சரிபாதி இடங்களையும் நிர்வாகத்தில் சரிபாதி பங்கும் அளிக்க ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் தயாராக இருக்கிறது என்றும் அதை ஏற்று இருதரப்பினரும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்றும் முதல்வர் மு. கருணாநிதி வேண்டிக் கொண்டார்.

இந்திய அமைதிப்படையுடன் கூட்டு சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்த கொடிய குற்றங்கள் குறித்து பாலசிங்கம் விரிவாக எடுத்துக்கூறினார். வரதராஜப்பெருமாளின் நிர்வாகம் புரிந்த தவறான செயல்களின் விளைவாக ஈழத்தமிழர்கள் அதை வெறுத்து ஒதுக்குவதாகவும் பாலசிங்கம் எடுத்துரைத்தார். முறை தவறிய தேர்தல்கள் மூலம் அதிகாரத்திற்கு வந்த ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம், இந்திய அமைதிப் படையின் கைப்பாவையாக இயங்கியதையும் இந்திய இராணுவத்துடன் இணைந்து அட்டூழியங்கள் புரிந்ததின் விளைவாக புலிகளே அதிகாரத்திற்கு வர வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புவதையும் புதிய தேர்தல் நடத்தி அத்தேர்தலின் மூலம் அதிகாரத்திற்கு வர புலிகள் விரும்புவதாகவும் பாலசிங்கம் எடுத்துக் கூறினார். தமிழர் தாயகத்திற்கு புதிய தேர்தல்கள் - நடைபெற்றால். விடுதலைப்புலிகள் பெருவெற்றி பெறுவது திண்ணம் என்பதையும் அவர் எடுத்துக்கூறினார்.

### கருணாநிதியின் சூழ்ச்சிக்கு புலிகள் மறுப்பு

முதலமைச்சர் கருணாநிதியின் சூழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க பாலசிங்கம் மறுத்துவிட்டார். உண்மையில் பிரதமர் வி.பி.சிங் அளித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்காண அவர் முயற்சி செய்யவில்லை. புலிகள் மீது அவருக்கிருந்த வெறுப்பின் காரணமாக துரோகக் கும்பலுடன் இணைந்து அதிகாரத்தை புலிகள் ஏற்க வேண்டுமென அவர் வற்புறுத்தினார். இதை விடுதலைப்புலிகள் ஏற்க மறுத்ததின் விளைவாக அந்தப் பேச்சு வார்த்தையும் வெற்றிபெறவில்லை.

இலங்கையில் இருந்து இந்தியப்படை வெளியேறியபோது பிரபாகரனின் புகழும் உயர்ந்தது. ஒரு வல்லரசின் படையை இரண்டாண்டு காலத்திற்கு மேலாக எதிர்த்துப் போராடி இறுதியில் அந்தப் படையை வெற்றிகரமாக தனது மண்ணிலிருந்து வெளியேறச் செய்த பிரபாகரனின் அளப்பறிய சாதனையைக்கண்டுஉலகமே வியந்தது.

### தேர்தலில் தமக்காக வேலை செய்தாராம் பிரபாகரன் : கருணாநிதி விட்ட றீல்

காலமெல்லாம் பிரபாகரனின் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் காழ்ப்புணர்ச்சியை கொட்டி வந்த முதலமைச்சர் கருணாநிதி 1990 ஆம் ஆண்டின் இறுதியில் பிரபாகரனின் சாதனையைப் பாராட்டிப் பேசினார். அப்போது, 'யார் இந்த பிரபாகரன்?' 1971 தேர்தலில் நான் சைதைப் பகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டபோது எனக்காக இரவு பகலாக வேலை செய்த தம்பிதானே? என்று உரிமை கொண்டாடினார். அவரது இந்தப் பேச்சு முரசொலியிலும் வெளிவந்தது.

1991 ஆம் ஆண்டில் தம்பியின் அழைப்பை ஏற்று நான் தமிழீழம் சென்றபோது இந்த முரசொலி இதழையும் என்னுடன் எடுத்துச்சென்றேன். 21-2-91 அன்று [illegible] பியுடன் சாவகாசமாக இருந்த வேளையில் முரசொலியை அவரிடம் கொடுத்து அவர் கருத்தறிய விரும்பினேன். கருணாநிதியின் பேச்சை படித்துப் பார்த்துவிட்டுச் சிரித்தார். பிறகு பின்வருமாறு கூறினார்.

'உங்களுக்கோ வைகோ அண்ணாவுக்கோ கூட நான் தேர்தலில் வேலை செய்யவில்லை. தமிழகத் தேர்தல்களிலிருந்தும் அரசியலிலிருந்துமே எப்போதும் நாங்கள் விலகியிருக்கிறோம். ஒருபோதும் அதில் தலையிட்டது இல்லை' என்று கூறி மீண்டும் சிரித்தார்.

### காயமடைந்த புலிகளை சிகிச்சைக்கு அனுமதியளித்து கைது செய்த கருணாநிதி

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் சார்பிலும் அதன் அங்கம் வகித்த அமைப்[illegible]களின் சார்பிலும் ஈழத்தமிழர்களு[illegible] உதவ மருந்துகள் திரட்டப்பட்டன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றிய மருத்துவர்களும், மருத்துவக் கடைகளின் உரிமையாளர்களும் ஏராளமான மருந்துகளை வாரி வாரி வழங்கினார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட மருந்துகள் தமிழகத்திலிருந்து பத்திரமாக படகுகளின் மூலம் ஈழத்தமிழருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அதேவேளையில் தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதியை விடுதலைப்புலிகளின் தூதர்கள் சந்தித்து தமிழகத்தில் காயமடைந்த பே?ராளிகள் சிகிச்சை பெறவும், தேவையான மருந்துகளை வாங்கிச் செல்லவும் அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். அவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

ஆனால் அதை நம்பி தமிழகம் வந்து பல்வேறு தனியார் சிகிச்சை பெற்றுவந்த போராளிகளை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைத்தவரும் கருணாநிதியே ஆவார். அதைப்போல தமிழகத்தில் மருந்துகள் வாங்குவதற்காக புலிகள் கொண்டுவந்த பல லட்ச ரூபா பணத்தையும் பறிமுதல் செய்தவர் கருண்ணாநிதியே.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிராக பாபா ராம்தேவ் நாளை முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

## அன்னாவும் பங்கேற்பு; மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடி



**டில்லி:**

யோகி பாபா ராம்தேவ் நாளை தொடங்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தானும் பங்கேற்கப் போவதாக அன்னா ஹஸாரே அறிவித்துள்ளதால் மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடி அதிகரித்துள்ளது.

கறுப்புப் பணம் மற்றும் இலஞ்ச ஊழலுக்கு எதிராக அன்னா ஹஸாரேவும், ராம்தேவும் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். சமீபத்தில் அன்னா ஹஸாரே டில்லியில் இதற்காக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார். இதனால் நாடே பரபரப்பானது.

இந்த நிலையில் தற்போது நாளை 4 ஆம் திகதி முதல் ராம்லீலா மைதானத்தில் கறுப்புப் பண ஒழிப்பு, இலஞ்ச ஒழிப்பை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக ராம் தேவ் அறிவித்துள்ளார். இதனால் மத்திய அரசு பீதியடைந்துள்ளது.

ஆரம்பத்தில் பிரச்சினையை ஆறப் போட்டு அமைதியாக்கி விடலாம் என நினைத்தது மத்திய அரசு. ஆனால் ராம்தேவுக்கு நாடு முழுவதும் ஆதரவு அதிகரித்து வரு கி றது. இலட்சக்கணக்கானோர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக உள வுத் துறைக்கு தகவல் கிடைக்கவே மத்திய அரசு இப்போது உஷாராகி விட்டது.

ராம்தேவை சமாளிக்க, சமாதானப்படுத்த பிரணாப் முகர்ஜி தலைமையில் அமைச்சர்கள் குழுவையே பிரதமர் அமைத்துள்ளார். அவர்களும் நேற்றுமுன்தினம் ராம்தேவுடன் பேசிப் பார்த்தனர். ஆனால் தனது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை போராட்ட முடிவில் மாற்றம் இல்லை என்று கூறி விட்டார் ராம்தேவ்.

இந்த நிலையில் ராம்தேவின் போராட்டத்தில் தானும் பங்கேற்கப் போவதாக காந்தியவாதி அன்னா ஹஸாரே அறிவித்துள்ளார். இருவரும் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டால் அது நாட்டில் பெரும் புயலைக் கிளப்பும் என்பதால் மத்திய அரசு பெரும் கவலை அடைந்துள்ளது.

லோக்பால் மசோதா தொடர்பாக அன்னாவுக்கும், ராம்தேவுக்கும் இடையே பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. பிரதமர் உள்ளிட்டோரை இதில் சேர்க்க ராம்தேவ் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். ஆனால் பிரதமரையும் இதில் சேர்க்க வேண்டும் என்று அன்னா கூறி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் ராம்தேவின் போராட்ட நோக்கம் ஒன்றாக இருப்பதால் தானும் பங்கேற்கவுள்ளதாக அன்னா கூறியுள்ளார்.

# தொண்டர்களின் உயிரைக் காக்கவே தோடு அணிய ஆரம்பித்திருக்கிறேன்

## நிருபர்களுக்கு ஜெயா கூறும் சுவாரஸ்ய தகவல்



**சென்னை:**

கட்சித் தொண்டர்களின் உயிர்களை காப்பாற்றவே நான் நகை அணிந்து கொள்கிறேன் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

நேற்று முன்தினம் தன்னை சந்திக்க வந்திருந்த நிருபர்களில் ஒருவர், 'இத்தனை ஆண்டுகளாக நகைகளை அணியாமல் இருந்த நீங்கள், இப்போது திடீரென காதில் தோடு அணிந்திருக்கிறீர்களே... என்ன காரணம்?' என்று கேட்டதற்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 1997க்கு பின் நான் எந்தவிதமான நகைகளையும், ஆபரணங்களையும் அணிவதில்லை. இந்த முடிவை நான் எடுத்தது, தொண்டர்களுக்கு பிடிக்கவில்லை. பல ஆண்டுகளாக, பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னை தொண்டர்கள் சந்திக்கும் போதெல்லாம், என் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்நிலையில் 13 ஆம் திகதி தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற செய்தி வந்ததும், பலர் என் வீட்டிற்கு வந்து எனக்கு வாழ்த்து தெரிவித்தனர். அப்போதும் கட்சித் தொண்டர்கள், 'அம்மா... நீங்க இப்போதாவது எங்களுக்காக உங்க முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையெனில் உங்கள் வீட்டு வாசலிலேயே தீக்குளித்து விடுவோம்' என்று சொன்னார்கள்.

மகிழ்ச்சியான நேரத்தில், அசம்பாவிதம் ஏதும் நடந்துவிடக் கூடாதே என்பதற்காக, என் முடிவை மாற்றிக் கொண்டு அவர்களுக்காக நான் காதில் தோடு அணிய ஆரம்பித்தேன்' என்றார்.

# 2 ஜி விவகாரம்: தயாநிதிக்கு எதிராக பொதுநல வழக்கு



**புதுடில்லி:**

2 ஜி முறைகேட்டில் அப்போதைய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதி மாறன் பலன் அடைந்ததாகக் கூறி, பொதுநல வழக்கு உச்ச நீதிமன்றத்தில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுநல வழக்குக்கான மையம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அம் மனுவில், தயாநிதி மாறன் 2004 முதல் 2007ஆம் ஆண்டு வரை தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தார். அப்போது, சென்னையை சேர்ந்த நிறுவனத்துக்கு அனுமதி வழங்க தேவையில்லாமல் தாமதம் செய்தார்.

மேலும், பொருத்தமற்ற கேள்விகளை எழுப்பியதாகவும், தொலைத்தொடர்புத் துறையில் ஏர்செல் தாக்கல் செய்த 14 விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்காமல் இருந்ததாகவும் தெரிகிறது. ஏர்செல் நிறுவனம் சிவா குழுமத்துக்குச் சொந்தமானது. இதையடுத்து, அந்நிறுவன அதிபர் சிவசங்கரன் நிறுவனத்தை மலேசியாவைச் சேர்ந்த டி.ஆனந்தா என்பவரின் மாக்ஸ் குழுமத்துக்கு விற்றுவிட்டார். அதையடுத்து, மாக்ஸ் குழுமத்துக்கு 2006 இறுதியில் உரிமங்கள் தொலைத்தொடர்புத்துறை வழங்கியது.

மாக்ஸ் குழுமம், சன் குழுமத்தின் சன் நேரடி நிறுவனத்தில் ரூ.599 கோடி, மாறன் குழுமத்தின் தெற்காசிய எப்.எம். லிமிடெட் நிறுவனத்தில் ரூ.111 கோடியும் முதலீடு செய்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தன்னைக் காதலித்து ஏமாற்றியதாக நடிகை விஜயலட்சுமி சீமான் மீது புகார்

## இலங்கைப் பெண்ணையே மணக்கப்போவதாக தகவல்





**சென்னை:**

காதலித்து திருமணம் செய்வதாக ஏமாற்றிவிட்டதாக நடிகை விஜயலட்சுமி கொடுத்த புகாருக்கு நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் மறுப்பு தெரிவித்துள்ளார்.

"அரசியலில் எனக்குள்ள புகழை கெடுப்பதற்காக திட்டமிட்டு சதி செய்து இந்த பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலையில், பொலிஸ் ஆணையாளர் திரிபாதியை சந்தித்த நடிகை விஜயலட்சுமி, பரபரப்பான புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதில், 'நாம் தமிழர்' கட்சி தலைவர் சீமான் தன்னை 3 ஆண்டுகளாக காதலித்ததாகவும், திருமணம் செய்வதாக சொல்லி, நெருங்கி பழகியதாகவும் தற்போது தன்னை திருமணம் செய்ய மறுப்பதாகவும் இது தொடர்பாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**சீமான் தரப்பில் மறுப்பு**

இந்நிலையில் இந்த புகார் தொடர்பாக, கருத்து தெரிவித்த சீமானின் வழக்கறிஞர் சந்திரசேகரன்,

விஜய லட்சுமி, அவரது அக்காள் விவாகரத்து வழக்கு தொடர்பாக உதவி கேட்டு, சீமானை ஒருமுறை சந்தித்து பேசினார். அது தொடர்பாக உதவி செய்யும்படி, சீமான் என்னிடமும் கூறினார்.

அந்த ஒருமுறை மட்டுமே விஜயலட்சுமி சீமானை சந்தித்து பேசினார். அதன் பிறகு, அவர் சீமானை பார்க்கவே இல்லை.

மேலும் சீமான், இலங்கை போரில் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் பெண் ஒருவரை விரைவில் திருமணம் செய்யவுள்ளார். அவரது பெற்றோரும் இதற்கு சம்மதம் தெரிவித்து விட்டனர். எனவே இதை கெடுக்கவும், அரசியலில் சீமானுக்கு உள்ள புகழை அழிக்கவும், திட்டமிட்டு சதி செய்து இதுபோன்ற தவறான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளது. புகார் கொடுத்தது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை சீமான் சட்டபூர்வமாக சந்திப்பார் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வாக்...(தொடர்ச்சி)

வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கமைவாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு நடைபெறவுள்ள 19 உள்ளூராட்சி சபைகளுக்குமான வாக்களிப்பு திருத்தியமைக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் படி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் தேர்தல் தொகுதிவாரியாக வாக்களிக்கத் தகுதி பெற்றோர் விபரம் வருமாறு:-ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி - 21 ஆயிரத்து 459 பேர், வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதி - 44 ஆயிரத்து 916 பேர், காங்கேசன்துறை தேர்தல் தொகுதி - 67 ஆயிரத்து 898 பேர், மானிப்பாய் தேர்தல் தொகுதி - 49 ஆயிரத்து 280 பேர், கோப்பாய் தேர்தல் தொகுதி - 50 ஆயிரத்து 653 பேர், உடுப்பிட்டி தேர்தல் தொகுதி - 37 ஆயிரத்து 329 பேர், பருத்தித்துறை தேர்தல் தொகுதி - 33 ஆயிரத்து 511 பேர், சாவகச்சேரி தேர்தல் தொகுதி - 48 ஆயிரத்து 2 பேர், நல்லூர் தேர்தல் தொகுதி - 40 ஆயிரத்து 938 பேர், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி - 30 ஆயிரத்து 308 பேர் .

கிளிநொச்சியில் 90 ஆயிரத்து 334 ஆக இருந்த வாக்காளர் தொகையில் தற்போது கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலை...(தொடர்ச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கான பொறியியல் பீடம் உருவாக்கம் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை பீடம் ஒன்றை அமைப்பது தொடர்பான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதனை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் இரண்டு கட்டங்களாக உதவிகளை வழங்கவுள்ளது. முதற்கட்டமாக இந்தியா 250 ரூபாவை வழங்கவுள்ளது. அந்த வகையில் நாங்கள் அதனைக் கொண்டு நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்போம்.

மேலும் இரண்டாம் கட்டமாகவும் இந்தியா 250 மில்லியன் ரூபாவை பொறியியல் பீடத்தை அமைப்பதற்கான உதவியாக வழங்கவுள்ளது. அத்துடன் இலங்கை அரசாங்கமும் 250 மில்லியன் ரூபாவை இதற்காக ஒதுக்கியுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கான பொறியியல் பீடம் விரைவில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும். இதற்கான காணியை அடையாளம் காணும் பணிகளும் இடம் பெற்றுவிட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுவருகின்றது. எனவே அதனை நிறைவேற்றி வைப்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார்.

## சிறுமியை...(தொடர்ச்சி)

லண்டனில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வந்த 47 வயதான கௌரிதரன் மார்க்கண்டு என்பவரே இவ்வாறு பாலியல் குற்றம் புரிந்தவராவார். குறித்த வர்த்தக நிலையத்திற்கு பால் வாங்குவதற்காக கடைக்கு வந்த சிறுமி மீதே இவர் அங்க சேட்டை புரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தான் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதை உணர்ந்த சிறுமி தனது கையடக்கத் தொலைபேசி மூலம் தாயாருடன் தொடர்பு கொள்வதற்கு முயன்றுள்ளார். இதன் போது சிறுமியின் கையடக்கத் தொலைபேசியை மார்க்கண்டு செயலிழக்கச் செய்துள்ளார்.

இதேவேளை, சிறுமியின் நல்ல நேரமாக வர்த்தக நிலையத்துக்கு வேறொரு நபர் வந்ததனால் மார்க்கண்டு அங்க சேட்டையை நிறுத்தியுள்ளார். உடனே கடையில் நடந்தவற்றை சிறுமி தொலைபேசி மூலமாக தாயிடம் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து தாய் பொலிஸில் முறையிட்டார்.

பொலிஸ் விரைந்து வந்து மார்க்கண்டை கைது செய்தனர். பின் நீதிமன்றில் நிறுத்தப்பட்ட மார்க்கண்டு தன்மீதான குற்றச்சாட்டை முதலில் நிராகரித்தார். மரபணு பரிசோதனை மூலம் இவர் குற்றம் புரிந்தமை நிரூபிக்கப்பட்டதன் பின்னர் அவர் குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதனையடுத்தே நீதிமன்றம் இவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

தண்டனைக் காலம் முடிந்தவுடன் இவர் நாடு கடத்தப்பட வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. மார்க்கண்டு இலங்கையில் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.

## அரசின்...(தொடர்ச்சி)

சக்திகள் முயற்சிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதி நவீன யுத்த உபகரணங்கள் இன்றி இலங்கை போன்ற சிறிய நாடொன்று சிறிய ரக ஆயுதங்களை பயன்படுத்தி இராணுவ பலத்துடன் உலகில் குரூரமான பயங்கரவாதத்தை துடைத்தெறிந்தமையை பொறுத்துக்கொள்ள முடியாத சில வெளிநாட்டு சக்திகள் இலங்கையின் இந்த வெற்றியை குறைத்து மதிப்பிட முயற்சிக்கின்றன என்றும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

சமாதான பேச்சுவார்த்தை முயற்சியில் பங்கெடுத்தவர்கள் உட்பட சில வெளிநாட்டு சக்திகள் தோற்கடிக்க முடியாது என்று அடிக்கடி கூறி வந்த யுத்தத்தை மனிதாபிமான செயற்பாட்டின் ஊடாக அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்து இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 75 ஆயிரம் மக்களை மீள்குடியேற்றியுள்ளது.

1980 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை காரணமாக சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் உள்ளக ரீதியில் இடப்பெயர்வுக்கு உள்ளாகினர். 2006 ஆம் ஆண்டில் புலிகள் முகமாலை பிரதேசத்தில் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்ததுடன் வடக்கு மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெறும் 5000த்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களும் செயலிழந்தன.

அன்றிலிருந்து வடக்கு மக்களுக்கு அரசாங்கத்தின் கட்டமைப்பின் ஊடாகவே உணவு விநியோகிக்கப்பட்டுவந்தது என்பதை தற்போது அரசாங்கத்தின் கொள்கையை விமர்சிக்கும் சக்திகள் மறந்துவிட்டன.

அரசாங்கத்தின் மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மக்களுக்குத் தேவையான உணவு விநியோகம் மற்றும் ஏனைய வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் என்பன நேரடி உதவிகளையும் அனுசரணைகளையும் வழங்கின.

யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்ததுடன் வடக்கு மக்களுக்கான அத்தியாவசிய பொருள் விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் 5000 மெட்ரிக் தொன் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் வகையில் உலக உணவுத்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் வவுனியாவில் களஞ்சிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் சக்திகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 75 ஆயிரம் பேரை மீள்குடியேற்றியமை தொடர்பில் மௌனமாக உள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேகக்...(தொடர்ச்சி)

விளையாட்டரங்கின் பாதுகாப்பு வேலியையும் கம்பத்தையும் இடித்து தள்ளியுள்ளது.

அண்மைக் காலமாக இப் பிரதான வீதியால் செல்லும் வாகனங்கள் பல வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு...(தொடர்ச்சி)

புகையிரத நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பின் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தின் தனியார் உத்தேச ஓய்வூதிய சட்ட மூலத்திற்கு எதிராக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமானது ஆயுதத்தால் அடக்கப்பட்டுள்ளது.

இதைதான் 1983 ஆம் ஆண்டு வெலிகடை சிறையில் அடைக்கப்பட்டிருந்த குட்டிமணி போன்றவர்கள் கூறியிருந்தார்கள் என்பதை தெற்கு உணரும் காலம் வந்துள்ளது.

எந்த அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்தாலும் தங்களுடைய நலன் கருதி தங்களுக்கு எதிரானவர்கள் மீது இராணுவம் மற்றும் பொலிசாரை கொண்டு தாக்குதல் நடத்தி அடக்கப்படுவதையும் தெற்கு இன்று உணர்ந்து கொண்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட மாற்றம் இங்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் தொழிலாளர் வர்க்கம் மாற்றத்தை நோக்கி செல்வதற்கான ஆயத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றுபட்ட மக்கள் சக்தியால் எதனையும் சாதிக்க முடியும் அதற்காகவே நாம் இன்று ஒன்று கூடி இவ் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்கிறோம் என்றார்.

ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்ன பிரிய இது தொடர்பில் கருத்து தெரிவித்த போது,

தனியார் துறையினர் எதிர்க்கின்ற அவர்கள் விரும்பாத ஒரு திட்டத்தினை அரசாங்கம் ஏன் பலவந்தமாக திணிக்க முற்படுகின்றது என்பதில் எமக்கு சந்தேகமாக உள்ளது.

தனியார் துறையினரின் ஓய்வூதியத்தை சூறையாடும் அரசாங்கத்தின் இந்த திட்டத்தை நாம் முழுமையாக எதிர்ப்பதுடன் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீதான தாக்குதலையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசாங்கத்தின் இவ்வாறான அராஜக செயற்பாடுகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நாம் ஒன்றிணைந்து நடத்தவுள்ளோம். அதன் முதல் கட்டமாக நாளை பிற்பகல் 3 மணிக்கு கட்டுநாயக்காவில் ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்களையும் கொஞ்சம் கவனியுங்கள்...

முக ஒப்பனை செய்து கொள்வது எப்படி? தலை அலங்காரத்தை எந்த ஸ்டைலில் மாற்றிக்கொள்ளலாம்? கண்கள், கைகளை பாதுகாப்பது எப்படி என்பதை பற்றி எல்லாம் மிகுந்த ஆர்வத்துடன் தெரிந்து கொள்ளும் பெண்கள் ஏனோ, கால் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை என்பதுடன் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதும் இல்லை.

'கால்கள் வேதனைப்பட்டால் உடல் முழுவதும் வேதனைப்படும்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. இதில் பெண்களுக்கு அப்படி என்ன தனியாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். பெண்களது கால்கள், ஆண்களின் கால்களை விட நான்கு மடங்கு அதிகம் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. குதியுயர்ந்த செருப்புக்களை அணிவதாலும் நின்றபடி சமைக்கும் சமையல் அறைகளும், நடையை குறைத்துக்கொண்ட வாழ்க்கைமுறைகளுமே இதற்குக் காரணமாகின்றது.

எனவே, பெண்கள் தமது கால்களின் பராமரிப்பிற்கென்று அதிக கவனம் எடுத்துக்கொள்வது என்பது மிக மிக அவசியமாகிறது. அழகிய பாதங்கள் அனைவருடைய கவனத்தையும் கவரும் அளவிற்கு சிறப்பைப் பெற்றிருக்கின்றன. பாதப் பராமரிப்பில் முக்கிய இடத்தை வகிப்பது அவரவர் பயன்படுத்தும் செருப்புக்கள் தான்.

அண்மைக்காலமாக பெரும்பாலான பெண்கள் நாகரிக செருப்புக்களை தாங்கள் உடுத்தியிருக்கும் உடைகளின் வண்ணங்களிலேயே அணிவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.



நீங்களும் அவ்வாறே என்றால் நீங்கள் தேர்ந்தெடுக்கும் செருப்புக்களை மிகுந்த கவனமுடன் தேர்ந்தெடுங்கள். இவை கால் விரல்கள் கோர்த்த நிலையில் இருப்பதற்குப் போதுமான இடத்தைக் கொண்டுள்ளனவா என்றும், இவற்றைக் காலில் அணிந்து கொண்டு நடக்கும்போது எந்த சிரமமும் இல்லாதவாறு இருக்கின்றனவா என்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள். குதிக்காலுக்கும், ஆர்ச் போன்ற வளைவைப் பெற்றிருக்கும் கால்களின் மையப் பகுதிக்கும் சரியான பக்கவலுவையும் சமநிலையையும் நீங்கள் வாங்கப்போகும் காலணிகளே வழங்கப்போகின்றன. பாதங்களில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கோளாறுகள் ஏதேனும் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.


- ✱ மிகுந்த அழுத்தத்தினால் ஏற்படும் கால் ஆணி, கால் காய்ப்பு.
- ✱ பங்கசுத் தொற்றினால் ஏற்படும் பழுப்பு நிறப் புள்ளிகள்.
- ✱ பங்கசு, காளான் வகை நுண்மத் தொற்றாலும், ஈரமான காலுறை மற்றும் செருப்புக்களால் ஏற்படும் பித்தவெடிப்பு.
- ✱ கால் விரல்களில் குறிப்பாக கட்டை விரலில் நகம் வளர்ந்து, மடங்கி, உள் தசைக்குள் சென்றுவிடுவதால் ஏற்படும் பாதிப்பு.

சரியான செருப்புக்களை உபயோகிக்காத காரணத்தால் மூட்டுக்கள் வீக்கமடைக்கின்றன. இது பரம்பரை காரணமாக ஏற்பட்டாலும் சரியான செருப்புகள் அணிவதன் மூலம் சீர் செய்ய இயலும்.

சருமத்தை மென்மையாக்க உதவும் ஒலிவ் எண்ணெய், கால் மற்றும் பாதங்களுக்கும் சிறந்த நன்மையளிக்கின்றது. கோடை காலங்களில் செருப்புக்களின் உட்புறம் சிறிதளவு பவுடரைத் தூவினால் கால்கள் மெத்தென்ற உணர்வுடன் இருக்கும்.

(தொடரும்)

# அன்னாசிப்பழ புடிங்



சுட்டெரிக்கும் வெயிலில், நம்முடைய உடலுக்கு குளிர்ச்சி தேவைப்படுகிறது. மனமும் அதையே நாடுகிறது.

ஜில்னு ஒரு 'பைன் அப்பிள் புடிங்' செய்து சாப்பிட்டீங்கன்னா மனசுக்கு இதமா இருக்கும். நாக்கின் வறட்சி நீங்கும். உடலில் புதுத் தெம்பும் பிறக்கும்.

**தேவையான பொருட்கள் :**

அன்னாசிப்பழம் - 1
கஸ்ராட் பவுடர் - 2 மேசைக்கரண்டி
பால் பவுடர் - 7 மேசைக்கரண்டி
சீனி - 7 மேசைக்கரண்டி
பொடித்த கஜு + பிளம்ஸ் - 1/4 கப்
அன்னாசி எஸன்ஸ் - 1/2 மேசைக்கரண்டி

**செய்முறை :**

✱ அன்னாசிப்பழத்தை தோல் சீவி மிகவும் சிறு துண்டுகளாக வெட்டவும்.

✱ கஸ்ராட் பவுடரினுள் 5 மேசைக்கரண்டி தண்ணீர் விட்டு கட்டி இல்லாமல் கரைக்கவும்.

✱ அதனுள் சீனியை சேர்த்து மிக்ஸியில் போட்டு நன்கு அடிக்கவும்.

✱ அதனுள் சிறிது சிறிதாக பால் பவுடரையும் சேர்த்து அடிக்கவும்.

✱ பின்னர் இக்கலவையை ஒரு பாத்திரத்தில் ஊற்றி பொடித்த கஜு, பிளம்ஸ், அன்னாசி எஸன்ஸ் போட்டு கலக்கவும்.

✱ பின்னர் இக் கலவையில் சிறிதை ஒரு உருண்டையான கிண்ணத்தில் ஊற்றி அதன் மேல் அன்னாசி துண்டுகளைப் போடவும். இவ்வாறு மாறி மாறி ஊற்றவும்.

✱ பின்னர் இதனை ஆவியில் வைத்து அவித்தெடுக்கவும். (அல்லது 10 நிமிடங்கள் மைக்ரோ அவனில் பேக் செய்யவும்)

✱ சுவையான அன்னாசிப் புடிங் தயார். இதனை குளிரவைத்து துண்டுகளாக்கி பரிமாறவும்.

**குறிப்பு :**

அன்னாசிப்பழத்திற்குப் பதிலாக ஆப்பிள், மாம்பழம், ஸ்ட்ரோபெரி. வாழைப்பழம் என ஏனைய பழங்களும் அதற்கு ஏற்றவாறு பழ எஸன்ஸும் சேர்க்கலாம். அசைவம் உண்பவர்கள் கஸ்டர்ட் பவுடருக்குப் பதிலாக ஒரு முட்டையும் சேர்க்கலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி உலகில் பெண்களை மேம்படுத்திவரும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

**யாழ்.** மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுவரும் பெண்கள் பாடசாலைகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்கது. இக் கல்லூரி 1943 ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப அதிபராக யாழ். இந்துக் கல்லூரி அதிபரான யூ. குமாரசாமியே இக் கல்லூரிக்கும் அதிபராக விளங்கினார்.

இக் கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க, கல்லூரி மைதானத்திற்கு அருகில் உள்ள பெரியார் சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் 'பொன்னாலயம்' என்ற வீட்டில் இயங்க ஆரம்பித்தது. அன்றிலிருந்து காயத்திரி கணேசன் அதிபராக நியமிக்கப்பட்டார்.

மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க 1945 ஆம் ஆண்டு தார்மீக வள்ளலான விசாலாட்சி சிவகுருநாதர் தம்பதிகளால் வழங்கப்பட்ட 40 பரப்பு காணியில் தற்போதைய இடத்திற்கு பாடசாலை இடம்மாறியது. அன்று கல்லூரி முகாமையாளரான சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்களால் கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கல்லூரி திறப்புவிழா நடைபெற்றது. மேலும், இந்துக் கல்லூரி சபையினால் காணி கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரி வளாகம் 114 பரப்பாக விஸ்தரிக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டு 8 ஆசிரியர்களுடனும் 4ஆம் வகுப்பில் இருந்து 8 ஆம் வகுப்பு வரையான 110 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தற்போது 85 ஆசிரியர்களையும் 2 ஆயிரத்து 063 மாணவர்களையும் கொண்டிருப்பதுடன் தரம்-6 தொடக்கம் தரம்-13 வரையிலான இருமொழி மூல வகுப்புக்களைக் கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.

அதிபரான யூ. குமாரசாமி அவர்களைத் தொடர்ந்துவந்த அதிபர்களான திருமதி. காயத்திரி கணேசன், செல்வி. முத்து அச்சையா, திருமதி. கிளாரா மொட்வாணி, திருமதி. சரோஜினி, செல்வி. விமலா ஆறுமுகம், செல்வி. பத்மாவதி இராமநாதன், திருமதி. திவ்வியசிரோன்மணி நாகராஜா, திருமதி. சரஸ்வதி ஜெயராஜா ஆகிய அதிபர்கள் கல்லூரியை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

2006 ஜனவரி மாதம் கல்லூரியைப் பொறுப்பேற்ற தற்போதய அதிபர் திருமதி. வேதநாயகி பேரின்பநாதன் கடந்த 5 வருடங்களிலும் கல்லூரியின் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்.

கடந்த 2010ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 95 வீதமான மாணவர்கள் உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் 63 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றனர்.

இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். குறிப்பாக, உள்ளக விளையாட்டுக்களிலும் மைதான பெரு விளையாட்டுக்களிலும் சாதனைகள் படைப்பதில் முன்னேறிச் சென்றுகொண்டு இருக்கின்றார்கள்.

**கல்லூரியின் சாதனைகள் :**

பின்வரும் அணிகள் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் படைத்துள்ளன.

*சதுரங்கம்: (19 வயது அணி)*
*கரம்: (15 வயது அணி)*
*கரம்:(19 வயது அணி)*
*மேசைப்பந்து: (15 வயது அணி)*
*மேசைப்பந்து: (19 வயது அணி)*
*பூப்பந்து: (19 வயது அணி)*

*15 வயதுப் பிரிவில் 100 M ஓட்டத்திலும், முப்பாய்ச்சலிலும் 19 வயதுப் பிரிவில் 100 M* தடைதாண்டல், உயரம் பாய்தல் என்பவற்றிலும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முறையே செல்வி. ச. பானுஜா, செல்வி. உ. சோபினி ஆகியோர் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்த் தினப் போட்டி - 2010 இல் செல்வி. தி. வருணியா தனி இசை பிரிவு-3இல் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தினையும் குழு இசை பிரிவு-2 இல் கல்லூரி மாணவிகள் பங்குபற்றி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தினையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மாகாண மட்டங்களில் நடத்தப்பட்ட சர்வதேச அஞ்சல் தினம், சர்வதேச ஒலிம்பிக் விழா, அகில இலங்கை சிறுவர் சித்திரப்போட்டி, போதைப்பொருள் தடுப்பு ஆக்கத்திறன் போட்டி, புற்றுநோய் கருத்தோவியப் போட்டி போன்ற போட்டிகளில் பங்குபற்றி கல்லூரி மாணவிகள் பெறுமதி மிக்க சான்றிதழ்களையும், பணப்பரிசில்களையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லூரியின் மகுட வாசகமான என்பதற்கிணங்க தனது தூர நோக்கான கல்வி, படைப்பாற்றல், உடல் - உள, ஆன்மிக, மேம்பாட்டினூடாக எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மகளிரை உருவாக்கும் ஒரு உன்னத இடமாக கல்லூரி மிளிர்வதற்கான பணிக்கூற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.

வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவிகளினதும் கொழும்பு பழைய மாணவிகளினதும் பெற்றோரினினதும் கல்வித்திணைக்களத்தினதும் அனுசரணையுடன் பௌதீக வளங்களை ஓரளவு பெற்றுவருகின்றது. கல்லூரி பழைய வகுப்பறைக் கட்டிடங்களைக் கொண்டிருந்த போதும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. மேலும், கணனியூடான வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்வதற்கான திட்டமிடலின் ஆரம்பச் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது. எல்லா வகுப்பறைகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் முழுமைபெறத் தொடர்ந்தும் முயற்சித்துவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி கல்லூரி இன்று சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று மாகாண மட்டம், தேசிய மட்டம் நடத்தும் போட்டிகளில் அதிக பெறுபேறுகளை வருடாவருடம் பெற்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் ஆகியன இக் கல்லூரி வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி வருவது பாராட்டத்தக்கது.

வருடாவருடம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இடப்பற்றாக்குறை தளபாடத் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இக் கல்லூரி இருந்து வருகின்றது.

கலைச்சுடர்
எஸ். இராமச்சந்திரா

கல்லூரி அதிபர் திருமதி வே. பேரின்பநாதனின் ஆளுமை மிக்க நிர்வாகத் திறமையும் மற்றும் பிரதி அதிபர், கல்லூரி ஆசிரியர்கள், கல்வி சார் ஊழியர்கள் ஆகியோர்கள் கல்லூரி வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றார்கள் என்பது குறிப்பித்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## நீல் ஹென்ட்ரிக் ஏபல்



நோர்வே அரசாங்கத்தால் சிறந்த கணித மேதைகளுக்கு வழங்கப்படும் பரிசு 'ஏபல் பரிசு' ஆகும். முதல் பரிசை 2003ஆம் ஆண்டு வழங்கியது. உலகம் முழுவதும் உள்ள கணித மேதைகள் இந்த போட்டியில் கலந்துகொள்ளலாம். இது நோபல் பரிசுக்கு நிகரான பரிசாகக் கருதப்படுகின்றது. பொதுவாக, நோபல் பரிசு அறிவியல் துறைக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. நோர்வே நாட்டில் வாழ்ந்த சிறந்த கணிதமேதை 'நீல் ஹென்ட்ரிக் ஏபல்' என்பவரின் நினைவாக இப்பரிசு வழங்கப்படுகின்றது. இவர் 1929இல் தன் 26ஆவது வயதிலேயே மரணமடைந்தார்.

## காதை வெட்டு

சந்திரகிரி அரசர் சந்திரன் அரியணையில் வீற்றிருந்தார். அமைச்சர்களைப் பார்த்து அவர், ''ஒருவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகப் புறம்பேசுவது கெட்ட பழக்கம். இந்தப் பழக்கம் நிறையப் பேரிடம் உள்ளது. அவர்களுக்கு என்ன தண்டணை தரலாம்? சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர் ஒருவர், ''கோள் சொல்பவர்கள் கொடியவர்கள். ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றி குறைசொல்வது எல்லோரும் இயல்பாகச் செய்வது. அதை அப்படியே எடுத்துச்சென்று அவரிடம் சொல்வது கெட்ட பழக்கம். இதனால், குறைசொன்னவரும் சொல்லப்பட்டவரும் சண்டை போட்டுக்கொள்கின்றார்கள். பகைவர்கள் ஆகின்றனர். கோள் சொல்பவர்களால் குழப்பம் ஏற்படுகிறது. இவர்களுக்குக் கொடிய தண்டனை வழங்கவேண்டும்.'' என்றார்.

''கடுமையான தண்டனை தந்தால்தான் கோள் சொல்பவர்கள் திருந்துவர். நாடும் வளம் பெறும்'' என்றார் இன்னொரு அமைச்சர்.

''கோள் சொல்பவனின் நாவை அறுத்து ஊமையாக்கி விட வேண்டும். இதைப் பார்க்கும் பிறரும் கோள் சொல்ல அஞ்சுவர்'' என்றார் மற்றொரு அமைச்சர்.

அமைதியாக இருந்த முதலமைச்சரைப் பார்த்தார் அரசர், ''கோள் சொல்பவனுக்கு என்ன தண்டனை தரலாம்? நீங்கள் சொல்லுங்கள்?'' என்று அவரைக் கேட்டார்.

''அரசே! ஒரு குற்றம் நடப்பதற்கு யார் தூண்டுகிறாரோ அவரும் குற்றவாளி தான். ஆர்வத்துடன் கேட்பவர் இல்லாவிட்டால் யாரும் சொல்லமாட்டார்கள். அதனால் கோள் மொழியைக் கேட்பவர்கள் காதுகளையும் அறுத்துவிட வேண்டும்'' என்றார் முதலமைச்சர்.

அப்படியே சட்டம் இயற்றப்பட்டது. கோள் சொன்னால் நாக்கு போய்விடுமே என்று கோள் சொல்பவர்களும், கோள் சொல்வதைக் கேட்டால் காது போய்விடுமே என கோள் கேட்பவர்களும் பயந்துபோய் ஓடினர். அதனால், இந்தக் கெட்ட பழக்கமே அந்த நாட்டை விட்டு அகன்றது

## 2011 October

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

"1-1-11, 11-1-11, 1-11-11, 11-11-11 இந்த நான்கு வித்தியாசமான நாட்கள் இந்த வருடத்தின் சிறப்பு. இன்னொரு சிறப்பு, நீங்கள் பிறந்த வருடத்தின் கடைசி இரண்டு இலக்கங்களோடு தற்போது உங்களின் வயதைக் கூட்டினால் அதன் கூட்டுத்தொகை 111 ஆக இருக்கும்! இந்த வருடத்தின் அக்டோபர் மாதத்தில் தான் 5 சனிக்கிழமைகள், 5 ஞாயிற்றுக் கிழமைகள், 5 திங்கட்கிழமைகள் வருகின்றன. இப்படி 823 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் வரும்! எல்லாரிடமும் இந்தாண்டு பணப்புழக்கமும் அதிகம் இருக்கும்.

## பொன்மொழிகள்

-) உங்களுக்கு உதவக்கூடிய கரங்கள் வேறெங்குமில்லை. அவை உங்கள் தோள்களின் மீது தான் இருக்கின்றன - லிடர்மென்

-) அனுபவங்கள் எல்லோருக்கும் தான் ஏற்படுகின்றன. ஆனால், அந்த அனுபவங்களால் ஏற்பட்ட படிப்பினையை மறக்காது இருப்பவரே முன்னேற்றம் அடைகின்றார் - ஆல்டல் ஆக்ஸ்லி

-) சிறந்த செயல்களே சிறந்த வழிபாடு - குருநானக்

-) உயிருள்ளவரை உழைத்துவாழ விரும்புகிறேன். உழைக்க உழைக்க எனக்கு உயிர்வாழும் விருப்பம் அதிகமாகிறது - ஜோர்ஜ் பெர்னாட்ஷா

-) நாம் செய்யும் வேலை என்பது பிரார்த்தனைக்குரியது. நாம் எவ்வாறு முழுமனத்துடன் பிரார்த்திக்கிறோமோ, அதேபோன்று வேலையிலும் ஈடுபடல் வேண்டும் - தோமஸ் அல்வா எடிசன்

நேசராஜ்குமார் வித்தியாசாகர்
தரம் 7C
கிளி/கிளிநொச்சி ம.வி



செ.இலக்கியா
தரம் 6
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணுமின் நிலையங்களை அதிகரிக்கும் சீனா

## ஆபத்தில் முடியும் என எச்சரிக்கை

அணுமின் நிலையங்களை அதிகரிக்கும் சீனாவின் அதிவேக போக்கு ஆபத்தில்தான் முடியும் என, அந்நாட்டைச் சேர்ந்த இயற்பியல் பேராசிரியர் ஹீ ஷூவோஷியூ, கவலை தெரிவித்துள்ளார்.

அவரது இந்த அறிக்கை, சீன அணுசக்தி வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் புக்குஷிமா டாய்ச்சி அணுமின் நிலையத்தை சுனாமி தாக்கிய பின், அங்கு ஏற்பட்ட கதிர்வீச்சு அபாயத்திற்குப் பின், உலகளவில், அணுமின் நிலையங்களை புதிதாக அமைக்கும் திட்டங்களை, பல நாடுகள் கைவிட்டுள்ளன. 2022க்குள் தங்கள் நாட்டிலுள்ள அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடிவிடப் போவதாக ஜெர்மனி அறிவித்துள்ளது. இந்நிலையில், தங்கள் நாட்டிலுள்ள 13 அணுமின் நிலையங்களை, 2020ஆம் ஆண்டுக்குள் 50 அணுமின் நிலையங்களாக அதிகரிக்கவும், இந்தத் திட்டத்தை 540 லட்சம் கோடி ரூபாய் செலவில், நிறைவேற்றவும் சீனா திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது.

# அரிதான தீ நீர் வீழ்ச்சி



அமெரிக்காவில் கலிபோர் னியா நகரத்தில் தீ நீர்வீழ்ச்சி உள்ளது.

இங்குள்ள தீ நீர் வீழ்ச்சி மற் றும் பழைமையான பைன் மரங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்த வையாகும்.

இந்த நீர் வீழ்ச்சி சூரிய வெப் பத்தினால் உருவாகிறது. பெப்ரவரி மாதத்தின் கடைசி இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கும் கால நிலைகளுக்கு ஏற்ப சில நேரங்களில் மட்டும் அரிதாகத்தான் இந்த தீ நீர் வீழ்ச்சி வரும் என்று தகவ ல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அண்மையில் சுழல் காற்றால் கடுமையாக பாதிக்கப்பட்ட மிஸோரி நகருக்கு விஜயம் செய்த போது அங்கு சிரமதான பணிகளை மேற்கொள்ளும் ஒரு இளைஞனின் ரி சேர்ட்டில் தனது கையெழுத்தை இடுவதை படத்தில் காணலாம்.

# தீவிரவாதிகள் - பாதுகாப்பு படையினர் கடும் மோதல்

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் 200க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஊடுருவ முயன்றதனையடுத்து பாகிஸ்தான் பாதுகாப்பு படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் 25 பாதுகாப்பு படையினர் பலியாயினர்.

இந்நிலையில் இருபிரிவினருக்கும் ஏற்பட்ட கடும் சண்டை காரணமாக அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

# ஜப்பான் பிரதமரை பதவி விலகுமாறு நெருக்கடி

ஜப்பான் பிரதமர் நேட்டோ கான் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று பல்வேறு தரப்பில் இருந்து நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. நேட்டோ கான் கடந்த ஆண்டுதான் பிரதமராகப் பதவியேற்றார்.

இந்நிலையில் அணு உலைகள் அமைந்துள்ள இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் கட்டுவதில் தாமதம், அப்புறப்படுத்தும் தகவல் தொடர்பாக வெளிப்படைத் தன்மை இல்லாதது உள்ளிட்ட நிர்வாகத் திறமையின்மை காரணமாக நேட்டோ கான் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு நெருக்கடிகள் எழுந்துள்ளன.

# இரு வீதிகளுக்கிடையில் அபூர்வமாக தெரிந்த சூரிய உதயமும் அஸ்தமனமும்




இயற்கை அழகு மிகுந்த விடயங்களில் எல்லோரையும் கவரும் ஒரு முக்கிய விடயம் சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் ஆகும்.

அமெரிக்காவின் மன்ஹேட்டன் பகுதியின் குறுக்கு வீதிகள் ஊடாக சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் கண் கொள்ளாக் காட்சிகளாகப் படமாக்கப் பட்டுள்ளன.

ஒரு வருடத்தில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் தான் இங்கு இந்த எழில் கொஞ்சும் காட்சிகளை இவ்வளவு தத்ரூபமாகக் காண முடியுமாம்.

இவ்வருடம் மே மாதம் 30ஆம் திகதி மேற்படி நிகழ்வு ஏற்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஒரே நேரத்தில் சூரிய ஒளிக் கதிர்கள் பட்டு மன்ஹேட்டனின் வடக்கு மற்றும் தெற்கு வீதிகள் பொன்னிற விளக்குகள் போடப்பட்டது போல் ஜொலிக்கும். மன்ஹேட்டனின் பூகோள ரீதியான அமைவிடம்தான் இதற்குக் காரணமாகின்றது.



# பயணிகள் இருவருக்கிடையில் ஏற்பட்ட சண்டையால் விமானம் தரையிறக்கம்

வானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் பயணிகள் இருவர் திடீரென சண்டை போட்டதால், நிலைமையை சமாளிக்க உடனடியாக 2 போர் விமானங்கள் பாதுகாப்புக்கு அழைக்கப்பட்டன. இவற்றின் துணையுடன் பயணிகள் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.



அமெரிக்காவின் டல்லஸ் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து கானா நாட்டுக்கு யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் 990 ரக விமானம் புறப்பட்டது.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, ஒரு பயணி தனது இருக்கையை சற்று சாய்த்துள்ளார். இதற்கு பின் பக்கம் அமர்ந்திருந்த சக பயணி எதிர்ப்பு தெரிவித்ததால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றி கைகலப்பு நடந்தது. இதனால், கூச்சல் நிலவியதால், விமான கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தகவல் கொடுத்தார். விமானத்தின் பாதுகாப்புக்காக அண்ட்ரூஸ் விமானப்படை தளத்திலிருந்து எப்ரூ16 ரக இரண்டு போர் விமானங்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன.

மீண்டும் டல்லஸ் விமான நிலையத்துக்கு திரும்பி வருமாறு பயணிகள் விமானத்துக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி அந்த விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. விமானம் பறக்கும்போது நடுவானில் இடையூறு ஏதேனும் ஏற்பட்டால் அவற்றின் பாதுகாப்புக்காக போர் விமானங்களை அனுப்புவது மரபு என அமெரிக்க கடற்படை லெப்டினன்ட் ஆளுனர் வில்லியம் லெவிஸ் தெரிவித்தார்.

சண்டை செய்த இருவரால் பயணிகளுக்கு நேர்ந்த சிரமங்கள் குறித்து அறிவுரை கூறினோம். அவர்களை கைது செய்ய வில்லை என டல்லஸ் விமான நிலைய செய்தித் தொடர்பாளர் ராப் இங்லிங் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி உயர்வுப் பரீட்சை முடிவு வெளிவராததனால் அதிகாரிகள் குழப்பம்

கைதடி,

சமூக சேவை அதிகாரிகளை கிராம அபிவிருத்தி அதிகாரிகள் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்த்துவதற்கான வட மாகாண சபையால் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடத்தப்பட்ட வினைத்திறமை காண் பரீட்சையின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு 30 அதிகாரிகளுக்கு இப் பரீட்சையை நடத்தியபோதிலும் பரீட்சைப் பெறுபேறு இதுவரை வெளியிடப்படாமை குறித்து அதிகாரிகள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட வேண்டிய சேவைக்காலத்தை அடைந்த சில அதிகாரிகள் இத் தாமதத்தால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.




## நினைவுக் கூட்டம்

தொழிற்சங்கப் போராளிகள் கந்தசாமி, சோமபால ஆகியோரின் நினைவு தினக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் புதிய உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பலர் உரையாற்றுவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் இதில் பங்குபற்றலாம் என யாழ். சர்வதேச மார்க்ஸிய குழு அறிவித்துள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக உதவிவரும் சமூக சேவைகள் திணைக்களம்

## தென்மராட்சியில் 3 ,943 பேருக்கு மாதக் கொடுப்பனவு

சாவகச்சேரி,

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் மத்திய சமூகசேவைத் திணைக்களமும் மக்களது மேம்பாட்டிற்காகப் பல வழிகளில் உதவிபுரிந்து வருகின்றன.

2010 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரிவிற்கு உட்பட்ட மக்களது மேம்பாட்டிற்கு பல்வேறு வகையான உதவித்திட்டங்களை வழங்கியதாகவும் 2011 இல் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ச. வரதபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

2010 இல் புதிதாக 889 பயனாளிகள் பொதுசன உதவிப்பணம் வழங்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். மொத்தம் 3 ஆயிரத்து 943 பயனாளிகள் மாதாந்தம் பயன்பெறுகின்றனர். இவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 பேருக்கு சுயதொழிலை மேற்கொள்ள 15 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. வெள்ளம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்ட 10 வீடுகளைப் புனரமைக்க தலா 20 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு கட்டங்களாக மொத்தம் 2 இலட்சம் வழங்கப்பட்டது.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட ஊனமுற்றோர், விதவைகள் என்ற அடிப்படையில் 5 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் 'யுனிசெவ்' நிறுவனத்துடன் இணைந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் அதிக பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் என்பவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 14 பயனாளிக்கு தலா 25 ஆயிரம் நன்கொடையாக மொத்தம் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. பிள்ளைகளது உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாக 6 ஆயிரம் ரூபா வீதம் 16 பேருக்கு மொத்தம் 96 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஊனமுற்றவர்களது மேன்மையை கருதி 4 பயனாளிகளுக்கு15 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயிரம் ரூபா நன்கொடை வழங்கப்பட்டது, ஆயிரத்து 500 ரூபா வீதம் 22 பயனாளிகளுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களம், ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கியது.

276 முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. நவீலட் பாடசாலைக்கு பரிணாம நன்கொடையாக 7 இலட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபாவும், மத்திய சமூகசேவைத் திணைக்களம் ஊனமுற்றவர்களது சுயதொழிலுக்காக 10 ஆயிரம் ரூபா வீதம் 12 பேருக்கு மொத்தம் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபா வீதம் 12 குடும்பத்திற்கு சுய தொழில் மேற்கொள்ள மொத்தம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. ஊனமுற்றவர்கள் 7 பேருக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்த ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

வெள்ளப் பாதிப்புக்குள்ளான 26 குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. இவ்வகையில் 2011 ஆம் ஆண்டிலும் சமூக சேவைகள் திணைக்களமும், யுனிசெவ் நிறுவனமும் தென்மராட்சி பிரதேச சமூக நலத் திட்டங்களுக்கு பெரும் பங்காற்றி வருகின்றன என வரதபாஸ்கரன் மேலும் தெரிவித்தார்.

# பாஷையூர் மக்கள் நடத்தும் மாபெரும் நாடக விழா

தெல்லிப்பழை,

பாஷையூர் - புனித அந்தோனியார் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு பாஷையூர் பிரான்ஸ் அபிவிருத்திக் குழுவினரும் பாஷையூர் பொது மக்களும் இணைந்து இம் மாதம் 15 ஆம் திகதி மாபெரும் நாடக விழாவை நடத்தவுள்ளனர். இவ் விழாவானது பாஷையூர் - புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதான அரங்கில் மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நாடக விழாவில் கலாபூஷணம் வ. அல்பிரட்டின் நெறியாள்கையில் 'பூதத்தம்பி' நாட்டுக் கூத்தும் கலாபூஷணம் அ. பாலதாசனின் நெறியாள்கையில் 'தீர்க்க சுமங்கலி' இசை நாடகமும் கலாபூஷணம் மு. அருள்பிரகாசத்தின் நெறியாள்கையில் 'வள்ளல் குமணன்' நாட்டுக் கூத்தும் அண்ணாவியார் மரபுக் கலைச்சுடர் திருமதி. இராஜேஸ்வரி செபஸ்தியாம்பிள்ளையின் நெறியாள்கையில் 'அநுராதபுர மன்னன் வலகம்பா' நாட்டுக் கூத்தும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் நாடக ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

## வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் இடமாற்றம்

அச்சுவேலி,

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். திருவாகரன் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் புதிய செயலாளராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் உதவிச்செயலாளருமான ஆர். தியாகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். நிரந்தர பதவி நிலையில் உள்ளவரை இடமாற்றம் செய்துவிட்டு ஓய்வுக்குப் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் உள்ளவரை நியமனம் செய்திருப்பது தமிழர் அல்லாத ஒருவரை பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக நியமிப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக இது அமையலாமென சந்தேகிக்கப்படுகிறது.

## வறிய மாணவர்கள் 15 பேருக்கு நிதியுதவி

மானிப்பாய்,

சாவல்கட்டு கிராமத்திலுள்ள வறிய மாணவர்கள் 15 பேருக்கு குறிக்கப்பட்ட தொகை வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவல்கட்டு கிராமத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள மாணவர்களைத் தெரிவு செய்து, அவ் ஊரிலுள்ள சீனி ஞானசேகரம் என்பவர் ரூபா ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் ரூபா வரையான பணம் வைப்பிலிட்டு உரியவர்களுக்கு வங்கிப் புத்தகங்களை வழங்கியுள்ளார்.

இவருடைய இம் முன்மாதிரியான செயற்பாட்டை அவ்வூர் மக்கள் பாராட்டியதுடன், தமது நன்றியறிதல்களையும் தெரிவித்ததுடன் தாராளமனப்பாங்குள்ளவர்கள் இந் நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதமே என தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் நிரப்புவதற்கு நீண்டநேரம் காத்திருப்பு

யாழ். நகர மத்தியில் பெற்றோல் நிரப்புவதற்காக வாகன உரிமையாளர்கள் நீண்டநேரமாக காத்திருக்கின்றனர்.

கஸ்தூரியார் வீதி - வின்சர் சந்தியில் கடந்த காலத்தில் இரண்டு பெற்றோல் நிரப்பும் நிலையங்கள் காணப்பட்டன.

தற்போது ஒரேயொரு பெற்றோல் நிரப்பும் நிலையம் மட்டும் அதன் சேவையை வழங்குகின்றது. இதனால், அவசரமாக நோயாளிகளை ஏற்றிச்செல்லும் முச்சக்கரவண்டிகளும் கடமைக்குச் செல்லும் மோட்டார் வாகன ஓட்டுநர்களும் பெற்றோல் நிரப்புவதற்காக வரும்போது சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.



மாலை நேரங்களில் கடமை முடித்து வீடுசெல்லும் பெண்களும் கூட நீண்ட கியூ வரிசையில் நின்று பெற்றோல் நிரப்பும் அவலம் காணப்படுகின்றது. இதனால், பெற்றோல் நிரப்பும் ஊழியர்களும் வாடிக்கையாளர்களுடன் மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றனர். இந்த நீண்ட நேர தாமதத்தை உரியவர்கள் சீர் செய்ய முன்வர வேண்டுமென கேட்கப்படுகின்றனர்.

# திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

தெல்லிப்பழை

அச்சுவேலி - நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதி அதிபர் சி. சிவலிங்கம் தலைமையில் இன்று 3 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கான ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் பிரதமகுரு சி. கமல்ராஜ் குருக்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# யாழ். குடாநாட்டில் உள்ள வங்கிகள் மக்களுக்கு இலகுமுறையில் கடனுதவிகளை வழங்கவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. வேண்டுகோள்

(வட்டுக்கோட்டை நிருபர்)

குடாநாட்டில் அதிக அளவில் தமது கிளைகளைத் திறந்துவைக்கும் வணிக வங்கிகள் போரினால் பாதிக்கப்பட்டு நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் வழங்குவதில் கடைப்பிடிக்கப்படும் இறுக்கமான நடைமுறைகளைத் தளர்த்தி, தேவையான அனைவருக்கும் இலகுவாக கடன்பெற வழிவகுக்க வேண்டும்.

- இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்டஈடு மற்றும் இலகு கடன்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

எமது மக்கள் அரச வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களை மீளச்செலுத்துவதில் பொறுப்புணர்வுடன் செயற்படுபவர்கள். யாழ். குடாநாட்டு மக்கள் தாம் பெற்ற கடன்களை முழுமையாக மீளச் செலுத்தி வருகின்றனர். இதனை வங்கிகளின் அறிக்கைகளே தெரிவிக்கின்றன. எனவே, எமது பிரதேச மக்களுக்கு கடன் வழங்குவதற்கு வங்கிகள் தயங்கவேண்டியதில்லை. கடன் வழங்குவதனூடாக எமது மக்களின் முன்னேற்றத்திற்கும் பிரதேச அபிவிருத்திக்கும் உதவ வங்கிகள் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும், அவர் தனது உரையில், யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை எமது பிரதேசத்தில் முன்னெடுத்து வருகிறது. அரசின் இத் திட்டத்திற்கும் எமது பிரதேசத்தின் நிறைவானதும் விரைவானதுமான அபிவிருத்திக்கு வங்கித்துறையினர் தனியார் துறையினர் உள்ளிட்ட அனைவரும் விசேட கவனம் செலுத்த வேண்டும். மக்களின் அழிந்துபோன வாழ்விடங்களைக் கட்டி எழுப்புவதற்கு நாம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஏற்கனவே மீள்குடியேறிய பகுதி மக்களுக்கு அவ்வுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுதவிகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், பிரச்சினைகளை அணுகுவதில் கரிசனையுள்ளவர். புனர்வாழ்வு நிறுவனங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளை விடுவிப்பதில் அக்கறை கொண்டுள்ளார். எஞ்சியிருக்கும் முன்னாள் போராளிகளும் இவ்வருட இறுதிக்குள் விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும் புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும் எடுத்துவரும் முயற்சியினால் முன்னாள் போராளிகளையும் சமூகத்தில் இணைத்து இயல்வு வாழ்க்கைக்குக் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

# சேக்கிழார் குருபூசை

வடமராட்சி,

சேக்கிழார் சுவாமிகள் குருபூசையும் நமிநந்தி அடிகளின் குருபூசையும் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. இக் குருபூசை தினங்களை ஒட்டி, நாடெங்கிலுமுள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசைகள், வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

# கேட்டியளே சங்கதி




கேட்டியளே சங்கதி ..... இந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில நடக்கின்ற கூத்துக்கள் பற்றி எல்லே இப்ப கதைகள் அடிபடுகுது. சுகாதாரச் சீர்கேடுகளும் வைத்தியர் மார்சிலரின்ர அடாவடிகளும் செக்யூரிட்டி மார் சிலரின்ர அட்டகாசங்களும் இப்ப ரொம்பவெல்லே அதிகரித்து வருகுது.

வைத்தியசாலைக்கெண்டு இருக்கிற ஒரே ஒரு கண்டீன கழிவு நீர்கள் ஓடுகின்ற வாய்க்காலுக்குமேல கொண்டு போய்க் கட்டிப்போட்டு அங்க இலையான் மொய்க்குது. தண்ணி சுத்தமில்ல. சாப்பாடு சரியில்ல எண்டு சொல்லுகினம். ஏன் ...... கன்டீனுக்கெண்டு இடம் ஒதுக்கும்போது கீழ வாய்க்கால் ஓடுவதைப் பார்த்தெல்லே இடத்தை ஒதுக்கியிருக்கோணும். அப்ப இவயள் பிழை விட்டுப்போட்டு இப்ப கண்டீன் நடத்துபவர்களில குற்றம் கண்டு பிடிக்கினம். ஆஸ்பத்திரி நிர்வாகம் நினைச்சால் உந்தக் கண்டீன வடிவா நடத்தலாம் பாருங்கோ ......

இங்கு இன்னுமொரு கூத்து நடந்திருக்கு பாருங்கோ ..... காதுக்கு வைத்தியம் பாக்கும் வைத்தியர் ஒருவர் காது வலியோடு போன பள்ளிக்கூட பிள்ளைக்கு அடிச்சுப் போட்டாராம். இவர் அந்த பிள்ளையின்ட காதுக்க மிஷினவிட்டுப் பார்க்கும் போது பிள்ளை வேதனையால அசைஞ்சிருக்கு .... அதற்கு அவர் அதட்டியிருக்கிறார். பிறகும் பிள்ளை அசைய அடிச்சுப்போட்டு உனக்கு வைத்தியம் பாக்கேலாது போய் வாட்டில பத்து நாள் படும் எண்டிருக்கிறார். அந்தப் பிள்ளை அழுது கொண்டு வெளியில வந்து தகப்பனிட்ட சொல்ல தகப்பன் இத ஆஸ்பத்திரி பணிப்பாளரிட்டயும் பொலிஸிலயும் முறையிட்டிருக்கிறாராம். இந்த வைத்தியர் நெடுங்காலமாக சுடுதண்ணிதானாம். சின்னப் பிள்ளையள காது வருத்தம் எண்டு பெற்றோர் கூட்டிக் கொண்டு போனால் பெற்றாரைக் கதைக்கவிடாமல் வருத்தக்காரப் பிள்ளயிட்டதானாம் கதை கேப்பாராம். மீறிக் கதைக்கிறவையிட்ட 'உனக்கே வருத்தம். உன்னட்டயே கேட்டனான்' என்று கேட்கிறாராம். வருத்தத்தின்ர வேதனையோட போற சனம் இவரின்ர அதட்டல் மிரட்டலையெல்லாம் வருத்தம் சுகமாகவேணும் எண்டதுக்காக பொறுத்துக் கொள்கிறார்களாம்: பின்ன என்னதான் செய்ய முடியும் யாழ்ப்பாணத்தில கஷ்டப்பட்ட சனத்துக்கெண்டு இருக்கிற ஒரு வைத்தியசாலை இது தானே.

ஆனால் அங்க இருக்கிறவையள் தங்கள விட்டா ஆக்கள் இல்லை எண்ட ஆணவத்தோடு தான் இருக்கினம். செக்குயூரிட்டியளவேன்ர அடாவடியளும் இப்ப கூடுதாம். வருத்தக்காரப் பாக்கப்போற சனத்திட்ட இவயள் பொலீஸ் காரரை விட மோசமாகவெல்லே நடக்கினம். பாக்கவிருக்கிற அரை மணித்தியாலயத்தில கால் மணித்தியாலமானதும் சனத்தக் கலைக்க வெளிக்கிட்டுயிருனம். போகப் பிந்துகிற சனத்திட்ட இவயள் முரண்படுகினம். வயதுக்கு மூத்தவயள் பொம்புளயள் எண்டுகூடப் பாக்காம ஒருமையிலதான் கதைக்கினம். 'எங்க போறீள் ...? எங்க வாறியள் ...? போகேலாது போங்கோ ....' எண்டு கடும் தொனியுடனேயே எல்லோரோடையும் கலைக்கினம்.

தங்களுக்குத் தெரிஞ்ச ஆக்கள எந்த நேரமும் உள்ளவிடுறதும் ஒரு நிமிஷம் பிந்தினாக்கூட மற்றவயள உள்ளவிடாமல் கதைக்கிறதும் ம் .... தட்டிக் கேட்க யாரும் இல்லாததால இவயளின்ட அட்டகாசம் நீண்டுகொண்டே போகுது.

மனித நேயத்தையும் பற்றியும் அன்பான உரையாடல்களைப் பற்றியும் இவையளுக்கு கொஞ்சம் வகுப்பெடுக்க வேணும் ....

நோய் தீர்க்க வைத்தியசாலை வாறவயள் திரும்பிப் போகும்போது மன உளைச்சலோடு போகக்கூடாது பாருங்கோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 30

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | | 06 |
| 07 | | 08 | 09 | 10 | 11 | |
| 12 | 13 | 14 | 15 | | 16 | 17 |
| 18 | 19 | 20 | | 21 | 22 | 23 |
| 24 | | | 25 | 26 | 27 | |
| | 28 | 29 | 30 | 31 | | 32 |
| 33 | | 34 | 35 | 36 | 37 | 38 |
| 39 | 40 | 41 | | 42 | 43 | 44 |

### இடமிருந்து வலம்

1. சிவன் சுதன்

6. நெருப்பு

8. பிராணிகளின் கழிவு (குழம்பியுள்ளது)

12. மலருக்கு மறுபெயர்

16. வகை

18. அதிகமானோர் (குழம்பியுள்ளது)

21. இயற்கை வெளிச்ச காலம்

25. மூவேந்தருள் ஒருவன்

28. அழகன்/முருகன் (குழம்பியுள்ளது)

39. தொழிலாளர் பயன்படுத்துவது

2. எகிப்தின் சிறப்பம்சம்

### மேலிருந்து கீழ்

1. மெய், வாய், கண், மூக்கு, செவி

3. கவிச்சக்கரவர்த்தி

4. மருத்துவ குணமுள்ள நீராகாரம்

5. எனது (தலைகீழ்)

11. கோயில் நொறுக்குத் தீனி (குழம்பியுள்ளது)

13. பேருந்து (தலைகீழ்)

17. ஒரு படம்/வீரத்தையும் இப்படிச் சொல்வார்கள்

21. கிருஷ்ணர் (இறுதி எழுத்து இல்லை)

25. சேமி

29. உத்தியோகம் (குழம்பியுள்ளது)

32. கருங்கல் சமையல் உபகரணம்

33. படி (தலைகீழ்)

37. காற்றடி உபகரணம்

### குறுக்கெழுத்துப் போட்டி 28க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏ | க | லை | வ | ன் | | வ | லி |
| ல | த் | தி | | அ | ர | சி | |
| க் | | த் | சா | ம | தி | ய | ம் |
| கா | ய | வெ | ங் | ம் | | ம் | த |
| ய் | தா | | கு | | லி | | ர |
| | ம் | ன | பா | | ல் | ய | பு |
| து | | ம் | | க | ம | ம் | |
| தி | ரு | வா | தி | ரை | | பு | வி |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக்குரு
ஆவரங்கால்.

2. திருமதி. கலிஸ்ரா உதயன்
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

3. ம. சதீஸ்வரன்
பிரதான வீதி
சண்டிலிப்பாய்.

குறுக்கெழுத்துப் போட்டி 30க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.


**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்...




"உங்க அப்பாவின் சொத்துக்காக நீயும் உன் தம்பியும் கோர்ட்டுக்குப் போனீங்களே என்ன ஆச்சு?"
"இரண்டு பேருடைய வக்கீல்களும் சொத்தைப் பிரிச்சிசுக்கிட்டாங்க!"




"அறுபதாம் கல்யாணத்துல என்ன கலாட்டா?
"இப்பவும் அதே பொண்ணுதானான்னு தாத்தா கலாட்டா பண்ணுகிறார்!




"சே! அந்த பொலிஸ்காரரை யார் அப்பாயின்ட்மென்ட் பண்ணினார்களோ தெரியவில்லை!"
"ஏன், என்ன விஷயம்?"
"மோட்டார் சைக்கிளில் பெல் இல்லையென்னு பிடிச்சுக்கிட்டு வர்றார்!"




"ஏன் படத்தோட கதாசிரியரை மாத்தீட்டீங்க?"
"பின்னே, இங்கிலீஷ் படத்தையெல்லாம் பார்க்காம சுயமா கதை எழுகிறார்!"




"ஷார்ப்பா எட்டு மணிக்கு வேலைக்கு வந்து விடுகிறாயே, இதற்கு முன் என்னவாக இருந்தாய்?"
'சாணை பிடிப்பவனாக இருந்தேன்! "




"என்ன, நீங்க மழைக்குக் கூட பள்ளிக்கூடத்திலே ஒதுங்கியது கிடையாதாமே?
"ஆமாம், எங்க ஊர் பள்ளிக் கூடம் மழைக்கு ஒ வென்று ஒழுகும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

### உறவினர்களுடன் கலந்துரையாடல்

உங்கள் குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கின்றனர்?
ஔயாகே பவுலே கீதெனெக் இன்னவத?

எனது குடும்பத்தில் ஐந்து பேர் உள்ளனர்.
மகே பவுலே பஸ் தெனெக் இன்னவா.

யார் யார் இருக்கின்றனர்?
கவுருக்கவுருத இன்னே?

அம்மா , அப்பா, தம்பி, தங்கை ஆகியோர் உள்ளனர்.
அம்மா, தாத்தா, மல்லி, நங்கி இன்னவா.

அம்மா என்ன வேலை பார்க்கிறாள்?
அம்மா மொன வெடத கரன்னே?

எங்கள் அம்மா ஆசிரியர் தொழில் செய்கிறாள்
மகே அம்மா குருவரிய.

எவ்வளவு காலம்...?
கொச்சர காலயாக்...?

அப்பா என்ன தொழில் செய்கிறார்?
தாத்தா மொன வெடத கரன்னே?

அவர் கடை நடத்துகிறார்.
எயா கடயக் கரனவா.

நீங்கள் படிக்கிறீர்களா?
ஔயா இகனகன்னவாத?

தம்பி என்ன செய்கின்றார்?
மல்லி மொனவத கரன்னே?

தம்பியும் படிக்கின்றார்
மல்லித் இகனகன்னவா

தங்கை பாடசாலை செல்கின்றாளா?
நங்கி பாசலட யனவாத?

ஆம். பாடசாலை போகின்றாள்.
ஔவ். பாசலட யனவா.

எங்கள் குடும்பம் அழகானது
மகே பவுல லஸ்ஸனாய்

சிறிய குடும்பம்.
பொடி பவுல.

**மீண்டும் அடுத்த**
**பாடத்தில் சந்திப்போம்**
**●வேலு. ஜீவராஜா**

## உன்னாலே உன்னாலே!

*உன்னை பார்த்த பின்*
*உள் மனதிலும்*
*இல்லாத ஒன்று*
*ஊற்றெடுத்து ஓடுதடி.*

*உன்னை ரசித்த பின்*
*இதயக் கதவுகள்*
*உன் பெயரை*
*உச்சரிக்கின்றது.*

*உன்னை தொட்டபின்*
*பூக்களில்*
*நறுமணமில்லலை*
*அவைக்குள் தேனில்லை*
*அனைத்தும் உன்னிடமே*
*நிறைந்திட்டதடி.*

***உன்னை அணைத்த பின்***
***ஆண்மையை அடக்கும்***
***சக்தி பெண்மைக்குள்***
***உண்டென்பதை***
***புரிந்து கொண்டேன்.***
***உன்னை உள்ளத்திலே***
***இருத்திய பின்பு***
***அடிக்கடி புலம்பலாய்***
***கவிதை வரிகள்.***

***உன்னை சுவைத்த பின்***
***உணவில் இல்லாத***
***பல்சுவைகள்***
***உன்னில் உணர்கிறேன்.***

**மருதங்கேணியூர்**
**வே.வே. அகிலேஸ்வரன்.**

# SPOKEN ENGLISH

Ram:- Hellow friend! How do you do?
ஹலோ நண்பா! எப்படி சுகம்?

Abi:- How do you do?
நான் நலம். நீங்கள் எப்படி?

Ram:- Today We are here so many years aren't we?
இன்று நாங்கள் பல வருடங்களுக்குப் பின்னர் இருக்கிறோம் இல்லையா?

Abi:- Yes, I think When we were at university time.
ஆம், நான் நினைக்கிறேன் நாங்கள் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது.

Ram:- Abi, I like to ask a question?
அபி நான் ஒரு வினா கேட்க விரும்புகிறேன்?

Abi:- What is the matter?
என்ன விடயம்?

Ram:- I like to read some books about spirituals, where can I borrow it?
நான் ஆன்மிக புத்தகங்கள் படிக்க விருப்பமாக இருக்கிறேன். எங்கே அவற்றை இரவல் எடுக்கலாம்?

Abi:- You can borrow from Navalar Cultural Centre.
நீங்கள் நாவலர் கலாசார மண்டபத்தில் பெறமுடியும்.

Ram:- I see, Where is the Navalar Cultural Centre?
அப்படியா! எங்கே இருக்கிறது நாவலர் கலாசார மண்டபம்?

Abi:- The junction of Navalar road and viman road.
வைமன் றோட்டிற்கும் நாவலர் வீதிக்கும் இடையிலுள்ள சந்திப்பில் உள்ளது.

Ram:- Where is the Navalar mani mandapam?
நாவலர் மணிமண்டபம் எங்கே உள்ளது?

Abi:- That is at Nallur?
அது நல்லூரில் உள்ளது.

Ram:- Where is it at Nallur?
நல்லூரில் எங்கே உள்ளது?

Abi:- You go to Nallur Murugan temple. Then toss your head to south you can see it.
நீங்கள் நல்லூர் முருகன் ஆலயத்திற்குச் செல்லுங்கள். அங்கு நின்று தெற்கே நோக்கித் தலையைத் திரும்புங்கள் அங்கே காணமுடியும்.

Ram:- Is there any Special?
அங்கு என்ன விசேடம்.

Abi:- There is a Navalar statue which is brought by Hon. Minister from Navalar Cultural Centre.
அங்கே நாவலர் சிலை உள்ளது. அதனை அமைச்சர் நாவலர் கலாசார மண்டபத்தில் இருந்து கொண்டுவந்திருந்தார்.

Ram:- He did wonderfull job. Isn't it?
அவர் நல்லது செய்திருக்கிறார் இல்லையா?

Abi:- Why not, This statue already put here first. But accidently twenty years isn't there.
ஏன் இல்லை. இந்த சிலை ஏற்கனவே இங்குதான் முதலில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், இருபது வருடங்களாக இங்கு இருக்கவில்லை.

Ram:- Who Maintains this Navalar Mani Mandapam?
யார் பராமரிக்கிறார்கள் இந்த நாவலர் மணி மண்டபத்தை?

Abi:- Dept. of Hindu Religious & Cultural Affairs.
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Ram:- I see; What is going on there?
அப்படியா! அங்கே என்ன நடக்கிறது?

Abi:- Yoga and Meditation classes, Pannichai, Miruthanga classes also.
யோகாசனம், பண்ணிசை, மிருதங்கம், தியானப் பயிற்சிகளும் கூட.

Ram:- Do We want to pay for the courses?
நாங்கள் ஏதும் பணம் செலுத்தவேண்டுமா வகுப்புக்களுக்கு?

Abi:- Oh, No, There is free of charge.
இல்லை, இல்லை. எல்லாம் இலவசம்.

Ram:- Shall we join the yoga class?
நாங்கள் யோகாசனம் பயில்வோமா?

Abi:- Oh yes, now shall we go to take a book from Navalar Cultural Centre.
ஆம். இப்ப நாங்கள் புத்தகம் எடுக்க நாவலர் கலாசார மண்டபத்திற்குச் செல்வோமா?

Ram:- Okay, move.
ஓம். செல்வோம்


**S.Uthayabalan (M.A)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல்களால் பறிக்கப்படும் பேச்சு சுதந்திரம்

யாழ். குடாநாட்டினில் மீண்டும் தலைதூக்கும் ஆயுதமுனை அச்சுறுத்தல்கள் மீண்டும் இருண்டதோர் யுகத்தை நோக்கிச் செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றது. யாழ்ப்பாணத்தவர்கள் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டின் இருண்ட காலப் பகுதிகளை மறந்திருக்க மாட்டார்கள். இரவுவேளைகளில் கடத்தப்பட்டவர்கள் பலரும் வீதிகளில் சூட்டுக்காயங்களுடன் சடலங்களாகக் கிடந்தனர். அப்போது காணாமல் போன பலர் பற்றி இப்போது வரை தகவல்களே இல்லை.

காணாமல் போனவர்களுள் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் இருந்தனர். அவர்களுள் சிலர் பின்னர் வீதியோரங்களில் சடலங்களாகவும் கிடந்தனர். மக்



கள் வீதிகளில் இறங்கவே அஞ்சினர். மாலை 5.00 மணியுடன் ஊரே அடங்கிப் போனது. தத்தமது வீடுகளே பாதுகாப்பானது என அனைவரும் நம்பினர். மூடப்பட்ட கதவுகளை தாண்டி துப்பாக்கிகள் உள்ளே வராதென அவர்கள் நம்பினார்கள்.

ஆனால், எல்லாமே பொய்யாகிப் போயிருந்தன. மக்கள் முடங்கிக் கிடந்த கணப்பொழுதுகளில் வீதிகளில் இலக்கத் தகடற்ற வெள்ளை வான்கள் ஓடித் திரிந்தன. மனைவி மற்றும் பிள்ளைகள் முன்னிலையில் கணவர் மார் இழுத்துச்செல்லப்பட்டனர். சிலவேளைகளில் தாய், தந்தையர் முன்னால் பெற்ற பிள்ளைகள் பறித்தெடுத்துச் செல்லப்பட்டனர். பெரும்பாலும் வீதியெங்கும் குரைக்கும் நாய்களிடையே கொண்டுசெல்லப்பட்ட பலரும் பின்னர் வீடு திரும்பியிருக்கவேயில்லை.


ஒட்டுமொத்தத்தில் அக் காலப்பகுதியினில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள், மக்களிடையே அச்சத்தை உண்டுபண்ணி அடிபணிய வைக்கும் ஓர் உத்தியாகவே பயன்பட்டன. உரிய தரப்புக்கள் அதில் வெற்றியும் பெற்றுக்கொண்டன. மக்கள் மௌனிக்கப்பட்டனர். உணவுக்காகவன்றி வாய் திறக்க அனைவருமே அஞ்சினர்.

ஆனால், பயங்கரவாத யுத்தம் முறியடிக்கப்பட்டு விட்டதாக அரசு அறிவித்து இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. எனினும், மூடப்பட்ட வாய்கள் திறக்கப்படுவதை உரிய தரப்புக்கள் விரும்பாவில்லை. எங்களுக்குள் நாங்களே பேசித் தீர்த்துக்கொள்வோம் என்கின்றார் ஜனாதிபதி. ஆனால், ஒன்றுகூடிப் பேசுவதற்குக் கூட அனுமதிவழங்கப்படாத இடமாகவே யாழ். குடாநாடு இருந்தே வருகின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் இரண்டாம் ஆண்டு நிகழ்வுகள் புலம்பெயர் தேசம் எங்கும் எழுச்சியுடன் தமிழர்களால் அனுஷ்டிக்கப்பட்டன. ஆனாலும், அவலங்களை சந்தித்த வன்னியிலும் அயலிலுள்ள யாழ்ப்பாணத்திலும் அவ் அனுமதி மறுக்கப்பட்டே இருந்தது. ஆயிரமாயிரமாய் வெசாக் தீபங்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், உயிர்துறந்த தனது உறவுக்காய் ஒற்றை மெழுகுவர்த்தியை ஏற்றக் கூட அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உச்சபட்ச நெருக்குவாரங்களின் மத்தியில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவுகூர்ந்தார்கள். பெரும்பாலும் இரவு வீடு தேடி வரப்போகும் துப்பாக்கி நபர்கள் பற்றிய அச்சம் அவர்கள் மனங்களை நிறைத்திருந்தன. பங்கெடுத்த மாணவர்கள் முகங்கள் அச்சத்தில்ஆழ்ந்திருந்தன. தங்களை புகைப்படமெடுக்காதிருக்குமாறு ஊடகவியலாளர்களை அவர்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். எங்கோ கேட்ட நோயாளர் காவு வண்டியின் சங்கொலிக்கு (அம்புலன்ஸ் சைரன்) காவல்துறை வாகனமே வந்துவிட்டதாக எண்ணி ஓடிய சம்பவங்களும் நடந்தேறியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சிவில் சமூக அமைப்புக்கள் திரண்டு, கலைத்தூது மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வொன்றை நடத்தின. பேசுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் எவரும் அங்கு உரையாற்ற முன்வரவில்லை. வெறும் மத அனுஷ்டானங்களே இடம்பெற்றன. வீரம் கொப்புளிக்கப் பேசும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோரைக் காணவில்லை. சிறிதரன் எம்.பி. மட்டும் பங்குபற்றினார். நிகழ்வு முடிவுறும் தருணத்தில் வளாகச் சூழலில் படையினரும் காவல்துறையினரும் குவிக்கப்பட்டனர். இதனால், மாணவர்கள் மத்தியில் அச்சம் நிலவியது. மறுபுறத்தே சில கட்சிகள் அஞ்சலி நிகழ்வை உள்ளுக்குள்ளேயே அமைதியாக நடத்திமுடித்தன.





குடாநாட்டில் பெண்கள் உரிமைகள் தொடர்பில் முன்னின்று செயற்பட்டு வரும் மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் யாழ். நகரப் பாடசாலையொன்றில் மாணவிகளுக்கான பயிற்சிப்பட்டறையொன்றிற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஆனாலும், அங்கு வந்து குவிந்த படையினர், கூட்டமைப்பினர் பாடசாலை மாணவர்களுக்குக் கூட்டம் வைக்கப்போவதாக தகவல்கள் வந்திருப்பதாகக் கூறிக் கொண்டனர். உச்சபட்ச சோதனைக் கெடுபிடிகளும் இழுத்தடிப்புக்களும் அங்கு அரங்கேறின. உள்ளே வந்தவர்கள், வெளியே போனவர்கள் அனைவருமே கடும் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

குடாநாட்டு நூல்களை இணையத்தினில் அரங்கேற்றுமுகமாக உருவானது நூலகம் அமைப்பு. இங்கு பேராசிரியர் இ. சிவச்சந்திரன் முக்கிய பங்காளர். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு இறுதிச் சுற்றுவரை போட்டியிட்ட பேராசிரியர் ஜீவன் கூலும் முக்கிய ஆலோசகர். குடாநாட்டு புத்திஜீவிகள் குழு சந்திப்பொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கணத்தில் அங்கும் படையினர் வந்து இறங்கியிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் தான் வந்துள்ளதாகக் கூறிய படை அதிகாரி, புலிகள் ஆதரவுக் கூட்டத்தை நடத்துவதாகக் குற்றஞ்சாட்டினார். தேடுதல்களையும் நடாத்தினர். நீண்ட வாதப்பிரதிவாதங்களும் அங்கு நடந்தேயிருந்தன.வல்வெட்டித்துறையில் சாதாரண கிராமமட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதென்பது கூட இப்போது முடியாததொன்று. நிகழ்வுகளுக்கு தம்மிடம் அனுமதி கேட்க வேண்டுமென்கின்றனர் படையினரும் பொலிஸாரும். ஏற்றிய கொடிகளை இறக்கிவைக்கச் சொல்லி அச்சுறுத்துகின்றனர். இயற்கை எய்திய வேலுப்பிள்ளை பார்வதியம்மாளுக்கு அஞ்சலி செலுத்தியதே இங்குள்ள மக்கள் செய்த குற்றம். அதற்குப் பதிலீடாக தமது விளையாட்டு மாதானங்களை அவர்கள் இழந்துள்ளனர்.

கனகரத்தினம் விந்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ். மாவட்ட அமைப்பாளர். யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவரும் கூட. ஆளும் தரப்பின் ஊழல்களை அம்பலப்படுத்தியதற்காக தனது உயிரை தக்கவைத்துக் கொள்ள இப்போது போராட வேண்டிய ஒருவர். எதிர்த்துக் குரல்கொடுத்தவர்களை மிரட்டிப் பணியவைக்க மாநகர சபை கூட்டத்திற்கு படைப் புலனாய்வாளர்களையே அழைத்துவந்திருந்தது நிர்வாகம். உலகின் எந்தவொரு உள்ளூராட்சி சபை பாரம்பரியத்திலும் இல்லாத வரலாறு இது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் உதவியாளர் ரமேஷ் மீதான தாக்குதல், கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மீதான மிரட்டல்கள், நடமாட்டங்கள் வேவு பார்க்கப்படுகின்றமையென அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. அனைத்துமட்டங்களிலும் அடிபணியவைப்பதும் வாய் மூடி மௌனியாக இருக்க வைப்பதும் மட்டுமே நோக்கமாக இருக்கிறது.

பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மழைக்காலம்



மதிகெட்டான்

## அஜித் சூர்யா மோதல்

**வெங்கட்** பிரபுவின் இயக்கத்தில் அ
'மங்காத்தா'. இப்படம் அஜித்தின் 50
சமாகும். தற்போது கிடைத்திருக்கும் தகவலின் படி அஜித்துடன் சூர்யா மோத இருக்கிறாராம். இதனா இரு தரப்
ளனர். ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா மூன்று வேடங்களில் நடித்து வரும் படம் '7ஆம் அறிவு'. இப்படத்தி
ஸ்ருதிஹாசன் கதாநாயகியாக நடிக்கிறார். 'கஜினி'யில் இணைந்த சூர்யா, ஏ.ஆர்.முருகதாஸ், ஹாரிஸ் ஜெயராஜ்
இணைந்திருக்கிறது. இரண்டு படங்களின் படப்பிடிப்பும் தற்போது நிறைவடைந்துவிட்டனவாம். போஸ்ட் ப
திரைப்படக்குழுவினரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். எல்லா வேலைகளும் முடிந்த பிறகு ஜூலை மாதத்தில்
படத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார். அதே போல, '7ஆம் அறிவு' படமும் ஜூலையில் வெளியாகும் என்று ஏ.அ
இரண்டு படங்களும் ஜூலையில் ஒரே திகதியில் வெளியாக இருக்கிறதாம். இதனால், அஜித் படத்துடன் சூர்யா
இந்த மோதல் அவர்களது ரசிகர்களுக்கு அதிர்ச்சியைத் தரும் என்றும் தெரிகிறது.

## விஸ்வரூபத்தி

**கமல்** இயக்கி நடிக்க இருக்கும் 'விஸ்வரூபம்' படத்தில்
இரண்டு கதாநாயகிகளாம், அதில் சோனாக்ஷி சின்ஹா ஒரு
கதாநாயகியாக நடிக்கிறார். மற்றொரு கதாநாயகியாக ஸ்ரேயா
நடிக்க இருக்கிறார் என்று ஹொலிவுட் வட்டாரம் கிசுகிசுத்தது. இது குறித்து நடிகை ஸ்ரேயா
படத்தில் நடிக்கிறேனா...யார் இந்த மாதிரி பொய்ச்செய்திகளை பரப்புவது, அப் படத்தில் கமலு
கையின் படி எந்தப் படத்தில் நான் நடிப்பதாக இருந்தாலும், அந்தப் படத்தில் முறையாக நான்
பற்றி நான் பேசுவேன்'' என்றார். கமல் நடிக்க இருந்த 'மர்மயோகி' படத்தில் ஸ்ரேயாவைத் தா
அப்படம் கிடப்பில் போடப்பட்டுள்ளதால், அந்த வாய்ப்பு ஸ்ரேயாவை விட்டு கை விப் பே
இப்போது 'விங்ஸ் ஒவ் பயர்' என்ற ஆங்கிலப் படத்தில் மும்முரமாக நடித்துக்கொண்டிருக்கிற
கத்துலதானே இப்டிப் பேசுறீங்க.....



கந்தா

## முதல் முறையாக விஜயுடன் இணை

**'வேலாயுதம்'**, 'நண்பன்' படத்தை தொடர்ந்து விஜய் அடுத்து ந
அவருக்கு ஜோடியாக பாவனா நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள
'தம்பி', 'வாழ்த்துக்கள்' உள்ளிட்ட படங்களை இயக்கிய சீமான், அடுத்து
படத்தை இயக்குகிறார். இப்படம் கடந்த ஆண்டே துவங்க இருந்தது. ஆ
தொடர்பாக அவதூறாகப் பேசியதற்காக சிறை சென்றார் சீமான். இதனால், இப்
சிறையிலிருந்து வெளியே வந்த சீமான், விஜய்யை சந்தித்து 'பகலவன்' படம் தொ
துவங்கலாம் என்று சொன்னார். ஆனால், இடையில் தமிழ சட்ட சபை தேர்தல் வந்த
செய்யத் தொடங்கிவிட்டார் சீமான். இதனால், மீண்டும் தள்ளிப்போனது 'பகலவ
ஒத்திவைத்து விட்டு, 'பகலவன்' படத்திற்கான வேலையைத் துவங்கி இருக்கிற
நாயகி மற்றும் டெக்னீசியன்களுக்கான தேர்வில் இறங்கியுள்ளார் சீமான். ப
ஒருவராக பாவனாவைத் தேர்வுசெய்திருக்கிறார் சீமான். பாவனா ஏற்கனே
நடித்திருப்பதால் மீண்டும் அவரையே தேர்வுசெய்திருக்கிறார். மற்றொரு நாய
எனத் தெரிகிறது. தற்போது விஜய் 'வேலாயுதம்' படத்தின் இறுதிக்கட்ட
நடித்துவருகிறார். இந்த இரண்டு படங்களையும் முடித்த பின்னர் 'ப
விஜய்யுடன் பாவனா நடிப்பது இதுவே முதல்முறை. அதேசமயம், சீமான்
முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஜோடி சூப்பருங்கோன்னு செ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டான் சாலை



...ல் அல்டிமேட் ஸ்டார் அஜித் நடிக்கும் படம் ...50 ஆவது படம் என்பது கூடுதல் சிறப்பம் ...தரப்பு ...ர்களும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள் ...த்தில் உலகநாயகன் கமலஹாசனின் மகள் ...ராஜ் கூட்டணியே, மீண்டும் இப்படத்தில் ...ட் புரொடக்‌ஷன் வேலைகளில் இரண்டு ...தில் 'மங்காத்தா' வெளியாகும் என்று அப் ...ஏ.ஆர். முருகதாஸ் தெரிவித்துள்ளார். இந்த ...யாவின் படம் நேரடியாக மோதும் என்றும்,

## ...த்தில் நான் இல்லை

...ரயாவிடம் கேட்டதற்கு, "நான் 'விஸ்வரூம்' ...மலுடன் நான் நடிக்கவில்லை. எனது கொள் ...ான் ஒப்பந்தம் செய்த பிறகே அப்படத்தைப் ...தான் கதாநாயகி ஆக்கியிருந்தனர். ஆனால், ...போன... என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரேயா ...கிறார். ஜோடி சேர முடியலயே என்ற ஆதங்

## ...ணைகிறார் பாவனா

... நடிக்க இருக்கும் 'பகலவன்' படத்தில் ...ள்ளது. 'பாஞ்சாலங்குறிச்சி', 'இனியவளே', ...து விஜய்யை வைத்து 'பகலவன்' என்ற ... ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை ...இப்படம் தள்ளிப்போனது. இந்நிலையில், ...தொடர்பாகப் பேசினார். அவரும் படத்தைத் ...ந்ததால், காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் ...வன்'. இப்போது எல்லா வேலைகளையும் ...கிறார் சீமான். முதற்கட்டமாக படத்திற்கான ... பகலவனில் இரண்டு நாயகிகள். இதில் ...ஏற்கனவே சீமானின் 'வாழ்த்துக்கள்' படத்தில் ...நாயகியாக ஹன்சிகா மோத்வானி நடிப்பார் ...ட ஷூட்டிங்கிலும், 'நண்பன்' படத்திலும் ...'பகலவன்' படத்தில் நடிக்க இருக்கிறார். ...ான் டைரக்‌ஷனில் விஜய் நடிப்பது இதுவே ... சொல்லுவாங்களா ரசிகர்கள்?

# சினி பிட்ஸ்

நிஜ கேரக்டர்களை வைத்தே தனது படத்துக்கு திரைக்கதை உருவாக்குவாராம் டைரக்டர் தரணி

-*-*-*-

14 வருடத்துக்குப் பிறகு 'இங்கிலிஸ் விங்கிலிஸ்' என்ற இந்திப் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார் ஸ்ரீதேவி.

-*-*-*-

திருமணத்துக்குப் பிறகு நடிக்காமல் ஒதுங்கியிருந்த மீனா, ராம்சரண் தேஜா நடிக்கும் தெலுங்குப் படத்தில் மாமியார் வேடத்தில் நடிக்கிறார்.

-*-*-*-

'ராணா' படத்துக்கான 3 பாடல்களில் ஒரு பாடலை ரெக்காா்டிங் செய்து முடித்துவிட்டாராம் ஏ.ஆர். ரஹ்மான்.

-*-*-*-

அஜித் நடிக்கும் 'பில்லா-2' படத்தின் முக்கிய காட்சிகளை தூத்துக்குடியில் படமாக்க உள்ளார் இயக்குனர் சக்ரி.

-*-*-*-

'ஹவுஸ்புல்-2' இந்திப் படத்தில் முதன்முறையாக காமெடி வேடத்தில் நடிக்கிறார் அசின்.

-*-*-*-

'எதிரி எண் --3' படத்தில் ஸ்ரீகாந்த், பூனம் பஜ்வா ஆடும் ஒரு பாடலுக்கு 8 அரங்குகள் அமைக்கப்பட்டன.

-*-*-*-

தெலுங்கு நடிகர் ஜூனியர் என்.டி.ஆருக்கு கதை சொல்லி இருக்கிறார் கே.வி. ஆனந்த்.

-*-*-*-

'பலே பாண்டியா' பட இயக்குனர் சித்தார்த் அடுத்து தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய 3 மொழிகளில் படம் இயக்குகிறார்.

-*-*-*-

'ராவணன்' முன்னாவுக்கு பிடித்த பாடகர் ஹரிஸ் ராகவேந்திரா முன்னாவின் வீட்டிலுள்ள அறையில் அவரது பாடல் சிடிக்கள் தான் நிரம்பியுள்ளதாம்.

-*-*-*-

தனது ரசிகர்களுக்கு ஆக்‌ஷன் படங்கள் தான் பிடிக்கும் என்பதால் அத்தகைய கதைகளிலேயே நடிக்கிறாராம் சிம்பு.

-*-*-*-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய மக்களின் வாழ்வாதாரத்தை

## மேம்படுத்தும் யாழ். வணிகர் கழகம்

யாழ்.மாவட்டத்தில் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கத்தோடு யாழ். வணிகர் கழகம் முன்னெடுத்துச் செல்லும் தொழில் உதவித் திட்டம் தொடர்பாக கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் எம்மோடு கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.



இ. ஜெயசேகரன்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள்/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட தலா 10 குடும்பங்கள், கணவன் அல்லது மனைவியை இழந்த குடும்பங்கள் என்பவற்றைத் தெரிவுசெய்து அவற்றுக்கு வாழ்வாதார உதவிகளை செய்யத் தீர்மானித்து அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது யாழ். வணிகர் கழகம். ஒரு குடும்பத்திற்கு 30 கோழிக்குஞ்சுகள் மற்றும் அவற்றுக்கான ஆரம்பகாலப் பராமரிப்புக்கான தீவனங்கள் மற்றும் உபகரணங்கள், 15-20 வருடங்கள் பயன்படுத்தக் கூடிய கூடுகள் என சுமார் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கிவருகின்றோம்.

எமது மக்கள் யுத்தத்தின் பிடியில் சிக்கி உறவுகளை இழந்தும் அங்கவீனர்களாகவும் சொத்துக்களை இழந்தும் பாதுகாப்புத் தேடி யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். இவர்களுக்கான உதவிகளை முன்னாள் அரசாங்க அதிபர் கே. கணேஷ் கோரியிருந்தார். அன்று மெதுவாக ஆரம்பித்த பயணம் 2 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் தொடர்கிறது.



பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களாக அவலமான வாழ்க்கையை இம் மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். இவ் வறிய மக்களின் அவலவாழ்க்கை தொடராமல் அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஓர் முயற்சியாகவே இதனை ஆரம்பித்துள்ளோம்.

எமது சங்கத்தின் கீழுள்ள வர்த்தகர்களிடம் இவ்வாறான உதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போது அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டார்கள்.

வணிகர்களின் ஒத்துழைப்போடு இச் செயற்பாட்டிற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்களைத் தொடர்புகொண்டு கேட்ட போது அவர்களும் ஆர்வம் கொண்டார்கள். இத்திட்டத்திற்கு உடனடியாகவே மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விரைவாகவும் உண்மைத்தன்மையுடனும் செயற்பட்டு தமது பிரிவிலுள்ள 10 குடும்ப பயனாளிகளின் பெயர் விபரங்களைத் தந்தார்கள்.

எமது இத்திட்டம் ஆடம்பரமானதல்ல. எமது இந்த சிறு உதவி முழுமையாக மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதே எமது குறிக்கோளாக இருந்தது. இத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த, தொடர்ச்சியான தொடர்பாடல் அவதானிப்புக்களையும் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றோம். பயனாளிகள் மற்றும் அவர்களது பயன்பாடு தொடர்பாக துறை சார்ந்த அதிகாரிகளுடன் தொடர்புபடுத்தியே இதனை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களில் எமது பகுதி உற்பத்திகளே வெளி மாவட்டங்களுக்குச் சென்றதை யாரும் மறக்கமாட்டார்கள். இன்று நிலைமை மாறி, வெளி மாவட்டத்தை எதிர்பார்க்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்நிலை தொடருமானால் எமது மக்களின் வாழ்வு மாற்றமடையாது. எமது மக்களின் வாழ்வாதாரத்தை - பொருளாதாரத்தை நாமே கட்டியெழுப்ப வேண்டும். பிறரைச் சார்ந்து வாழாது நமது கால்களில் நாமே நிற்கவேண்டும். இத்தகைய சுயபொருளாதாரப் பாங்கை நிலைநிறுத்துவதற்கான எமது சிறு முயற்சியாகவே இம் முயற்சி அமைகின்றது. இதற்கு உதவுவதற்கு பணம் படைத்தவர்களும் ஏனைய வர்த்தகர்களும் முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கிறார் வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரன்.



இத் திட்டத்தை ஆரம்பித்த போது யாழ். நகரில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த வர்த்தகர் யசோதரன் தனது பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 10 பயனாளிகளுக்குமான முழுச்செலவையும் தானே பொறுப்பேற்று தயாள குணத்துடன் எமது இத்தகைய முயற்சிக்கு ஒத்துழைப்பை நல்கினார். இவரை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய வர்த்தகர்களும் பரோபகார சிந்தையுடன் முன்வர வேண்டும் என வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

எமது பிறந்த நாள், திருமண நாள் மற்றும் தாய் - தந்தையரின் நினைவாக செலவுசெய்யும் பணத்தில் ஒரு சிறு தொகுதியை இந்த மக்களுக்காக செலவிட முன்வருவோமானால் எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, யாழ். குடாநாட்டின் பொருளாதாரத்தையும் மேம்பாடடையச் செய்யலாம்.

அரசாங்கத்தினதோ அரச சார்பற்ற நிறுவனங்களினதோ உதவிகள் எதனையும் பெறாது, வர்த்தகப் பெருமக்கள் தாமாக உணர்ந்து முன்வந்து இவ்வாறானதொரு மக்களுக்கான உதவிகளை செய்யமுன்வந்துள்ளமையானது, மக்களின் துயரங்களை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டி, உதவிகளைப் பெற்று தம்மை வளர்த்துவரும் ஏனைய அமைப்பினருக்கு ஓர் எடுத்துக்காட்டானதாகும்.

எம்.நியூட்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஆண்டில் இரண்டு பொதுத் தேர்தல்கள் - 08

1959 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மறைவைத் தொடர்ந்து காலித் தொகுதியில் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த விஜயானந்த தகாநாயக்க தற்காலிகப் பிரதமராகப் பொறுப்பேற்றார். ஆனால், அவரால் ஒரு ஸ்திரமான அரசியல் நிலைப்பாட்டையோ உறுதியான ஒரு மந்திரி சபையையோ ஏற்படுத்த முடியவில்லை. காலையும் மாலையும் அமைச்சரவையில் மாற்றம் செய்தார்.

இந்த ஸ்திரமற்ற அரசாங்கத்தால் எதையும் செய்யமுடியவில்லை. ஆகையால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இந்தத் தேர்தலின் முடிவுகளின் படி ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றமையால் இலங்கையின் ஆறாவது பிரதமராக டட்லி சேனநாயக்கா தெரிவுசெய்யப்பட்டார்.

ஆனால், அவரது கட்சிக்கு பாராளுமன்றில் போதியளவு பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை. இதனால், அவரது அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்தின் போது (Throne Speech) நம்பிக்கை வாக்கெடுப்பில் (Vote of Confidence) தோற்கடிக்கப்பட்டது. இதனால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதன் பின்னர் 1960 ஜூலை மாதம் மீண்டும் பொதுத் தேர்தலுக்கு திகதி நிர்ணயம் செய்யப்பட்டது.

1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற இந்தப் பொதுத் தேர்தலின் விளைவாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றது. இந்த நிலையில், யாரை கட்சித் தலைவராகக் கொண்டு ஆட்சியமைப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பிரச்சினை எழுந்தது. இந்த நிலையில் தான் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆயுத வன்முறையால் அகால மரணமடைந்த பிரதமர் பண்டாரநாயக்க அவர்களின் விதவை மனைவியான திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கட்சியின் தலைவியாக நியமித்தது. ஆனால், திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பாராளுமன்ற உறுப்பினராக இல்லாமையால் அவரைப் பிரதமராக நியமிப்பதில் சில சட்டச் சிக்கல்கள் எழுந்தன. அதையும் நிவர்த்தி செய்யப் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வழங்கிய சோல்பரி அரசியல் யாப்பில் இருந்த குறைபாடுகளை கண்டறிந்த சிங்கள அரசியல் விற்பன்னர்கள், ஒரு புதிய பொறிமுறையை (A New Mechanism) அறிமுகப்படுத்தினார்கள். அது பிரசித்தமானது.

அதாவது சோல்பரி அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனப்பிரதிநிதிகள் சபை மட்டுமல்ல, ஒரு செனட் சபையும் உருவாக்கப்பட்டிருந்தது. ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு, பிரதிநிதிகள் பொதுத் தேர்தல் மூலம் பொது மக்களால் தெரிவுசெய்யப்பட்டார்கள். ஆனால், செனட் சபைக்கு செனட்டர்கள் (Senetors) அரசியல் கட்சித் தலைவர்களாலும் கட்சியின் செயற்குழுவாலுமே ஒற்றை மாற்று வாக்குச் சீட்டு மூலம் தெரிவுபெற்று (Nominate) நியமிக்கப்பட்டார்கள் (Appointed). இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செனட்டராக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவையே நியமித்தார்கள். பழைய சோல்பரி அரசியல் யாப்பின் படி செனட் சபையைச் சேர்ந்த இரண்டு செனட்டர்கள் மந்திரி சபையில் இடம் பெறல் வேண்டும். அதில் நீதிமந்திரி கட்டாயமாக செனட்டராக இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில், செனட்டர் என்ற பொறுப்பை ஏற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, அங்கிருந்தவாறே பிரதமர் பதவியையும் பொறுப்பேற்றுக் கொண்டார். இலங்கை அரசியல் சூழ்நிலையில் இது ஒரு திருப்புமுனையாகும். அவரே 'உலகின் முதல் பெண் பிரதமர்' என்ற கௌரவத்தையும் பெற்றுக்கொண்டார்.

1961ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி (01.01.1961) தொடக்கம் வடக்கு - கிழக்கில் சிங்கள மொழி மூலம் நிர்வாகச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை ஸ்ரீமாவோவின் அரசாங்கம் வெளியிட்டது. இது தமிழ்ப் பிரதேசங்களில் பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக அரசாங்க நிர்வாகம் இடம்பெறும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள கச்சேரிகளின் முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டங்களை மேற்கொள்ளப் போவதாக அகில இலங்கை தமிழரசுக் கட்சி அறிவித்தது.

(தொடரும்)

## சட்டமும் சமூகமும் 30





வழக்கறிஞர்
பொன். பூலோகசிங்கம்

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# மண்டைதீவுக்கு மின்சாரம் எப்போது ...?

மண்டைதீவுப் பகுதியில் யுத்த அனர்த்தத்தால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெற்றுத் தருமாறு இப்பகுதி மின் பாவனையாளர்கள் மற்றும் இப்பகுதி பொது அமைப்புக்கள் மிக நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இலங்கை மின்சார சபையின் யாழ். கிளை இதற்கான எதுவித நடவடிக்கையும் எடுக்காது காலத்தை வீணடித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அமைதியான சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வன்னிக்கும் மற்றும் நலன்புரி முகாம்களுக்குச் சென்ற மக்கள் தங்கள் சொந்த இடமான மண்டைதீவுக்கு குடும்பமாக திரும்பிவந்து குடியேறியுள்ளார்கள்.

இவர்களது பல்வேறுபட்ட அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாது உள்ள போதும் தமது சொந்த மண்ணில் வாழ்கின்றோம் என்ற மனத்திருப்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதி மீனவர்கள் தாங்கள் தினசரி பிடிக்கும் மீன்களில் விற்பது போக எஞ்சியதை மறுநாள் பாதுகாப்பாக வைத்து எடுப்பதற்குக் குளிரூட்டிகள், மின்சாரம் இன்றி இயங்காதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தாம் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், மின்சார வசதி இருந்தால் குளிரூட்டி மூலம் எஞ்சியுள்ள மீன்களை பாதுகாக்கமுடியும் என்றும் மீனவர் ஒருவர் வெறுப்போடு கூறுகிறார்.

இதேவேளை, மின்சார வசதி இன்மையால் மாணவர்கள் குப்பி விளக்குகளில் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதேவேளை, ஒரு சிலர் மின் பிறப்பாக்கியின் (ஜெனரேட்டர்) உதவியுடன் மின் வெளிச்சம் பெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மின்சார வசதி இன்மையால் இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்களும் அதிகரிக்கின்றன. இனந்தெரியாத திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டதைத் திருடிச்செல்கின்றார்கள். கோழிக் களவு முதல் நகைத்திருட்டு வரை நாளாந்தம் நடப்பதால் மக்கள் போதிய நித்திரை இன்றி பயத்தோடும் பீதியோடும் விழித்திருக்கின்றார்கள்.

மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு மின்சாரம் வசதி இல்லாததால் கணினிக் கல்வி கற்கமுடியாதுள்ளதாக இங்கு வாழுகின்ற கல்வி கற்கும் மாணவர்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர். எங்கும் - எதிலும் கணினிமயமாக மாறிவரும் இக் காலகட்டத்தில் இப்பகுதி மாணவர்கள் பாடசாலைக் காலத்தில் கணினி கல்வியைக் கற்கமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

யுத்தத்தால் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீண்டும் பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிவந்த போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இவ்வூர்ப் பெரியவர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, அருகில் உள்ள அல்லைப்பிட்டிக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கிய மின்சார சபை, மண்டைதீவுக் கிராமத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றதா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

போர் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்கள் இன்னமும் போர்க் காலச் சூழலில் இருந்ததைப் போலவே இருக்கின்றன. குடிதண்ணீர், மின்சாரம், வீதிப் புனரமைப்பின்மை போன்ற பிரச்சினைகள் மிக நீண்ட காலமாக த் தீர்க்கப்படாமல் இப்போதும் இழுத்தடிக்கப்பட்டே வருகின்றன.நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள அரசாங்கம், இவ்வாறு கிராமங்களில் நிலவும் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்துத் தீர்க்க முன்வர வேண்டும்.

★ வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திவிநெகும' பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதில் மாத்தளை மாவட்டம் முன்னணியில்

## அரச அதிபர் மீகமுல்ல கூறுகிறார்

இறத்தோட்டை,

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'திவிநெகும' பத்து இலட்சம் குடும்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் மாத்தளை மாவட்டம் முன்னணியில் இருப்பதாக மாத்தளை அரச அதிபர் கே.எச்.ஏ. மீகமுல்ல தெரிவித்தார்.

திவிநெகும திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் சுயநலவிருப்பு வெறுப்புகளை முன்வைத்து பொதுத் திட்டத்தை குழப்பியடிக்கும் முயற்சிகளை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

மாத்தளை செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, 'திவிநெகும' வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முதற்கட்ட தொகையாக 50 மில்லியன் ரூபா மாத்தளைக்குக் கிடைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஒரு இலட்சத்து 35 ஆயிரம் தென்னைப் பயிர் செய்கைக்காக 85 இலட்சம் ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த தொகையைக் கொண்டு மாவட்டத்திலுள்ள 54 ஆயிரத்து 500 குடும்ப பொருளாதார அலகுகளை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு இப்போது அதிகாரிகள் கைகளில் விடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் இது பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளதா? பிரதேச செயலாளர்கள் தமது பிரிவிலுள்ள கிராம சேவகர்கள், விவசாய மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் இவ் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு ஒவ்வொரு தனி நபரினதும் பெயர், முகவரி அவர் தெரிவு செய்துள்ள பொருளாதார மேம்பாட்டு அலகு போன்ற சகல விபரங்களையும் எனக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

அரச அதிபர் என்ற வகையில் நான் இது வரை 2400 குடும்பங்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் நிலை மற்றும் தேவைகளைக் கேட்டறிந்து திவிநெகும திட்டம் பற்றி விளக்கமளித்து அவர்களின் குடும்ப பொருளாதார மேம்பாட்டுக்கான அலகைத் தெரிவு செய்ய உதவியுள்ளேன். இவ்வாறான முயற்சிகளை பிரதேச செயலாளர்களும் மேற்கொள்ள வேண்டும்.

முதற்கட்டமாக நமக்குக் கிடைத்துள்ள நிதி நேரடியாக கிராம சேவகர்கள் மூலம் சம்பந்தப்பட்ட குடும்பங்களைச் சென்றடையும். அந்நிதி திட்டமிட்டப்படி பயன்படுத்துவதை உறுதி செய்யும் பொறுப்பும் கிராம சேவகர்களுக்கே உண்டு. இதில் கொந்தராத்து முறையோ கமிஷன் முறையோ கிடையாது. ஒவ்வொரு சதமும் நேரடியாக மக்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். அரசின் சேவைகள் வெறுமனே பத்திரிகையில் மாத்திரம் இல்லை நேரடியாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்றார்.

மாத்தளை மாவட்டத்தில் பெரிய வெங்காய உற்பத்தி தற்போது லக்கல- பள்ளேகம பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக பிரதி விவசாய அபிவிருத்தி பணிப்பாளர் பிரசன்ன பல்லேமுல்ல இங்கு தெரிவித்தார். 500 ஏக்கரில் மேற்படி பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மத்திய மாகாண சபை இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளதாகவும் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை வெங்காயம் இலவசமாக வழங்கப்படுமென்றும் மேலும் தேவையான ஒன்றரை கிலோ விதை வெங்காயத்துக்கு 17,500/= ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எல்கடுவ, பலகடுவ போன்ற பகுதிகளில் பாரிய அளவில் பயிர்களை அழித்து வரும் குரங்குகளைப் பிடித்து வனப் பிரதேசங்களில் கொண்டு சென்று விடுவதற்காக அரசு மாத்தளை மாவட்டத்துக்கு 10 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் கைது

செங்கடகல,

கேகல்ல நகரில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற 55 இலட்சம் ரூபா கொள்ளைச் சம்பவத்தில் தொடர்புடைய இரு சந்தேகநபர்களை கேகல்ல பொலிஸார் கைது செய்துள்ளதுடன் கொள்ளைப் பணத்தில் 22 இலட்சம் ரூபாவையும் மீட்டுள்ளனர் என கேகல்ல பொலிஸ் தலைமையக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கேகல்ல நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் இரவு வேளை சுவரின் ஜன்னல் வழியூடாக கட்டிடத்திற்குள் புகுந்து இனந்தெரியாதவர்களால் சுமார் 55 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என வர்த்தகர் ஒருவர் கேகல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டையடுத்து கேகல்ல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரியலால் தஸநாயக்காவின் ஆலோசனைக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்திற்குள் இரு சந்தேகநபர்களை கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் சுமார் 22 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையர்களிடமிருந்து மீட்டுள்ளனர். கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள், பெறுமதியான கையடக்கத் தொலைபேசி நான்கு, சிம் கார்ட்டுகள் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

# மட்டு. மாவட்டத்தில் விளையாட்டு துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## -கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன்

களுவாஞ்சிக்குடி,

மட்டக்களப்பு மாவட்டத்திலே பலரது தியாகங்களினாலும் அர்ப்பணிப்புக்களாலும் கடந்த காலங்களில் விளையாட்டுத் துறை மிக உயர் மட்டத்தினை அடைந்திருந்தன. அந்நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டுமென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக் கழகம் நடத்திய ஆரையம்பதி ஏ.பி. எல். கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், சர்வதேச போட்டிகள் நடைபெறுகின்ற வேளைகளில் அதனை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்ற போது விதிமுறைகள், பயிற்சிகள் எதுவுமின்றி வீதிகளிலும் வீடுகளிலும் மற்றும் மூலை முடுக்குகளிலும் அவ்விளையாட்டை விளையாடுவது பொழுது போக்கு அம்சமாக விளையாட்டுத்துறை மாறியிருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இது வேதனைக்குரிய விடயமாகும்.

ஒரு சமூகத்தின் இருப்பு, அதன் அடையாளப்படுத்தல் மற்றும் தனித்துவம் என்பவற்றை முதன்மைப்படுத்தியதாகவே விளையாட்டுத்துறை விளங்குகின்றது.

1996 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலக கோப்பையினை இலங்கை கைப்பற்றியதன் பின்னர் உலக நாட்டின் ஒவ்வொரு மக்களும் இலங்கையினை உற்றுப் பார்க்கக் கூடிய நிலை ஏற்பட்டது.

அதேபோன்று உதைபந்தாட்டத்தில் பிரேசில், பிரான்ஸ் போன்றன பேசப்படுகின்றது என்றால் இதற்கு விளையாட்டுத் துறையின் பங்கும் அளப்பரியது. கிராமப் புறத்தில் இருந்த சனத் ஜயசூரிய, சுசந்திக்கா ஜயசிங்க ஆகியோர் சர்வதேசம் வரை பேசப்படுகின்றனர் என்றால் அவர்களையும் புடம்போட்டுக் காட்டியது விளையாட்டுத்துறையே.

கிழக்கு மாகாண முதலமைச்சரும், மாகாண சபையும் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. வெறும் மைதானங்களை அமைப்பதும் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதும் விளையாட்டுத்துறை வலுவாக்கத்துக்கு களம் கொடுக்கும். ஆனால் இளைஞர்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்படுமிடத்தே விளையாட்டுத்துறையினை ஸ்திரப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு இணக்கம்

## -அமைச்சர் ஹக்கீம் சுகாதார அமைச்சருடன் பேச்சு

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்வதற்கும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும் வரவு செலவு திட்டத்தின் மூலமும் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டும் பெருமளவு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமிடம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நவீன சத்திர சிகிச்சை கூடம் அவசர சிகிச்சை பிரிவு என்பவற்றை விரைவில் நிர்மாணித்து தருமாறு அமைச்சர் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளையும் சுகாதார அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் சுகாதார அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் கலந்து கொண்டார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் எண்பது மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் சிகிச்சை பிரிவு கட்டிடத் தொகுதி எதிர்வரும் 28 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும். இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுகாதார அமைச்சருடனான சந்திப்பின் போது பொத்துவில் ஆஸ்பத்திரிக்கு விசேட மகப்பேற்று நிபுணர், விசேட சிறுவர் மருத்துவ நிபுணர் ஆகியோரை நியமிக்குமாறு அமைச்சர் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

மூதூர், சம்மாந்துறை, பாலமுனை உட்பட ஏனைய கிழக்கு மாகாண வைத்தியசாலைகளை வெளிநாட்டு நிதியுதவிகளைக் கொண்டு அபிவிருத்தி செய்வதற்கும் சுகாதார அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 28 ஆம் திகதி கல்முனை பிராந்திய சுகாதார அத்தியட்சர் அலுவலக புதிய கட்டிடத் திறப்பு விழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ். குடாநாடு இன்று கலாசாரச் சீரழிவுகளின் நடுநாயகமாகத் திகழ்கின்றது. கடந்த 30 வருடங்களாக வாட்டியெடுத்த யுத்தத்தின் சுவடுகள் இன்னும் மறையவில்லை. வன்னியில் இடம்பெற்ற யுத்தப் பிரளயத்தில் சிக்கிச் சிதறுப்பட்ட உறவுகளின் கண்ணீர் இன்னும் காயவில்லை. அவர்கள் தம் மனங்களிலுள்ள துயர வடுக்கள் இன்னும் ஆறவில்லை. உறவுகளின் கண்ணீர் காவியங்களை கேட்பதற்குக் கூட எம்மிடம் பொறுமையில்லை. யுத்தத்தின் எச்சங்களாகிவிட்ட விதவைகள், பெற்றோரை இழந்த சிறார்கள் மீதான அக்கறையும் எமக்கில்லை. அப்போ, எங்கே எதை நோக்கி நாம் பயணிக்கின்றோம்?

யாழ். குடாநாட்டு மக்களின் சிந்தனைகள், செயற்பாடுகள் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. தனது சொந்த வாழ்வில் நடக்கும் பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்கவே நேரமில்லை. 'பணம் பணம்' என்று பிணம் தின்னும் கழுகுகளாக பறந்து பறந்து பணத்தைத் தேடுவதிலேயே குறியாக இருக்கின்றனர்.

இந் நிலைமையினால் குடும்பக் கட்டமைப்புக்கள் சிதிலமடைந்து போகின்றன. தமது பிள்ளைகளின் நலன்களில் கூட அக்கறையற்றவர்களாக பெற்றோர்கள் மாறுகின்றனர். ஈரைந்து மாதங்கள் கருவறையில் தாங்கி பிள்ளையை பிரசவித்தவுடன் தமது கடமை முற்றுப்பெற்று விட்டதாக இன்றைய பெற்றோர்கள் கருதுகின்றனர். ஒரு பிள்ளையை கருவில் சுமப்பதை விட பெற்ற பிள்ளையை சமூகத்தில் நன்நிலைக்குக் கொண்டுவர வேண்டிய பாரிய பொறுப்பு தாய், தந்தையரையே சாரும். இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகளைப் பொறுத்தவரை பெற்றாரின் அரவணைப்பு என்பது குறைவாகவே இருக்கின்றது. கணவனும் மனைவியும் சேர்ந்து உழைத்தால் தான் இன்று குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நிலைக்கு எமது நாட்டின் விலைவாசியுள்ளது.

முன்னர் குடும்பத் தலைவனது உழைப்பே போதுமென்ற நிலை. ஒருவரது உழைப்பை நம்பியே பல குடும்பங்கள் சீவியம் நடத்திய காலம் அது. முன்னர் இருந்த குடும்பக் கட்டமைப்பு காத்திரமானது. ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள், அதாவது கூட்டுக் குடும்ப முறை அக்காலத்தில் காணப்பட்டது. ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. இந் நிலையில், அக்குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே ஒற்றுமையாகவும் கட்டுக்கோப்பாகவும் வாழ்ந்துவந்தனர். இக்குடும்பங்களுக்கு உழைக்கின்ற ஆண் ஒருவரே அதிகாரம் செலுத்தும் நிலை காணப்பட்டது. இருந்தும் பெண்களுக்கும் உரிய இடம் கொடுக்கப்பட்டது. வயதில் மூத்த பாட்டி எல்லாக் குடும்பங்களையும் ஒன்றிணைத்து கூட்டுக் குடும்பங்களின் கட்டுக்கோப்பு குலையாமல் பார்த்துக்கொள்வார். பாட்டியின் சொல்லுக்கு குடும்பங்களிலுள்ள அனைவருமே மதிப்புக் கொடுப்பர். இதனால், குடும்பங்களுக்கிடையிலான பிணக்குகள், உட்பூசல்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

ஆனால், இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டு விட்டது. கூட்டுக்குடும்பமாக வாழ்வதென்பது முயற்கொம்பாகவே காணப்படுகின்றது. ஒரு குடும்பத்துக்குள்ளேயே பிணக்குகள், பூசல்கள் வலுவடைந்து வருகின்ற வேளை கூட்டுக் குடும்பமாக வாழ்வதை கற்பனை செய்து கூட பார்க்கமுடியாதுள்ளது. கணவன் - மனைவிக்கிடையில் இடம்பெறும் சண்டைகள் இறுதியில் விவாகரத்துவரை செல்கின்றன. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அனுசரித்துப் போகும் மனப்பான்மை அருகி வரும் நிலையில் குடும்பச் சண்டைகள் மேலோங்கி வருவதைத் தடுக்கமுடியாதுள்ளது.



இவ்வாறு விவாகரத்துப்பெற்ற கணவன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யத் தலைப்படுகின்றான். இதற்கு எமது சமூகக் கட்டமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், விவாகரத்துப் பெற்ற பெண் இன்னொரு ஆண் துணையுடன் வாழ எமது சமூகக் கட்டமைப்பு அனுமதிப்பதில்லை. தற்போது அது.......?

இவ்வாறான பெண்களில் சிலர் தமது உணர்வுகளுக்கு வடிகாலால் தேடியும் வருமானத்துக்காகவும் உடற்சுகத்துக்காகவும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் உடலியல் ரீதியான தொடர்புகளைப் பேண வேண்டிய துர்ப்பாக்கிய நினைக்குத் தள்ளப் படுகின்றனர். தள்ளப்பட்டுள்ளனர்.

இன்றுள்ள நிலையில் நவீன தொடர்பாடல்களின் வளர்ச்சி அதிகரித்துக் காணப்படும் நிலையில் கலாசாரச் சீரழிவுகள் வெகு சுலபமாக அரங்கேறுகின்றன.

முன்னரெல்லாம் பெண்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டிருந்தனர். முக்கிய நிகழ்வுகள், கொண்டாட்டங்கள், ஆலயத் திருவிழாக்கள் என சில குறிப்பிட்ட நிகழ்வுகளிலேயே பெண்களின் தரிசனத்தை அதுவும் தமிழ்க் கலாசாரத்தை பிரதிபலிக்கும் நடை, உடை, பாவனைகளில் காணமுடியும். ஆனால், இன்று பெண்கள் இல்லா இடமே கிடையாது. எந்தவொரு வேலைத்தலத்திலும் பெண்களின் பிரசன்னம் கண்டிப்பாக இருக்கும். ஒருசில தொழில்துறைகளைத் தவிர ஏனைய தொழில்தலங்களில் பெண்களே முக்கிய பொறுப்புக்களில் இருக்கின்றனர். பெண்களை சில பொறுப்புக்களில் இருத்தினால் பல காரியங்களைச் சாதிக்கலாம் என்பது ஒரு சில ஆண் வர்க்கத்தினரின் கணிப்பு. எனவே, பெண்களை முன்னிலைப்படுத்தி திரைமறைவிலிருந்து சில அதிகாரிகள் காய்களை நகர்த்துகின்றனர். இதற்கு பெண்கள் பலிக்கடாவாக்கப் படுகின்றனர். தமது காரியத்தைச் சாதிக்க முனையும் அதிகாரிகளுக்கு விசுவாசமாக நடக்கும் பெண் அதிகாரிகளுக்கு அல்லது காரியம் வெற்றிகரமாக அமைவதற்கு ஒத்துழைத்த பெண் அதிகாரிகளுக்கு பிரதிபலனாக சில சலுகைகளை வழங்குகின்றனர். இத்தகைய அற்ப சலுகைகள் கிடைத்த பெருமையில் மேலும் அந்த மேலதிகாரிகளுக்கு தமது விசுவாசத்தைக் காட்ட முயல்கின்றனர். இந்த விசுவாசம் இறுதியில் சில அதிகாரிகளின் உடற்பசியை நிறைவேற்றுவது வரை சென்று முடிகின்றது. இவற்றை வெளிப்படையாகச் சுட்டிக்காட்ட முயல்வது வம்பை விலைக்கு வாங்குவதாகவே முடியும். எனவே தான் சில விடயங்களை நாசூக்காகச் சொல்லவேண்டிய தேவை எழுகிறது.

இன்று பல உயர் பதவிகளை பெண்களே அலங்கரிக்கின்றனர். அதுமட்டுமன்றி, வியாபார நோக்குடைய நிறுவனங்களில் கவர்ச்சிப் பொருளாக பெண்களை பாவிக்கின்றனர். குறிப்பாக அழகுசாதன நிலையங்கள், ஆடையகங்கள் தொடங்கி வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் வரை பெண்களை காட்சிப் பொருட்களாக்கி குறைந்தளவு ஊதியத்தில் தமது வியாபார நடவடிக்கைகளை கச்சிதமாக நிறைவேற்றுகின்றனர்.

அத்துடன், தொழில் வழங்கும் அதிகாரிகளாலும் சக ஊழியர்களாலும் பாலியல் ரீதியான தொந்தரவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

முன்னர் பெண்களின் இயல்பான நடமாட்டத்திற்கும் இருப்புக்கும் ஏற்ற சூழல் இருந்தது. இதனால், ஆண்களும் சரி பெண்களும் சரி அவர்களது வாழ்க்கை வரன்முறை வரையறுக்கப்பட்ட நிலையில் இருந்தது. அந்த வரன்முறைகளை விரும்பியோ விரும்பாமலோ மீறினால் கடுமையான சட்டங்கள் அவர்கள் மீது பாய்ந்தன. இதனால், தமிழ் மக்களது கலாசாரம் மிக்குயர் ஸ்தானத்தில் இருந்தது. எமது கலாசார விழுமியங்கள் உலகிலுள்ள பிற இனத்தவர்களால் வியந்து போற்றப்பட்டன. ஆனால், இன்றைய சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது.

மேற்கத்தைய கலாசாரங்களை முழுமையாக அப்படியே உள்வாங்கி ஆண்களும் சரி, பெண்களும் சரி கண்டதே காட்சி கொண்டதே கோலம் என தான் தோன்றித்தனமான முறையில் நடந்துவருகின்றனர். இதன் விளைவாகவே தேவையற்ற கர்ப்பங்களும் வீதியோரத்தில் வீசி எறிந்துவிடப்பட்டுக் கிடக்கும் குறைமாத சிசுக்களும் என பட்டியல் நீண்டுசெல்கின்றன.

அண்மையில் இணையத்தளம் ஒன்றில் நல்லூர் - கோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் அமைந்துள்ள பூங்கா ஒன்றில் காதல் ஜோடி ஒன்றின் விரசக் காட்சிகள் அடங்கிய ஒளிப்பதிவுக் காட்சி பதிவேற்றப்பட்டிருந்தது. அந்த பூங்கா காதலர்களுக்கென்று பிரத்தியேகமான இடம், நேரம் என்பவற்றை ஒதுக்கி வருமானத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு கலாசாரச் சீரழிவுகளுக்கு தூபமிட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிரவும், யாழ். நகரப் பகுதியில் இயங்கும் சில தனியார் விடுதிகள் மற்றும் 'நெற்கபே' எனப்படும் இணையச் சேவைகளை வழங்கும் நிலையங்களிலும் இவ்வாறான கலாசார துர்நடத்தைகள் அதிகரித்து வருவதாகப் பொது மக்கள் சிலர் தெரிவிக்கின்றனர். எனவே, கலாசாரச் சீரழிவான துர் நடத்தைகளில் ஈடுபடுவோருக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்போர் மீது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். இல்லையேல், தென்னிலங்கை போல் இங்கும் விபசார விடுதிகள், இரவுநேர கேளிக்கை விடுதிகள் முளைப்பதை எவராலுமே தடுக்கமுடியாது போய்விடும் என்பதே நிதர்சனமாகும்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முதியோருக்கு நிழல் கொடுக்கும்

# சிவபூமி முதியோர் இல்லம்

வழக்கம்பரை - தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தில் அமைந்து உள்ள 'சிவபூமி' முதியோர் இல்லமானது தமது வயோதிபக் காலத்தை மகிழ்வாகவும் ஆரோக்கியமாகவும் ஆன்மிக சிந்தனையுடனும் கழிக்கவிரும்பும் முதியவர்களுக்கு ஒரு சிறந்த வதிவிடாக இருந்துவருகிறது. முப்பத்தொரு பெண்களும் பதினெட்டு ஆண்களுமாக இங்கே தங்கியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், மருத்துவம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளோடு அக வழிபாட்டுக்கு ஆலயம், அறிவைப் பெருக்குவதற்குப் படிப்பகம், பொழுதுபோக்கிற்கு தொலைக்காட்சி, ஆறுவதற்குப் பூந்தோட்டம், உடல் உழைப்புக்கு வாழைத்தோட்டம் என்று பல்வேறு உள்ளக அமைப்புக்களுடனும் திருப்திகரமான முறையில் இந்த இல்லம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் இல்லத்தின் பொறுப்பாளராகப் பணியாற்றுகின்ற தர்மதேவி நடராஜா எம்மை அன்புடன் வரவேற்று, இல்லத்தின் செயற்பாடுகளை விளக்கியதோடு வளாகம் முழுவதையும் சுற்றிக் காண்பித்தார். 'சிவபூமி' அறக் கட்டளையின் தலைவரும், சுன்னாகம் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முதல்வரும், தெல்லிப்பழை - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் பதவியையும் அலங்கரிப்பவரான 'செந்தமிழ் ஞாயிறு', 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகனின் எண்ணத்தில் உதித்ததே இந்த முதியோருக்கான நிழல்தரும் மரம். அங்குள்ள பெரியவர்களோடு அளவளாவிய போது உணர்ச்சி மேலிட்ட நிலையில் கண்ணீர் மல்க அவர்கள் செஞ்சொற் செல்வருக்கு தமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

2007ஆம் ஆண்டு அன்றைய காலப் பகுதியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த க. கணேஸால் திறந்து வைக்கப்பட்ட இவ் இல்லத்திற்கு சுன்னாகம், கந்தரோடை - ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவரும், தற்போது அமெரிக்காவில் வசித்துவருபவருமான கே. பாலச்சந்திரன் தனது உடைமைகளையும் சொத்துக்களையும் மனமுவந்து அர்ப்பணித்து பெருந் தொண்டாற்றிப் பணிபுரிந்துள்ளார்.

முதியோர் தமது வாழ்வின் இறுதிக் காலங்களில் படும் அவஸ்தைகளையும் அவர்களுக்கு இருக்கும் ஏக்கங்களையும் ஆசாபாசங்களையும் உணர்ந்தவராக இவ்வாறான ஆறுதல் தரும் இல்லத்தின் தேவை குறித்த சிந்தனை தனது மனதில் எழுந்த விதத்தை ஆறு. திருமுருகன் பின்வருமாறு விபரிக்கின்றார்:

எம் மண்ணில் வாழும் ஆதரவற்ற முதியோருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற சிந்தனையை என் மனதில் பதிய வைத்தவர் 'சிவநெறிக் காவலர்' அமரர் 'மில்க்வைற்' தொழிலதிபர் கனகராசா அவர்களே. அப் பெரியார் நோயுற்று இருந்த வேளை அவரைப் பார்ப்பதற்கு தொடர்ந்து சென்றுவந்தேன். முதுமைக் காலத் தனிமை பற்றிய துன்பத்தை உணர்ந்துகொண்டேன். பிரபல எழுத்தாளர் அ.செ. முருகானந்தன் அலைந்து திரிந்து இறுதியில் திருகோணமலை, அலஸ்தோட்ட - கத்தோலிக்க சகோதரிகளின் இல்லத்தின் தஞ்சமடைந்து வாழ்ந்தார். அவர் எங்கு உள்ளார் எனத் தெரியாது அவரது இலக்கிய நண்பர்கள் அவர் போரில் இறந்ததாகக் கருதி அவருக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தினர்.

தனது அஞ்சலிக்கூட்டச் செய்தியைத் தானே பத்திரிகையில் படித்து அழுதவர் அ.செ. முருகானந்தன் அவர்கள். தான் உயிரோடு இருப்பதை பத்திரிகைகளுக்கு அறிவித்தார். அவரைப் பார்ப்பதற்காக அலஸ்தோட்டத்திற்குச் சென்றேன். என்னை ஆரத்தழுவி கண்ணீர் மல்கி அழுதும் விட்டார். தன்னை அழைத்துச்செல்லுமாறு வேண்டினார். ஊரில் போய்ச் சாகவேண்டும் என்று அழுதவர், மறுநாளே கதிரையில் அமர்ந்தநிலையில் இறந்தார். அலஸ்தோட்டக் கடற்கரையில் சிறு கிடங்கு வெட்டி அவரை அடக்கம் செய்தபோது அருகில் நின்றவன் யான். அன்று தொடக்கம் முதியோர்களைப் பேணக் கூடிய நல்லதோர் இல்லம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. பல இரவுகள் கற்பனையில் முதியோர் இல்லத்தைக் கட்டினேன். நிஜத்தில் அல்ல. சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கட்டப்பட்டு நன்முறையில் இயங்கிவரும் வேளை, அடுத்த திட்டமொன்ற உள்ளது. அது முதியோர் இல்லம் என உரைத்தேன். என் மீது மிகவும் அன்புடைய 'சிவபூமி' நிர்வாக சபை உறுப்பினர்கள் என்னைப் பார்த்து, ''போதும் போதும்'' என்று புத்தி கூறினார்கள். என் உள்ளம் ஓயவில்லை. சுழிபுரம் - வழக்கம்பரை அம்மன் கோவிலுக்குப் பல தடவைகள் சொற்பொழிவு ஆற்றச் சென்றமையால் அவ்வூர் மக்கள் பலரை யான் அறிவேன். திடீரென ஒரு நாள் ச. கஜமுகன் என்ற இளைஞன் என்னைத் தேடிவந்தான் ''ஐயா! எங்களது சொந்தக் கட்டடம், காணி போன்றவற்றை விற்கப் போகிறோம். சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் அமைப்பதற்கு இவை பொருத்தமாக இருக்கும்.'' என்றார். ஐந்து சதம் கூட கையில் இல்லாத நிலையில் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டேன். அவரோ விடுவதாக இல்லை. வழக்கம்பரை வந்தேன். ஆசிரிய தீபம் சி. ஞானச்சந்திரமூர்த்தியையும் (இளைப்பாறிய ஸ்கந்தவரோயாக் கல்லூரி ஆசிரியர்) அழைத்துக்கொண்டு காணிபார்க்கச் சென்றேன். பாழடைந்து கிடந்த நிலையில் ஆடைக் கைத்தொழிற்சாலையை அங்கு காண நேர்ந்தது. என் மனதில் ஆளப் பதிந்த முதியோர் இல்லம் பற்றிய எண்ணம் மீள விரைவுபடுத்தியது. பெறுமதி நூறு இலட்சத்திற்கு மேல் என்றதும் ''என்ன செய்வேன்..?'' மனப்போராட்டம். இறைவனை மன்றாடினேன். வழியைக் காட்டு என்று. எதிர்பாராது அமெரிக்கா வாழ் அன்பரான கிருஷ்ணர் பாலச்சந்திரன் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டார். பல விடயங்களைப் பேசி விட்டு முதியோர் இல்லம்

**← சந்திப்பும் நேர்காணலும் →**
**ஸ்ரீ எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

(28ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் வெளிப்பாடே சடங்கு ஆற்றுகை



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

கிராமத்தின் அல்லது காட்டின் மத்தியிலுள்ள குறிக்கப்பட்ட மரம் ஒன்றே கோயிலுக்குரிய நிலையாகும். மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக ஆடிய சமயச் சடங்கு என்பது, வேட்டையாடிய சமூகத்தினர் வேளாண்மை செய்து வாழ்ந்த காலத்தில் அவர்களின் தேவையை கருதி செய்யும் சடங்காக காணப்படுகின்றது. ஐதீகக் கதைகளை உள்ளடக்கிய சமயச் சடங்கு என்னும் போது மக்களுக்கு நல்வாழ்வையும் பாதுகாப்பையும் வேண்டி நோய்களைத் தீர்க்கும் தெய்வங்களை மகிழ்ச்சிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன.

நாடக நிகழ்ச்சிகள் தனியாக பிரியத் தொடங்கிய சமயச் சடங்கு என்னும் போது இயக்குபவன் வேறாகவும் நடிகன் வேறாகவும் பிரியும் முறையும் ஐதீகக் கதைகள் அபிநயப்படுவதும் சேர்ந்ததனால் நாடகம் தனி ஒரு கலையாகப் பிரியும் தன்மை ஏற்படுகிறது. சமயக் காரணங்கள் சார்ந்த நாடகங்கள் என்னும் போது பெருந்தெய்வக் கோவில்களில் நடைபெறும் சூரன் போர், யம சங்காரம், ஹம்சன் போர் போன்றவற்றினை குறிப்பிடலாம்.

சடங்குகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடு கொண்டதாயினும் அது பின்வரும் பொது இயல்புகளை கொண்டிருப்பதை அவதானிக்கலாம்:

ஒரு குடும்பம், சாதி என்பனவற்றுக்கு மட்டும் உரியதாகவும் பிராமணர் அல்லாதோரால் பூசை செய்யப்படுவதாகவும் உயிர்ப் பலியினை பெரிதும் ஏற்பதாகவும் நித்திய வழிபாடு அற்றதாகவும் காணப்படுகின்றது. சடங்குகளானவை உத்தரவுபெற்றே நிகழ்த்தப்படுகின்றன.

ஆசாரங்கள் பெரிதும் அற்றதாகவும் பெரிதும் மந்திர உச்சாடனம் செய்யப்படுவதாயும் பகைமையை அழிக்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன.

சடங்கு சார் வழிபாட்டு தெய்வங்களாக அம்மன், காளி, மாரியம்மன், பேச்சியம்மன், கடல் நாச்சியம்மன், கண்ணகி, கொற்றவை முதலான பெண் தெய்வங்களும் வைரவர், ஐயனார், கருப்பண்ணசாமி, முனியாண்டி, அண்ணமார், பெரியதம்பிரான், வீரபத்திரர் முதலான ஆண் தெய்வங்களும் வழிபடு தெய்வங்களாக உள்ளன.

சடங்கு சார் நிகழ்வுகளிலே சடங்குகளை நிகழ்த்துபவர்கள் ஆற்றுப்படுத்துவோர் எனப்படுகின்றனர். பிரதேச ரீதியாக இவர்களால் ஆற்றப்படும் சடங்குகள் சார் வழிபாட்டு முறைகளை நோக்குவோம்.

1. பூசாரி வழிபாட்டு முறை
2. கட்டாடி மார் வழிபாட்டு முறை
3. கப்பூகனார் வழிபாட்டு முறை
4. ஆதிக்குடிகள் வழிபாட்டு முறை
5. வேறு வழிபாட்டு முறைகள்

என்பனவாகும்.

## முடிவுரை:

சடங்குகள் பற்றிய மதிப்பீட்டின் ஊடாக சடங்கு என்பது ஒரு குழுமம் சார்ந்ததது. தனிப்பட்ட சாதிய அமைப்பு சார் சமூகங்களால் ஆற்றப்படுகின்றது. ஒவ்வொரு சமூகங்களுக்கும் இடையிலும் ஆற்றப்படும் சடங்குகள் அதன் தன்மை, உள்ளடக்கம் என்பனவற்றை பொறுத்து வேறுபடுகின்றன. சடங்கானது நம்பிக்கையின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டது.சமூகத்தின் தேவைக்காக ஆற்றுகை செய்யப்படுகின்றது. உண்மையான நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. சடங்கு என்பது சமூகத்தை ஒன்றிணைக்கும் சாதனமாக காணப்படுகின்றது.

எஸ்.ரி. குமரன்

# HOME டிப்ஸ்

- மசித்த வாழைப் பழத்தை, முட்டை வெண் கருவோடு கடைந்து கடைந்த கிறீமிற்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.
- பழச்சாறு பேக்கை பேக் செய்து வரும் டெட்ரா பேக்கைக் காலி செய்த பிறகு அவற்றை ஐஸ் ட்ரேயாகப் பயன்படுத்தலாம். பார்ட்டி சமயங்களில் அதிகப்படியான ஐஸ் தேவையை இவை பூர்த்திசெய்யும்
- தேங்காயைப் பெரிய துண்டுகளாக வெட்டவும். தண்ணீரில் போட்டுக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும் தண்ணீரை அடிக்கடி மாற்ற வேண்டும். தேங்காய் கெடாமல் அப்படியே இருக்கும்.
- சாக்லேட் காகிதங்களை ஊறுகாய் ஜாடியில் அவற்றை வைத்து பிறகு மூடினால் ஊறுகாயில் பூஞ்சணக் காளான் படியாது.
- 5 செ.மீ. நீளத் துண்டுகளாகச் செய்தித்தாளை வெட்டி அவற்றைத் தனித்தனியாகச் சுருட்டவும். அவற்றை ஒவ்வொன்றாக இணைத்துச் சமையலறையில் தொங்கவிடவும். ஒவ்வொரு வளையத்தினுள்ளும் ஒரு வாழைப்பழத்தை வைப்பதால் அவை ஒரே மாதிரியாகப் பழுக்கும்.
- தேங்காய்த் துண்டுகளைக் குளிர்சாதனப் பெட்டியில் பாலாடை ட்ரேயில் வைக்கவும். ஒரு வாரத்தில் வெள்ளையாக மாறி அவை நன்றாகக் காய்துவிடும் வெய்யிலில் வைக்கத் தேவையில்லை. தேங்காயை இரண்டு சரிபாதிகளாக உடைக்க காயின் பாதிவரை தண்ணீரில் நனைத்து உடைத்தால் காய் சரி பாதியாக உடையும்.
- பாலில் மக்சாச் சோளம் சேர்ப்பதால் நல்ல கெட்டித் தயிர் கிடைக்கும்.
- சப்பாத்தி நிறைய நேரம் மிருதுவாக இருக்க, அவற்றுடன் சில துண்டுகள் இஞ்சியை வைக்கவும்.
- குளிர்காலங்களில் தயிர் விரைவில் உறைய, பாத்திரத்தைத் தடிப்பான துணியில் சுற்றி சிலமணி நேரங்கள் சலவை இயந்திரத்தில் வைக்கவும். தேய்ப்பது என்பது இது தானோ.
- உலர்ந்த திராட்சையை நறுக்கும்போது கத்தியில் பிசுபிசுப்பு இருந்தால் கத்தியில் வெண்ணெயைத் தடவவும்.
- வாழைக்காய் நறுக்கும்போது கத்தியை ஒவ்வொரு முறையும் எலுமிச்சைச் சாறில் தேய்த்த பிறகு வெட்டினால் காய் கறுப்பு நிறமாக மாறாது.



- பன்னீர் புதியதாக இருக்க வெள்ளை மஸ்லின் துணியால் அதை மூடி வைத்து அதன் மீது 3 துளிகள் வினிகர் ஊற்றவும்.
- ஆரஞ்சுத் தோல்களை வெயிலில் காயவைத்து நைஸ் பவுடராக அரைத்து கேக், பிஸ்கட் தயாரிக்கும் போது பயன்படுத்தலாம். இந்த பவுடர் ருசியைக் கூட்டும். இந்தப் பவுடரை பாலுடன் சேர்த்து முகத்தில் தேய்க்க முகம் விரைவில் பொலுவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம்



புகைத்தல் எதிர்ப்புத் தினம் மே மாதம் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. புகைத்தலால் மனித குலத்திற்கு ஏற்படும் தீங்குகளை வலியுறுத்தும் நோக்கிலேயே உலக சுகாதார ஸ்தாபனத்தால் இத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இத் தினத்தை முன்னிட்டு புகைத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக பல நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுடன், புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் புகைத்தலால் ஏற்படும் மருத்துவ ரீதியிலான பாதிப்புக்கள் காரணமாக சராசரியாக நாளொன்றுக்கு அறுபது பேர் இறக்கின்றனர். இந்த மரணங்கள் அநாவசியமானவை; தடுக்கக் கூடியவை. இந்த மரணங்களை தடுக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஒருவர் புகைப்பதனால் அவரது உடல்நலத்திற்கு மாத்திரமன்றி, அவர் வெளிவிடும் புகையால் அருகில் இருப்பவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும். எனவே, உலகின் பல நாடுகளில் பொது இடங்களில் புகைப்பது சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் இச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனைக் கடுமையாக அமுல்படுத்த பொது மக்கள் அனைவரது ஒத்துழைப்பு அவசியம்.

வைத்தியசாலைகள், பொது அலுவலகங்கள், வங்கிகள், பேருந்து தரிப்பிட நிலையங்கள், உணவகங்கள், திரைப்பட மாளிகைகள், வணக்க ஸ்தலங்கள், பொதுப் போக்குவரத்து சாதனங்கள், சந்தைகள் போன்ற பொது இடங்களில் யாராவது புகைத்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸாருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது மதுவரித் திணைக்கள உத்தியோகத்தருக்கு அறியத் தரவும். இவர்கள் உடனடியாக இவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவர்.

அதேபோல், எமது நாட்டில் 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட், மதுபானங்கள் விற்பனை செய்வதும் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி எங்காவது விற்பனை இடம்பெற்றால் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பொது மக்கள் அறிவிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது இளைய சமூகத்தினர் மத்தியில் புகைத்தல், மதுப் பாவனை என்பன அதிகரிக்கச் சாதகமான சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, இவ் விடயம் தொடர்பில் பெற்றோர் தமது பிள்ளைகள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். யாழ். மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் இச் சட்டங்களை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்த தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், மதுப் பாவனைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட விரும்பினால் அவர்களுக்கு தகுந்த சிகிச்சையளித்து, புனர்வாழ்வு அளிக்கும் நிலையம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கிவருகின்றது. மதுப் பாவனையில் இருந்து விடுபட்டு, புதிய வாழ்க்கையை அமைக்கவிரும்புபவர்கள் இதன் சேவையை நாடலாம்.



**புகைத்தல் மற்றும் மதுவுக்கு அடிமையானோர் அதிலிருந்து விடுபட விரும்பினால் அவர்களுக்கு சிகிச்சையளித்து புனர்வாழ்வளிக்கும் நிலையம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கிவருகின்றது.**

யாழ். மாவட்டத்தில் புகையிலை ஒரு பாரம்பரிய பணப்பயிராக பயிரிடப்பட்டு வருகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் புகையிலைக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்று வருகின்றது. அதற்கெதிரான கட்டுப்பாடுகளும் இறுக்கமாகி வருகின்றன. அதன் பாவனையும் அதற்கான கேள்வியும் படிப்படியாகக் குறைந்துசெல்கின்றன. எனவே, எமது விவசாயிகளும் புகையிலைச் செய்கையை நீண்டகாலத்திற்கு நம்பியிருக்க முடியாது. விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும் புகையிலைக்கு மாற்றீடான பணப்பயிர்களை யாழ். மாவட்டத்தில் அறிமுகம் செய்யவேண்டும். யாழ். மாவட்ட விவசாயிகள் தற்போதே தம்மை இதற்குத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சமூகத் தலைவர்கள், சமயப் பெரியார்கள், கல்விச்சமூகத்தினர், மருத்துவ உலகத்தினர் தத்தமது பிரதேசங்களில் இவற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கவேண்டும். பொலிஸ் உத்தியோகத்தர்கள், மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் இச் சட்டங்களை இறுக்கமாக அமுல்படுத்த முன்வரவேண்டும்.

எனவே, இன்றைய சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் நாம் ஒவ்வொருவரும் எமது பங்களிப்பை வழங்கி எமது எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியமான வாழ்விற்கு வழி சமைப்போம்.

வைத்தியக்கலாநிதி
ஆ. கேதீஸ்வரன்

# மூலிகை மருத்துவம்

## அதிமதுரம்

**Bin Glyrrhiza glibra**

**EN liquorice**

**மறு பெயர்:-** அதிங்கம், ஆஷ்ரி, மதோகம், குன்றிவேர் பயன்படும் உறுப்பு - வேர்

**சுவை:-** இனிப்பு



**செய்கை:-** கோழையகற்றி, உரமாக்கி, மலமிளக்கி, உள்ளழல் ஆற்றி, வறட்சி அகற்றி.

**குணம்:-** இதனால் நீர் வேட்கை, குஷ்ரம், நீர் எரிவு, காமாலை, அதிசாரம், கல்லடைப்பு, செரிமானம், மலச்சிக்கல், இருமல், பிரசவத்திற்கு முன்வரும் உதிரப்போக்கு, சுகப்பிரசவம், பெண் மலடு போன்றவை நீங்கும்.

**உபயோகம்:-** அதிமதுரம், தேவதாரம் இவைகள் வகைக்கு 35 கிராம் பொடிசெய்து பிறகு வெந்நீர் விட்டு நன்றாக அரைத்து பிரசவ வலி துவங்கிய உடன் இரண்டுமுறை கொடுத்தால் சுகப்பிரசவம் நிகழும்.

அதிமதுரம், கடுக்காய், மிளகு மூன்றையும் சம எடையில் எடுத்து இளவறுப்பாக வறுத்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு 5 கிராம் அளவில் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் அதிகச் சூட்டினால் ஏற்படும் இருமல் நீங்கும்.

அதிமதுரச் சூரணத்தைத் தயாரித்து வைத்துக் கொண்டு 1.2 கிராம் அளவில் தேனில் குழைத்துத் தினம் 3 வேளை சாப்பிட்டால் தொண்டைக் கட்டு, இருமல், சளி குணமாகும். இதைச் சாப்பிட்டு வருபவர்களுக்கு ஆண்மைக்குறைவு, பலவீனம் நீங்கும். உடல் பலமும் ஆரோக்கியமும் விருத்தியாகும்.

அதிமதுரம், ரோஜா மொக்கு, சோம்பு இவற்றை சம அளவில் எடுத்து இடித்துச் சலித்து வைத்துக் கொண்டு இரவு படுக்கைக்குப் போகும் போது 4.5 கிராம் பாலில் கலந்து சாப்பிட்டால் மலச்சிக்கல் இருக்காது. சுறுசுறுப்பாக உடல் இயங்கச் செய்யும்.

அதிமதுரச் சூரணம், கலப்படம் இல்லாத சந்தனச் சூரணம் வகைக்கு ½ கிராம் எடுத்து பாலில் கலந்து 3-4 வேளை சாப்பிட்டால் வாந்தியுடன் இரத்தம் வருதல் நிற்கும். உடலில் உள்ளுறுப்பு ரணங்கள் ஆறிவிடும்.

**ரி. உமா** *(2 ஆம் வருடம்)*
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பீடனத் தொகுதியில் ஏற்படும் குறைபாடுகளே காசநோய்க்கான அறிகுறிகளாகும்

நேர்கண்டவர்
எஸ். நதிபரன்

பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரியாக சுமார் 10 வருடங்களுக்கும் மேலாகக் கடமையாற்றிவருபவர் வைத்தியக் கலாநிதி எஸ். ஜமுனாநந்தா. அவர் வைத்தியராக தமது சேவையை மட்டுப்படுத்தாமல் அரசியல், ஆன்மிகம், சமூகசேவை என பல தளங்களிலும் தடம் பதித்து வருகின்றார்.

வைத்தியத்துறையில் அவரின் ஈடுபாட்டுடனான தன்னிகரில்லா சேவை பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. காச நோயும் அதன் பரம்பல் முறை பற்றியும் விளக்கம் பெறுவதற்காக அவரைச் சந்தித்த போது...

***கேள்வி:- காசநோய்க்கு சிகிச்சை அளித்துவரும் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களில் நீங்களும் ஒருவர் என்ற ரீதியில் காசநோய் பற்றிய சிறு விளக்கம் தருவீர்களா?***

***பதில்:-*** காசநோய்த் தொற்று 'மைக்கோ பக்றீறியம் ரியூபோகுளோசிஸ்' என்ற நுண்கிருமியால் ஏற்படுகின்றது. காற்றின் மூலம் பரவும் ஒரு தொற்று நோய் இது. கிருமித்தொற்றுக்குள்ளான எல்லோருக்கும் காசநோய் ஏற்படும் எனக் கூறமுடியாது. ஆனால், ஒருவரின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையுமிடத்து அல்லது நீர்ப்பீடனத் தொகுதி தனது செயற்பாட்டை இழக்குமிடத்து அவருக்கு காசநோய்க்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும். இதன் அடிப்படையில் பார்த்தால் உலகிலே மூன்றில் ஒரு பங்கினர்க்கு காசநோய்த் தாக்கம் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

***கேள்வி:- யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் காசநோயின் பரம்பல் எவ்வாறு உள்ளது?***

***பதில்:-*** யாழ். மாவட்டத்தினைப் பொறுத்தவரை கால ரீதியிலான பரம்பலை எடுத்துநோக்கினால் 2005 இல் 361 பேரும், 2006 இல் 280 பேரும் , 2007 இல் 481 பேரும், 2008 இல் 380 பேரும், 2009 இல் 348 பேரும், 2010 இல் 420 பேரும் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அடுத்து, இட ரீதியிலான பரம்பலைப் பார்த்தால் யாழ். மாவட்டத்தில் தற்போது 11 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு பணிமனைகள் காணப்படுகின்றன. (Medical Officers of Health) இப்பணிமனையின் கீழ் கடமையாற்றும் சுகாதார தொண்டர்கள் காசநோயாளிகளை இனங்கண்டு, அவர்களுக்கு நேரடிக் கண்காணிப்புடன் கூடிய சிகிச்சையினை அளிப்பதும் (Directly observed treatment short), காச நோயாளியின் குடும்ப அங்கத்தவர்களை சளிப் பரிசோதனைக்கு அனுப்புவதும், நோய் தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதுமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக கடந்த வருடத்திற்கு முன்னர் இயங்கிய MOH நிர்வாகங்கள் தற்போது மாற்றியமைக்கப்பட்டதனால் நம்பிக்கையானதும் பூரணமான துமான தகவல்களைப் பெறமுடியாமல் போனதுடன் கரவெட்டி, மானிப்பாய் போன்ற பிரிவுகளில் வசிக்கும் காச நோயாளிகள் ஏனைய MOH பிரிவுகளில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டமையால் சரியான தகவல்களை வழங்கமுடியாதுள்ளது.

***கேள்வி:- நாளாந்தம் அண்ணளவாக எத்தனை பேர் சிகிச்சை பெற வருகிறார்கள்?***

***பதில்:-*** யுத்தம் நீங்கியதன் பின்னரே காச நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று கூறவேண்டும். காரணம், வேறு மாவட்டங்களில் இருந்தும் அதிகளவு மக்கள் யாழ். குடாநாட்டுக்கு தினமும் வந்துபோகின்றனர். எனவே, அம் மாவட்டங்களில் இருந்து வருகை தரும் மக்களில் பலர் நோய்க்காவிகளாக இருக்கின்றனர். இதனால், அண்மைக் காலமாக காசநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு மட்டும், அதாவது 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 50 க்கும் மேற்பட்டவர்களுக்கு காச நோயின் தாக்கம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் வந்த சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய சகல பரிசோதனைகளையும் மேற்கொண்டு, நவீன மருந்து வகைகளும் கொடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே, அமைதியான சூழலில் காச நோயின் பெருக்கம் அதிகரிக்கும் ஏது நிலைகள் காணப்படுகின்றன. இதனை ஆங்கிலத்தில் Net work spreading என்று கூறுவார்கள். குறிப்பாக, இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்று பின்னர் இங்கு வருவோராலும் காச நோய்க் கிருமிகள் பரம்பலடைகின் றன.



***கேள்வி:- காசநோய்த் தாக்கத்திற்கு உட்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் இங்கு போதுமானதாக இருக்கின்றனவா?***

***பதில்:-*** இலங்கையில் இருக்கின்ற தரமான மார்புநோய்ச் சிகிச்சை நிலையம் எதுவென்றால் அது யாழ். பண்ணை மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தையே கூறுவேன். காரணம், அதன் அமைவிடம், சூழல் என்பன காசநோயாளிகளுக்குச் சாதகமான முறையில் அமைந்துள்ளதைக் கூறலாம். இவ் வசதிகள் இலங்கையில் உள்ள வேறு எந்தக் காசநோய் சிகிச்சை நிலையங்களிலும் இல்லை. அத்துடன், இலவசமாக நோயாளிகளுக்குக் காசநோயைக் குணப்படுத்தும் பொருட்டு விலையுயர்ந்த மருந்துகள் வழங்கப்பட்டுவருகின்றன. இங்குள்ள பெரும் குறை என்கின்ற போது இட வசதி போதியளவு இன்மையால் விடுதி வசதிகளை ஏற்படுத்த முடியாதுள்ளது.

***கேள்வி:- உங்கள் மருத்துவ சேவையில் சவாலான விடயங்கள் அல்லது மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதேனும் நிகழ்ந்ததுண்டா?***

***பதில்:-*** நிறைய இருக்கின்றன. குறிப்பாக, யுத்தச் சூழ்நிலையில் கடமையாற்றியமை சவால் நிறைந்த பணியாக இருந்தது. 1999ஆம் ஆண்டு அப்போதிருந்த நிலைமையில் எறிகணைகள் எமது வைத்தியசாலைக்கு அருகிலும் வீழ்ந்து வெடித்தன. இதனால், கோப்பாயில் இயங்கும் சுகாதார வைத்திய நிலையத்தில் இருந்தே எனது சேவையைத் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டது. மருந்துவகைகளை சேதமுறாமல் பாதுகாப்பான முறையில் இடம் மாற்றவேண்டிய நிலை. எனினும், மக்களுக்கு பலவித இன்னல்கள் இருந்த போதெல்லாம் அவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகளை உரியவாறு வழங்கியதில் எனக்கு எப்போதும் மனநிறைவை ஏற்படுத்துகின்றது.

***கேள்வி:- பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பலவித இடர்களுக்கு முகங்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றிய உங்கள் கருத்து...?***

***பதில்:-*** உண்மைதான். முக்கிய பிரச்சினை போக்குவரத்துப் பிரச்சினையே.

(28ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

இலங்கைத் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கே. சின்னத்துரை என்ற தமிழாசிரியர். பெரிய நீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்டமையால் 'நீலாவாணன்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர். ஈழத்துக் கவிதை உலகில் சில புதிய பரிணாமங்களைத் தோற்றுவித்த இவர், இயற்கை அழகை அப்படியே உள்வாங்கி யதார்த்த பூர்வமாக கவிதைகள் புனைந்தார். இவரது கவிதைகள் ஒரேவித யாப்பமைதியைக் கொண்டிருக்கவில்லை. தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ற பல கவிதை நடைகளை வெகு எளிமையாக அனைத்து பாமர மக்கள்கூட புரிந்துகொள்ளும் அளவிற்கு வெகு எளிமையாகக் கையாண்டுள்ளார். தற்காலத்திற்கு மிகவும் பொருந்தக்கூடிய 'நீலாவாணன் வழி' என்ற அவரது கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற 'உறவு' என்ற கவிதை பற்றி இவ்விடத்தில் நோக்குவது சாலவும் பொருத்தமுடையதே. தற்காலத்தில் அன்பைச் சொரிந்து, அரவணைத்து வளர்த்து சமூகத்தில் தலைநிமிர வைத்த தமது பெற்றோரை அந்திம காலத்தில் தனியே தவிக்கவிட்டு தூரத்தேசங்களில் வாழ்ந்துவருகின்ற நம்மவர்களுக்கு இது சமர்ப்பணம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போடியார் என்ற நிலக்கிழார் இறுதிக் காலத்தில் வறுமையுற்று நோய்வாய்ப்பட்டு உரிய பராமரிப்பின்றி, வைத்திய உதவியுமின்றி இறந்துவிடுகிறார். அவரது மரணச்செய்தி கேட்டு பிள்ளைகள், உறவினர்கள் பல தேசங்களிலிருந்தும் பறந்தோடி வருகின்றனர். இவர்களைக் கண்ட இறந்தவரின் மனைவியான வள்ளியம்மை, துன்பத்திலும் ஒரு சந்தோஷத்துடன் புலம்புகிறார். இவ்வளவு சொந்த பந்தங்கள் என்ற ஐயாவுக்கு இருக்கின்றார்களே என எண்ணி ஒருவித பூரிப்பு வள்ளியமைக்கு. வள்ளியம்மையின் புலம்பல் பல்வேறு அர்த்தங்களை ஏற்படுத்துகின்றமை கவனிக்கத்தக்கது.

நீலாவாணன் எளிமையான தமிழில் கதை சொல்லும் பாணியில் யாத்திருக்கிறார். இதோ அவரது கவிதை,

*''மரணித்துப் போன எங்கள்*
*மானாகப் போடிப் பெரியப்பா*
*நீர் ஒரு பெரிய மனிதர் தான்*
*பெட்டி இழைத்தும்; பிரம்புப்*
*பின்னல் வேலை செய்தும்*
*வட்டக்குளத்து விரால் மீன்*
*பிடிக்க - கரப்புக் கட்டி விற்றுக்*
*காலத்தை ஓட்டும் ஒரு கிழவன்*
*என்றே நம்மூர் அறியும் நேற்று*
*வரை''*

*'பத்து நாள் தொட்டுப் பக*
*லிரவய் பாய் மீதினில் வைத்தி*
*யமே இன்றி வயிற்றாலடி*
*யோடும் சத்தியெடுத்தும் வாய்*
*சன்னி பிசத்தியும் செத்தும்*
*பிழைத்தும் கிடந்தீர் சுவரோரம்*

*எட்டு நாளாக இரணம் ஏதும்*
*குடலுக்குட் செல்லவில்லை*
*என உருகி உம் மனைவி*
*வள்ளி புளுங்கல் அரிசியவித்த*
*வெந்நீரை வள்ளி உமக்கு பருக்*
*குகையில் நீர் - அவளை ஐம்*
*பது ஆண்டாய் அனுபவித்துக்*
*கொண்டதற்கும் ஒன்பது பிள்*
*ளைகளை உற்பவித்துப் பெற்ற*
*தற்கும் ஈற்றில் உமக்காய்*
*ஊற்றை அளைந்ததற்கும்*

*உம் குறைகள் கேட்டதற்கும்*
*ஈடாக ஒரு வார்த்தையேனும்*
*இயம்பாமல் போய்விட்டீராமே''*

- புலம்புகிறாள் வள்ளியம்மை.

நாய் படாப் பாடுமது நோயிலவள் பட்டதுண்மை என்றாலும் ஓர் வகையில் ஆனந்தம் வள்ளிக்கு என்னவென்றால் தன் புருசன் மானாகப் போடிக்கும் எத்தனை பேர் சொந்தம்! அதோ எக்கவுண்டன், எஞ்சினியர், வைத்தியக் கலாநிதிகள், வர்த்தகர்கள், பேராசிரியர் சத்தா சமுத்திரந்தான் சாதிசனம் என்பதால்

தந்தி கிடைத்து மிக நொந்துபட்டு வந்தவர்கள் அந்தி வரைக்கும் ஏதும் ஆகாரம் தின்னாமல் குந்தி இருந்து குளறி அழுதார்கள். ஐந்தாறு காரில் இரவே ஊர் போய்விட்டார்கள். எத்தனையோ பேர் சுற்றமிந்த ஏழைக் கிழவனுக்கு இத்தனை நாள் மட்டுமிது யாருக்கும் தெரியாது. உண்மையினைக் கண்டெங்கள் ஊர் விரலை மூக்கில் வைக்கும் வண்ணம் மறைவாக வாழ்ந்தீர் - இறவாமல்... இன்றும் உயிரோட இருந்தீரேயாகில் என்ன வகையாய் அறிவோம் உறவினரை செத்தாலும் செத்தீர் நும் செல்லக் குடும்பத்தைப் பத்தியமாய்ப் பார்த்திந்த பாரில் வழங்கிவிடும் உண்மையுறவறியும் ஊர்''

என்ற கவிதை மூலம் வாழ்வின் இறுதிக் காலத்தை எண்ணிக் கொண்டிருந்த ஏழைக் கிழவன் இறந்ததன் பின்னர் எக்கவுண்டன், எஞ்சினியர் போன்ற பல பெரும் உத்தியோகத்தர்கள் மரணச்சடங்கிற்கு வந்தபோது தான் ஊரே மூக்கில் விரலை வைத்து அதிசயித்தது. வாழ்வியல் ஓட்டத்தை யதார்த்தபூர்வமாக அணுகும் கவிஞரின் உளப்பாங்கு பாராட்டத்தக்கது.

தற்கால சூழ்நிலையில் பெற்றோரை உரிய கவனிப்பின்றி முதியோர் இல்லங்களிலும் அநாதரவாகவும் விடப்படும் சூழ்நிலை அதிகரித்துவரும் நிலையில் இறந்ததன் பின்னர் அவரின் பிள்ளைகள், உறவினர்கள் ஒன்றுகூடி ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை. இருக்கும் போதே அவருக்கு வேண்டிய பணிவிடைகளை கிரமமாகச் செய்வதே பெற்றோருக்கு நாம் செய்யும் கடமையாகும் என்ற யதார்த்தத்தை கவிஞர் பேச்சு நடையில் கதை சொல்லும் பாணியில் கவிதையை புனைந்துள்ளமை பாராட்டப்படவேண்டியதே.

**எஸ். நதிபரன்** B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் வருடாந்த பெருவிழாவின் போது இரத்த தான முகாம் ஒன்று நடைபெற்ற செய்தியை பத்திரிகை ஒன்றில் பார்க்க முடிந்தது. பெப்ரவரி 14 காதலர் தினத்தை முன்னிட்டு உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் இரத்த தானம் செய்த நிகழ்வை அறியமுடிந்தது. தமது பிறந்த தின ஞாபகமாக அன்புக்குரியவர்களின் ஞாபகார்த்த தினத்தில் இரத்ததானம் செய்வதையும் அறியமுடிகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு உதவி கோரி பத்திரிகைகளில் செய்தி வருகின்றது. உதவுபவர்கள் ஒழுங்காக இருந்தால் இதுபோன்ற பத்திரிகைச்செய்தி வருவதற்கு இடமில்லை. முதற்சொன்ன முன்மாதிரியானவர்களைப் போல நாங்களும் மாறி ஆரோக்கியமான மனித சமூகம் ஒன்றுக்குக் கைகொடுக்க வேண்டும்.

''இரத்த தானம் உனது உணர்வு, உனது தீர்மானம்'' என்ற வாசகத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பல இடங்களில் கண்டிருப்பீர்கள். நோய் நொடியற்ற ஆரோக்கிய மனிதன் ஒருவன் 4 மாதங்களுக்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யமுடியும். பாடசாலை மட்டங்களில் இரத்ததான [illegible] நிறைய மாணவர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைபெறுகிறது. ஆனால், அரச அலுவலகங்களில் திடகாத்திரமுள்ள உத்தியோகத்தர்கள் நிறையப் பேரிருந்தும் மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே இரத்த தானம் செய்கின்றனர். பாடசாலை மட்டத்தில் இருக்கும் பொதுநலப் பண்பு வளர்ந்து பெரியவர்களானதும் சுயநலவாதிகளாக மாற்றம் பெற்றுவிடுகிறது. மனிதர்கள் சமூகச் சூழலால் மாறிவிடுகின்றனர். மனிதனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் விபத்தில் சிக்க நேரிடலாம். அல்லது நோய்வாய்ப்படலாம். இதனால், இரத்தம் ஏற்றும்தேவை உருவாகலாம். அதனை மனத்தில் கொண்டாவது வருடத்திற்கு ஒரு தடவையாவது இரத்த தானம் செய்யும் வழக்கத்தைக் கடைப்பிடிப்போம்.

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களும் ஊடகத் தகவல் அறிவும்



ப. இராஜேஸ்வரன்
ஊடகக் கல்வி வளவாளர்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

### ஊடக தகவல் அறிவுக்கான அணுகுமுறைகள்

ஊடக அறிக்கையிடல்களை பெறுபவர்களை பெறுநர் என்று குறிப்பிடப்படுகின்றது. இவர்களில் மூன்று வகையான பிரிவினர் உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஊடகம் தொடர்பான விமர்சன ரீதியிலான அறிவு, விளக்கம், மனப்பாங்கு, தேர்ச்சி அற்ற நிலையுடனும் ஊடகம் முன்வைக்கின்ற விடயங்களை முழுமையாக நம்புபவர் செயற்படாத பெறுநர் எனவும் ஊடகம் தொடர்பான திறன், திறனாய்வு மிக்கவர்கள் செயற்படு பெறுநர் எனவும் ஊடக உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் இருந்தும் அதனை பிரயோகிக்காதவர்கள் மந்த பெறுநர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

சிறுவர்களுக்கான ஊடகத் தகவல் அறிவு என்பது மேற்காட்டப்பட்ட பெறுநர்களில் செயற்படு பெறுநர்களாக மாற்றுவதற்கான தூண்டல்களை அதாவது மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஊடகங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை இழிவளவாக்குவதற்கும், விழிப்புணர்வு மிக்க பெறுநர்களாக அதாவது செயற்படு பெறுநர்களாக சிறுவர்களை எதிர்கால நோக்கில் தேர்ச்சி பெறச் செய்யவும் பயன்படுத்தல் அடிப்படையான அம்சமாகின்றன.

சிறுவர்களிடம் ஊடகக் கல்வி செயற்பாடுகள் ஊடாக உள்ளடக்கங்களை விசாரணை செய்தல், பகுப்பாய்வு செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்குதல், முன்வைக்கும் விடயங்களை சரியாக விளங்கும் ஆற்றல், ஊடகம் மறைக்கும் விடயங்களை ஊகித்து அறியும் ஆற்றல், ஊடக நிகழ்ச்சிநிரலை இனங்கண்டு கொள்ளல், ஊடக உத்திகள், உபாயங்களை நுணுகி ஆராய்தல், ஊடகங்களில் வெளிவரும் விடயங்களை பயனுள்ள வகையில் தெரிதல், அதனை பயனுள்ளதாக்குதல், ஊடக அபிப்பிராயங்களை கட்டியெழுப்புதல், முன்வைத்தல், ஊடக நிறுவன கட்டமைப்பு, பணித்துறையை விளங்குதல், உள்ளடக்கங்கள் தொடர்பான துலங்கல்களை வெளிப்படுத்துதல், சமூக அபிவிருத்திக்கான ஆக்க ரீதியிலான ஊடகத்திறனை ஆய்வுசெய்யவும், உணர்திறன் மிக்க ஊடகக் கலாசார எழுச்சிக்களுக்கும், உந்தல்களுக்கும், சமூக பிரதிநிதித்துவ ஊடக உள்ளடக்கப் பரிமாணங்களை விளங்குவதற்கும் தகவல் ஊடக அறிவு நிலைகள் கட்டியெழுப்பப் படல் அடிப்படையாகின்றது.

ஊடகங்களை கற்றலுக்காக பயன்படுத்தும் வழிமுறைகளை இனங்கண்டு கொள்ளல். இன்று Education + Entertaiment = Edutainment என்ற பதம் ஊடகங்களையும் பொழுதுபோக்கையும் இணைத்து பொழுதுபோக்கு நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் ஊடாக அறிவூட்டல் என்ற புதிய சிந்தனை அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. ஊடக வழிமூலம் வாசிக்கக் கற்றல், புதிய சொற்களை அறிதல், வாக்கியமுறைகள், கருத்து உருவாக்கல், தகவல்களை அறிவோடு சேர்த்தல், செவிமடுத்தல் திறன், பேச்சுப்பாணி, ஆகக்கத்திறன், அழகியல் எண்ணம், இரசனை, காட்சி உணர்வு, காட்சியும் அறிவும் இணைதல், கட்புல - செவிப்புல விருத்தி, ஐம்புலன் வழிமூல கற்றல் என ஊடகங்கள் கற்றல் செயல்முறையில் பங்களிப்பு பெறுவதை உணர்தல், அதனை பொருத்தமாகக் கையாள பழகுதல் ஊடக தகவல் அறிவு நிலையூடாகவே சாத்தியமாகின்றன.

(முற்றும்)

# கவிதைகள் மாதிரி

காதலில்
பணக்காரி
என்பது
சோகங்களை
இலவசமாகத்
தந்தபோதே
தெரியவந்தது!

தோழிகளுக்கு
மத்தியில்
மார்க்குப்
போடுவேன்
ஒவ்வொரு
முறையும்
நூறையே
தாண்டிப்
போவாய் ......

காதலில்
வரைபடத்தில்
உன் .....
அழகுகள்
செங்குத்துக் கோடு
கிழிக்கிறது ....

இரவு-பகல்
பாராமல் .....
உன்னை .....
நோக்கிய
பயணத்தில்
ஜீவனை
அனுப்பிக்
கொண்டிருக்கிறேன்

நீ என்
நவின நாளிதழ் - ஆனாலும்
உம்முன்னு இருப்பதே
என் தலைப்பு செய்தி

என் குழந்தைகளை
கல்லூரிக்கு அழைத்து
செல்வதும்
திரும்பவும் வீட்டுக்கு
அழைத்துவருவதும்
என் வீட்டுக்கு
வேலைக்கு வரும்
குழந்தைகளே!

என் தொழில்
உன்னைக் காதலிப்பது
நீ தரும் சம்பளம்
புன்னகை

உன்னை
பலமுறை
தொட்டிருக்கிறேன்
தோட்டத்தில்
பூக்கள் ஆயும் போது

நிறைய் முகங்கள்
ஞாபகம் இருக்கின்றன
உன் முகம் - நிறைய
ஞாபகமிருக்கிறது

அறியா .....
முகங்கள்
நலம் விசாரித்தாலும்
உன்
முறாய்ப்புப்
பாவனைக்கு
[illegible]ப்போகிறேன்

அந்த ......
நாட்களில்
உயிரோடு
இருந்ததே!
உன் .....
வார்த்தைகளை
வாங்கி வங்கியில்
போடுவதற்கு .....



நெடுந்தீவு
முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டு செய்திகள்

## தேசிய ஹொக்கி அணிக்கு யாழ். வீராங்கனைகள் தெரிவு

அச்சுவேலி,

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களின் 15 வயதுப்பிரிவு ஹொக்கி அணிக்கு நான்கு வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் முதற் தடவையாக யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பாடசாலைகளில் 15 வயதுப் பிரிவு பெண்கள் ஹொக்கி அணிக்கு யாழ். மாவட்ட வீராங்கனைகளான உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் செல்வி கமலினி மில்ஸ், செல்வி கிருத்திகா சின்னத்தம்பி, மேரி அன்ரூஸ், பியூலா அன்ரூஸ் ராஜசூரியர் நான்கு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான தேசிய மட்டத்திலான பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கான ஹொக்கி விளையாட்டில் உடுவில் மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்களவு சாதனைகளை நிலை நாட்டி வருகின்றது. இந்த வகையில் முதற் தடவையாக தேசிய மட்ட ஹொக்கி அணிக்கு கல்லூரியிலிருந்து நான்கு வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக பாராட்டைப் பெற்றுள்ளது.

## தேசிய குத்துச் சண்டை போட்டிக்கு யாழ். அணி தெரிவு

அச்சுவேலி ,

வடக்கு மாகாண மட்ட பெருவிளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்ட குத்துச்சண்டை அணி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளது.

வடக்கு மாகாண மட்டத்தில் முதற் தடவையாக இந்த வருடம் குத்துச் சண்டைப் போட்டிகள் நடத்தப்பட்டன. யாழ். மாவட்ட அணி முதலாம் இடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாமிடத்தையும் மாகாண நிலையில் பெற்றுள்ளன.தேசிய மட்டத்திலான குத்துச் சண்டைப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் , 24 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன. முதற் தடவையாக யாழ். மாவட்ட குத்துச் சண்டை அணி கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்கள் ஆசிரியர்களுக்கு கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

அரியாலை

இலங்கை பாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கமும் இலங்கை கரப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து வடமாகாண ரீதியில் பாடசாலை ஆசிரியர்கள் ம்ற்றும் மாணவர்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாமினை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

இப் பயிற்சி முகாமிற்கு பயிற்றுனர்களாக இலங்கைபாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கச் செயலாளரும் தேசிய கரப்பந்தாட்ட பயிற்றுனருமாகிய ஜே.எம். சாள்ஸ் திலகரட்ணவும் சீதுவ தமிசமிர வித்தியாலய கரப்பந்தாட்ட பயிற்றுனர் சமிந்த லக்மனும் கரப்பந்தாட்ட விதிகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கு தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் கபில பண்நாயக்க மற்றும் நெல்லி காயந்த ஆகியோரும் கலந்து பயிற்சிகளை வழங்கினார்கள்.



இவர்களுடன் இலங்கைப் பாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கத் தலைவரும் சீதுவ தமிசமிர வித்தியாலய அதிபருமாகிய லக்ஸ்மன் விஜயரட்ணாவும் இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுத் துறை கல்விப்பணிப்பாளர் நிகால் பெர்ணாண்டோவும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பயிற்சி முகாமில் மாணவர்கள் 60 பேரும் ஆசிரியர்கள் பயிற்றுனர்கள் 60 பேரும் கலந்து பயனடைந்தார்கள்.

பயிற்சி முடிவில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் இலங்கை பாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கத்தில் இணைவதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு கரப்பந்தாட்டத்தில் சிறந்த ஒரு எதிர் காலத்தினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும் இலங்கை பாடசாலைகள் கரப்பந்தாட்ட அணிக்கான தெரிவானது ஜூன் மாதம் நடைபெறவுள்ளமையினால் இங்கிருந்தும் மாணவர்களை பங்குபற்றுவதற்கு தயார்ப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்கள்

## முதியோருக்கு நிழல்...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பற்றிய கருத்தை முன்வைத்தேன். இருபது நாள் கடந்தது. அந்தப் பரோபகாரி அமெரிக்காவில் இருந்து நேரே இங்கு வருகை தந்தார். ஒரே நாளில் எனது வேண்டுதலைப் பூர்த்திசெய்து முதியோர் இல்லத்திற்கு உடைமையாக 14 பரப்பு நிலத்தையும் கட்டடத்தையும் வாங்கித் தந்தார். என் கனவு நனவாகியது. நான்கு மாத காலம் இரவு-பகலாக முதியோர் இல்லத்துக்கான கட்டடத் திருப்பணி நடைபெற்றது. மாதாந்தம் உணவுக்கான உதவியாக கொழும்பிலுள்ள 'மனிதநேயம்' என்ற நிறுவனம் சுமார் ஒரு இலட்சம் ரூபாவை வழங்கிவருகிறது என்றார் ஆறு. திருமுருகன்.

எம்மோடு அளவளாவுவதற்கு ஆர்வமாக இருந்த பாட்டிகளையும், பாட்டன்களையும் அணுகினோம்.

நல்லூரைச் சேர்ந்த 99 வயது மூதாட்டி இராஜேஸ்வரி இராமலிங்கம் சிரித்துச் சிரித்து உற்சாகமாக உரையாடினார்.

''எங்களைப் போன்ற ஆதரவற்றவர்களுக்கு இவ்வாறான முதியோர் இல்லங்கள் தேவை. சந்தோஷமாக இருக்கிறோம். எல்லாம் நிறைவாக இருக்கிறது. பசு வளர்க்கிறார்கள். பசுப் பால் கிடைக்கிறது. வயல் செய்து நெல் வருகிறது. எள்ளு விதைத்திருக்கிறார்கள். தோட்டத்தில் வாழைக்குலை, வெங்காயம் என்பனவும் கிடைக்கின்றன. சேர். பொன் இராமநாதன் அன்று சுயதொழிலை ஊக்குவித்து வருமானம் ஈட்டியமை போன்று ஆறு. திருமுருகனும் பிள்ளைகளை வளர்ப்பது போல் எம்மை வளர்க்கிறார். நாங்கள் விரும்பிய இடங்களுக்குக் கூட்டிச்செல்கிறார்கள். மருத்துவ வசதிகள் உண்டு. உள்ளத்தை மகிழவைக்கும் கலை நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறும்'' என்றவரிடம் 'உங்களின் நீண்ட ஆயுளுக்கும் தேக சுகத்திற்கும் எது காரணமாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்'' என்று வினாவிய போது, ''எனது தகப்பனார் ஒரு வைத்தியர். சுதந்திரமாக எங்கும் நடந்து திரிந்தோம். நாங்கள் சைவ போசனக்காரர். எனவே, மரக்கறிகளோடு பழங்களும் அதிகமாக உண்போம். தேன் விரும்பிக் குடிப்பேன். சத்யசாயி பாபாவை நேரடியாகத் தரிசித்திருக்கிறேன். நான் புட்டபர்த்தி போகும்போது ஒருவர் வந்து என் கையைப் பிடித்து பகவானின் இடத்திற்கு அழைத்துச்சென்றமை எனக்கு அற்புதமாக இருந்தது'' என்றார்.

''பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். வந்து பார்ப்பார்கள். ஆனால், எனக்கு வெளிநாடு போக விருப்பமில்லை'' என்கிறார் அளவெட்டியைச் சேர்ந்த 82 வயதுடைய செல்வரத்தினம் ஆழ்வாப்பிள்ளை.

நண்பகல் 12.00 மணிக்கு பிரார்த்தனையைத் தொடர்ந்து மதிய உணவு பரிமாறப்பட்டது. எங்களையும் இணைத்து அந்தப் பெரியவர்கள் பகிர்ந்துண்டனர். பிரத்தியேகமாக மூன்று வயோதிபத் தம்பதிகளும் அங்குள்ள ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் மண்டபத்தில் சகல வசதிகளோடும் தங்கியிருக்கின்றனர். அரும்பொருள், தொல்பொருள் மற்றும் பாரம்பரியங்களில் பெரும் பற்றுக்கொண்டுள்ளவரும் இளைய தலைமுறையினருக்கு எமது வரலாற்றையும் வாழ்வியலையும் மறவாது காவிச் செல்லவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளவருமான செஞ்சொற்செல்வர் அங்கு பாதுகாத்துவைத்திருக்கும் திருகை வண்டி, தட்டிவான், ஏ-40 கார் மற்றும் முதுசங்களைப் பார்வையிட்ட பின்னர் சிவபூமியிலிருந்து வெளியேறினோம். பெரியவர்கள் கையசைத்து எம்மை வழியனுப்பி வைத்தனர்.

## நீர்ப்பீடணத் தொகுதியில்...

(25ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சைக்கென்று வரும் நோயாளிகள் பெரும்பாலும் பேருந்துகளிலேயே வருகின்றனர். பேருந்துகள் யாழ். நகரப் பகுதி வரையே சேவையில் ஈடுபடுகின்றன. எனவே, யாழ். நகரில் இறங்கி பல மைல் தூரம் உள்நோக்கி நடந்தே வரவேண்டியுள்ளது. இதனால், நோயாளிகள் பலவித சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு வட பிராந்திய போக்குவரத்துச் சபையுடன் தொடர்புகொண்டு எமது கோரிக்கையை விடுத்த போதும் இதுவரை எந்தவித சாதகமான முடிவும் கிடைக்கவில்லை.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வலி. வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலிட்டி அரசினர் காசநோய் வைத்தியசாலையை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிகோரப்பட்டுள்ளது.

25 வருடங்களுக்கு முன்னர் சுமுகமான முறையில் இயங்கிவந்த இக் காசநோய் வைத்தியசாலையானது வட மாகாணத் தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகத் திகழ்ந்து வந்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று வந்தனர். ஆகவே, வட பகுதித் தமிழர்களின் உரிமைகளில் இதுவும் ஒன்றாக விளங்குவதால் விரைவில் வலி. வடக்குப் பிரதேசத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி, காசநோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு வேண்டிய இயல்பான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதே மக்களினதும் என்னுடையதும் எதிர்பார்ப்பாகும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்க துடிக்கும் பாம்புகள்; நடுங்கும் ஊர் மக்கள்

''பழிவாங்குறதுக்காக பாம்புங்க எங்க ஊருல சுத்தி சுத்தி வருதுங்க. வெளியில நடமாடவே பயமா இருக்கு. பகல்லகூட வீட்டுலயே முடங்கி கிடக்கோம்..' இப்படி பதைபதைக்கிறார்கள் பெருமாள்பட்டி கிராமத்தினர்.

இப்படி பயந்து போய் கிடக்க என்ன காரணம்?

தமிழ்நாடு தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ளது பெருமாள்பட்டி. இந்த கிராமத்தை சேர்ந்த விவசாயி குணவாளன். இவரது மகன் ஞானசேகரன்தான் பாம்புகள் படையெடுக்க காரணம் என்கின்றனர் கிராமத்தினர். ஊரை ஒட்டிய பகுதியில் குணவாளனின் தோட்டம் இருக்கிறது. 3 மாதங்களுக்கு முன்பு, ஒருநாள் இரவில் ஞானசேகரன் தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்ச போயிருக்கிறார். மோட்டார் அறைக்குள் நுழைந்த அவர் 2 பாம்புகள் பின்னி பிணைந்திருப்பதை பார்த்தார். பீதியடைந்தார். அங்கு கிடந்த கம்பை எடுத்து பாம்புகளை சரமாரியாக அடித்தார். ஒன்று தலை நசுங்கி இறந்துவிட்டது. மற்றையது மோட்டார் அறையில் இருந்த துளை வழியாக ஓடி மறைந்தது.

இதற்கு அப்புறம் நடந்த சம்பவங்கள் தான் பெருமாள்பட்டி மக்களின் பயத்துக்கு அச்சாரமாய் அமைந்தவை.

பாம்பை ஞானசேகரன் அடித்துக் கொன்றதற்கு அடுத்த நாள்.. ஞானசேகரனுக்கு பாம்பு உருவில் வர ஆரம்பித்தது பிரச்சினை. அடிக்கடி ஒரு பாம்பு தன் கண்ணில் பட்டு மறைவதாகவும், தான் அடித்தபோது தப்பிய பாம்புதான் அது என்றும் தந்தையிடம் கூறியுள்ளார். பாம்பு தெரியுது.. கொத்த வருது.. என்று சொல்லியும் கதறியிருக்கிறார். நேருக்கு நேராக இரண்டு பாம்புகளை பார்த்த பீதியில் இருந்து ஞானசேகரன் இன்னும் மீளவில்லை.. நாளானால் சரியாகிவிடும் என்று கருதிய குணவாளன் இதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

சில நாட்கள் கழிந்தன. தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்ச போனார் ஞானசேகரன். மோட்டார் அறையை நெருங்கினார். வழியில் மறைந்திருந்த பாம்பு ஒன்று அவரை தீண்டியது. உயிருக்கு போராடிய அவரை ஆஸ்பத்திரிக்கு தூக்கி சென்றனர். அதற்குள், விஷம் பரவி பரிதாபமாக இறந்தார் ஞானசேகரன்.

தனது காதல் பாம்பை கொன்றதற்காக ஞானசேகரனை இன்னொரு பாம்பு பழி வாங்கியதாக கருதினர் மக்கள். தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவர்களது சந்தேகத்தை அதிகப்படுத்தும் வகையில் அமைந்தன.

இறுதிச் சடங்கு செய்வதற்காக ஞானசேகரன் உடலை வீட்டில் வைத்திருந்த போது, அருகே 2 பாம்புகள் தென்பட்டன. உடலை மயானத்துக்கு கொண்டு செல்லும் வழியிலும் ஏராளமான பாம்புகள் சுற்றிவந்தன என்று சொல்கிறார்கள் கிராமத்தினர்.

அவர் இறந்து 2 மாதம் ஆன பிறகும், ஊரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பாம்புகள் தென்பட்டன. திரும்பிய பக்கமெல்லாம் பாம்புகள் இருப்பது மக்களை பெரும் பீதியில் ஆழ்த்தியிருக்கிறது. 2 மாதத்தில் 50க்கும் அதிகமான பாம்புகளை அடித்துக் கொன்றிருக்கிறார்கள்.

வீட்டு வாசலில் பெரிய அளவிலான பாம்பு சட்டைகள் கிடக்கின்றன. ஞானசேகரனை பழிவாங்கிய பிறகும் பாம்புகளின் ஆத்திரம் தீரவில்லை. ஊர் மக்களை பழி வாங்கவே அலைகின்றன என்று பயம் அடங்காமல் சொல்கின்றனர் மக்கள்.

மகனை இழந்த குணவாளன் கூறுகையில், 'பாம்பு துரத்தி துரத்தி வருவதா என் மகன் சொன்னத முதல்ல நம்பல. தப்பிப் போன பாம்பு அவனை பழிவாங்கிடுச்சு' என்றார் வருத்தத்துடன். அதே கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன், பிகடந்த 2 மாசமா தான் பாம்புங்க நடமாட்டம் அதிகமாக இருக்கு. ஏராளமான பாம்புகளை அடிச்சு கொன்னுட்டோம். ஆனாலும் குறையல. பகல்லகூட பயந்து, பயந்தே நடமாட வேண்டியிருக்கு' என்றார்.

'பழிக்கு பழியெல்லாம் கட்டுக்கதை. வெயில் அதிகமா இருக்கிறதால, பாம்புகள் வெளியே வருகின்றன' என்று கூறப்பட்டாலும் பெருமாள்பட்டியில் பாம்பு பீதி இன்னும் ஓயவில்லை.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [03.06.11 முதல் 09.06.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேட ராசி அன்பர்களுக்கு தொழில் நிலையில் சிறப்பான மேன்மைகள் அமையும். எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றிகள் ஏற்படும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும். தொழில் சார்ந்த லாபங்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் பிரச்சினைகள் சுலபமாகிவிடும். பெண்களுக்கு மகிழ்வான பலன் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மையுண்டு.



### * இடபம்

இடப ராசி அன்பர்களுக்கு சற்று இழுபறியான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தேவையற்ற அலைச்சல் நிலைகள் அதிகமாக இருக்கும். குடும்பத்தில் செலவீனங்கள் மனச் சஞ்சலம் அமைந்திருக்கும். பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். கொடுக்கல் வாங்கல் கடன் நிலைகளில் நிதானம் தேவை. பெண்களுக்கு ஓரளவிற்கு நன்மையுண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.



### * மிதுனம்

மிதுன ராசி அன்பர்களுக்கு எதிர்பாராத செலவுகள் அமையும் நிலை இருக்கும். எந்த விடயம் என்றாலும் சற்று பொறுமையாக செயற்பட வேண்டும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு ஓரளவிற்கு அனுகூலமாக அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கடகம்

கடக ராசி அன்பர்களுக்கு வெற்றிகரமான பலன்கள் அமைய இடமுண்டு. தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுப காரிய நிலைகளும் அமையும். பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகள் கொடுக்கல், வாங்கல் சுமுக பலன் தரும். பெண்களுக்கு வெற்றி உண்டு. மாணவர்களுக்கு நன்மையுண்டு.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று அலைச்சல் நிலை இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் சார்ந்த பிரயாணங்கள் அமைய இடமுண்டு. குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். கடன் நிலை கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. பெண்களுக்கு சற்று மத்திம பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் நிலையுண்டு. குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றி பெற முடியும். கடன் நிலை, கொடுக்கல் வாங்கல் சுமுக பலன் கொடுக்கும். பெண்களுக்கு நிறைவான பலன் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். குடும்ப நிலையில் சுமாரான மத்திம பலன்களே அமையும். பணவரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். சிறு சிறு சுகவீனம் மருத்துவ செலவுகள் என்பன ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.



### * விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். முயற்சிகளில் அனுகூல வெற்றி ஏற்படும். குடும்பத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலைகள் உண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. மனைவி வழி மூலமாக நல்ல பலாபலன்கள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூல பலன் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு மத்திமமான பலா பலன்களே அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் நிலையிருக்கும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் அமையும். பணவரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலையுண்டு. தொழில் நிலை முன்னேற்றம் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் உண்டு. பணவரவு திருப்திகரமான நிலையிலே அமைந்திருக்கும். கடன் நிலை, கொடுக்கல் வாங்கல் சுமுகம் தரும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலம் உண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் நிலையிருக்கும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். கொடுக்கல், வாங்கல் கடன் நிலைகளில் இழுபறியிருக்கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * மீனம்

மீன ராசி அன்பர்களுக்கு முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் சற்று அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் சற்று மந்த நிலைகள் அமைந்திருக்கும். சகோதரர் வழியில் செலவீனங்கள் அமைய இடமுண்டு. பணவரவு சற்று சுமாராகவே அமைந்திருக்கும். கடன் நிலை, கொடுக்கல் வாங்கல் மந்த நிலை அமையும். பெண்கள் மத்திம பலன் பெறுவர். மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ். போதனா வைத்தியசாலையில்

# சுகாதார சீர்கேடுகளால் திண்டாடும் நோயாளர்கள்



வைத்தியசாலை என்பது நோய்களைத் தீர்க்கும் புனிதமான இடம். மாறாக, நோய்களின் இருப்பிடமாக - நோய்கள் பெருகுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் இடமாக இருக்கக் கூடாது.

யாழ். போதனா வைத்தியசாலை என்பது யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை முக்கியத்துவம் பொருந்திய வைத்தியசாலை. இவ் வைத்தியசாலை அளவில் பெரியது மட்டுமன்றி, வழங்கும் சேவையிலும் மிக உயர்ஸ்தானத்தை வகிக்கின்றது. நவீன சிகிச்சை வசதிகளையும் விசாலமான விடுதி வசதிகளையும் பல நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களின் சேவைகளுடனும் தன்னிகரற்ற வைத்தியசாலையாகத் திகழ்கின்றது.

ஆனால், அண்மைக் காலமாக யாழ். போதனா வைத்தியாசாலை சுகாதாரச் சீர்கேடுகளின் உறைவிடமாக மாறியுள்ளதாக நோயாளர் தரப்பினரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### சிற்றுண்டிச்சாலை

நோயாளர்களின் அத்தியாவசியத் தேவைகளுள் உணவு முக்கிய இடம் பெறுகின்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரேயொரு சிற்றுண்டிச்சாலையே (கன்ரீன்) காணப்படுகின்றது. அதிகளவு நோயாளர்களும் மற்றும் நோயாளர்களைப் பார்வையிட வரும் பொது மக்களும் தமது உணவுத்தேவைக்கு இந்த சிற்றுண்டிச்சாலையையே நாடுகின்றனர்.

### சிற்றுண்டிச்சாலையின் அமைவிடம்

வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலைக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியே சுகாதாரமுறைக்கு ஏற்புடையதான இடமாக அமையவில்லை. இரண்டு பிரதான கட்டடங்கள், அருகிலுள்ள வாய்க்கால்களின் மேலேயே சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ளது. தற்காலிகமாக அமைந்துள்ள இந்த சிற்றுண்டிச்சாலையில் நோயாளிகளோ அல்லது வைத்தியர்களோ, ஊழியர்களோ சௌகரியமாக அமர்ந்திருந்து உணவருந்தக் கூடிய இடவசதி போதுமானதாக இல்லை. வைத்தியர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஒரே இடம் தான்.

சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான வாடகையை அறவிடும் வைத்தியசாலை நிர்வாகம், நல்லதொரு இடத்தினையும் சீரான மின் விநியோகத்தையும் தமக்கு ஏற்படுத்தித் தந்தால் தம்மால் இதனைச் சிறப்பான முறையில் நடத்தமுடியும் என்கிறார் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்.

நோயாளர்களுக்கு சுடுநீர் வழங்குவதற்காக புதிய வெந்நீர்க் கொள்கலனை கொள்வனவு செய்து, அதனை மின்சக்தி மூலமே இயக்கி நீரைச் சூடாக்கி வருகின்றனர். ஆனால், சில வேளைகளின் மின்சார விநியோகம் துண்டிக்கப்படும் போதே நோயாளர்களுக்கு சுடுநீர் வழங்குவதில் சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றார்.

### கழிவறைகள்

போதனா வைத்தியசாலையிலுள்ள கழிவறைகளும் உரியமுறையில் சுத்திகரிக்கப்படுவதில்லை. நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதனால் கழிவளைகள் உரியவாறு சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியம். ஆனால், கழிப்பறைகளுக்குள் சென்றால் மூக்கைப் பொத்திக்கொண்டே இயற்கைக் கடன்களைக் கழிக்க வேண்டியுள்ளதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

போதனா வைத்தியசாலையின் வடிகால்களில் அசுத்த நீர் தேங்கிநிற்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. கழிவுப் பொருட்கள், குறிப்பாக பாவித்த பஞ்சு, பண்டேஜ் முதலியன அக்கால்வாய்க்குள் தேங்கிக்கிடக்கின்றது.

நோயாளிகள் கழிவுப்பொருட்களை பொறுப்புணர்வின்றி கண்டபடிவீசி எறிகின்றனர். வைத்தியசாலை சிற்றூழியர்கள் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்தாலும் கழிவுகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. எனவே, உரிய சுத்திகரிப்புப் பொறிமுறையின் கீழ் அடிக்கடிகால்வாயை சுத்திகரிக்கவேண்டியது அவசியம் உள்ளது. இதனை நெறிப்படுத்த சுத்திகரிப்பாளர்களின் முகாமைத்துவம் தவறியுள்ளது.

### பார்வையாளர் காத்திருப்பு

வைத்தியசாலை வளாகத்தில் மூன்று மாடிகளைக் கொண்ட நவீன தரத்திலான பிரசவ விடுதி பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதால் நோயாளிகளைப் பார்வையிட வருவோர் வைத்தியசாலையின் பின்பக்க வாயில் வழியாகவே வந்து பார்வையிடவேண்டிய நிலை காணப்படுகின்றது. பின் பக்க வாயில் மதியம் 12.00 மணிக்கே திறக்கப்படும்.

இதனால், நோயாளர்களை பார்வையிட வருவேர் வீதியில் பல மணிநேரம் வெய்யிலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து, நோயாளர்களினதும் பார்வையாளர்களினதும் நலன்களில் அக்கறை காட்ட வேண்டும்.

நோயாளர்களைப் பார்க்க வருபவர்களும் வைத்தியசாலைக்கு வந்த பின்னர் நோயாளர்களாகவே திரும்பிச்செல்கின்றனர்.



படங்கள்: அஸ்வின்

✱ கோப்பாய் நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



ஊரெழு கணேச வித்தியாசாலைக்குரிய கணினினை உரும்பிராய் பாடசாலையின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான கே.கண்ணதாசன் இயக்கி ஆரம்பித்து வைப்பதனைப் படத்தில் காணலாம். (படம்: ஏழாலை நிருபர்)



டாக்டர் எஸ்.பரமசிவம்பிள்ளை எழுதிய வாரரோகம் நூலை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பார்வையிடுவதனையும் அருகில் நூலாசிரியர் உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் வட மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: யாழ். மத்திநிருபர்)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு இலங்கைக்கான இந்திய தூதகரத்தின் யாழ். கிளையின் துணைத்தூதுவர் எஸ். மகாலிங்கம் வருகைதந்தபோது சுவாமி சித்தாந்தாவினால் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சி நிருபர்)



வலய மட்ட சிறுவர் நாடகப் போட்டியில் கலந்த கொண்ட ஆணைக் கோட்டை றோ.க.த.க பாடசாலையின் சிறுவர் நாடக குழுவுடன் பாடசாலை அதிபர் திருமதி நா. சந்திரகுமார் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் நிருபர்)



முழங்காவில் ஸ்ரீ கிருஸ்ணா அறவொளி பாடசாலை மாணவர்கள் யாழ்ப் பாணத்திலுள்ள இந்து ஆலயங்களுக்கு ஆன்மிக யாத்திரை ஒன்றை மேற் கொண்டனர். இதன்போது நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்து ஆசி பெற்று மாணவர்கள் நிற்பதைப்படத்தில் காணலாம். (படம்: வட்டுக்கோட்டை)



தென்மராட்சி கல்வி வலய தமிழ்த் தினப்போட்டிகள் நடைபெற்றபோது முதலாம் பரிசைப் பெற்ற காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் பங்கு பற்றிய கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் ஆசிரியைகளுடன் இருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: கைதடி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-மேற்கிந்திய தொடர் ஆரம்பம்

அண்மைக்காலமாக தொடர் வெற்றிகளுடன் வெற்றி நடைபோட்டு வருகின்ற இந்திய கிரிக்கெட் அணி உலகக்கிண்ணத் தொடரினையடுத்து தனது முதலாவது சர்வதேச போட்டியில் களம் காண்பதற்காக மேற்கிந்தியதீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணத்தினை மேற்கொண்டுள்ளது.

மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணியுடனான ஒரு இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் தொடர்களில் விளையாடுவதற்காக இளம் வீரர்கள் கொண்ட அணியாக புறப்பட்டுச் சென்றுள்ளது.

கடந்த 28 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவுக்கு 2 ஆவது உலகக்கிண்ணத்தை பெற்றுக்கொடுத்த இந்திய அணி மேற்கிந்தியதீவுகள் மண்ணில் சாதிக்கும் நோக்குடன் இளம் வீரர்கள் கொண்ட ஒரு புதிய அணியாக களம் காண்கின்றது. இதனால் இத் தொடரில் இந்திய அணி சாதிக்குமா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.



கிரிக்கெட் அரங்கில் அண்மைக்காலமாக ஏனைய அணிகளுக்கு சவாலாக விளங்கிவரும் இந்திய அணி உலகக்கிண்ணத் தொடரினை அடுத்து தனது முதலாவது சர்வதேச போட்டியில் களம் காண்பதற்காக மேற்கிந்திய தீவுகளுக்கு புறப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. யின் டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திலிருக்கும் இந்திய அணி அதிகமான டெஸ்ட் போட்டிகளை தன் சொந்த மண்ணிலேயே கைப்பற்றியுள்ளது. நன்கு பழக்கப்பட்ட ஆடுகளம் மற்றும் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு என அனைத்தும் சாதகமாக அமைய அதிக டெஸ்ட் வெற்றிகளை சொந்த மண்ணிலேயே பெற்றுள்ளது. குறிப்பாக கடந்த 6 வெளிநாட்டு கிரிக்கெட் சுற்றுப்பயணங்களில் 2 டெஸ்ட் போட்டிகளையே இந்தியா வென்றுள்ளது. அவை பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கெதிராக பெறப்பட்ட வெற்றிகளாகவே இருக்கின்றது.

இதனையே அண்மையில் இயன் பொத்தமும் தெரிவித்திருந்தார். அதாவது இந்தியா டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தினை தனது சொந்த மண்ணில் பெற்ற அதிக வெற்றிகளின் மூலமே பெற்றுள்ளது. எனவே இதனை வெளிநாட்டு மண்களில் சாதித்து நிரூபிக்க வேண்டும் என சவால் விடுத்திருந்தார்.

இந்நிலையில் தற்போது மேற்கிந்திய தீவுகள் மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரை கைப்பற்றுமா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் எழுந்துள்ளது. வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டிகள் என்பது இந்திய அணிக்கு சிம்ம சொற்பனமாக விளங்கிவருவதால் மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் தொடர் இந்தியாவுக்கு ஒரு முக்கியமான தொடராக அமையவுள்ளதுடன் சவால் நிறைந்ததாகவே அமையும் என்பது மறுப்பதுக்கில்லை.

மறுபுறத்தில் அண்மையில் பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை சமநிலையில் முடித்துக்கொண்ட மேற்கிந்தியதிவுகள் அணி அதே உத்வேகத்துடன் இத் தொடரில் விளையாடுவதால் இந்தியாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது எதிர்பார்ப்பாகவுள்ளது.

தரப்படுத்தலில் தன்னை விட ஒரு படி முன்னிலையிலிருக்கும் பாகிஸ்தானுக்கு தன் சொந்த மண்ணில் சவால் அளித்த மேற்கிந்திய தீவுகள்அணி இந்தியாவுக்கும் நெருக்கடியையே ஏற்படுத்தும். தன் சொந்த மண்ணில் ஆடுவதினால் ஆடுகளம் நன்கு பழக்கப்பட்டதொன்றாகவே அமைந்திருக்கும். இதனால் இலகுவானதொரு ஆட்டத்தினை கையாழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு நாள் தொடரினைப் பொறுத்தவரையில் வெற்றி நாயகன் டோனி இல்லாத நிலையில் புதிய தலைவர் ரெய்னாவின் தலைமையின் கீழ் களமிறங்கும் இந்திய அணி தொடரினை வெற்றி பெறுமா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இளம் வீரர்களை முற்றுமுழுதாக கொண்டு களமிறங்கும் இவ்வணி உலகக்கிண்ணத் தொடரில் பெற்ற வெற்றியின் உயிரோட்டத்துடன் இதனையும் வெற்றி பெறும் என்று எதிர்பாக்கப்படுகின்றது.

இவை இவ்வாறு இருக்கையில் இத்தொடரில் இந்திய அணியின் மூத்த வீரர்களான சச்சின், செவாக், கம்பீர் போன்ற முன்னணி வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இளம் வீரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அவர்களின் இடைவெளியை நிரப்புவார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால் அணியில் இணைக்கப்பட்டுள்ள புதிய இளம் வீரர்கள் அண்மைக்காலமாக சிறந்த நிலையிலேயே உள்ளனர். ஐ.பி.எல். தொடரிலும் அவர்கள் முத்திரை பதித்திருக்கின்றமை இத்தொடரிலும் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

திறமையான வீரர்களை அதிகம் கொண்ட இந்திய அணியில் நிரந்தர இடம் பிடிப்பதற்கு வீரர்கள் தற்போது போட்டியிட்டு வருகின்றனர். எனவே ஒவ்வொரு வீரரும் தனிப்பட்ட முறையில் பிரகாசிப்பதற்கு எடுக்கும் முயற்சி அணியை வெற்றிப்பாதைக்கே நகர்த்திச் செல்லும்.

மறுபுறத்தில் அண்மையில் பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரினைக் கைப்பற்றிய மேற்கிந்திய தீவுகள் இத் தொடரின் இளம் இந்திய அணிக்கு சவால் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகக்கிண்ணப் போட்டியில் அரையிறுதிவரை சென்றிருந்த பாகிஸ்தானை தன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தியிருக்கின்றமை இத்தொடரிலும் நம்பிக்கையையே ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே மேற்கிந்தியதீவுகள் அணி, இத்தொடரில் கிறிஸ்கெய்லை நீக்கியிருக்கின்றமை அணிக்கு பின்னடைவையே ஏற்படுத்தும் என்பது மறுப்பதுக்கில்லை. 4 ஆவது ஐ.பி.எல். தொடரின் பாதியில் பெங்களூர் அணியில் இணைந்து கொண்ட கெய்ல் தனது அதிரடியான ஆட்டத்தினால் பெங்களூர் அணியை இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்றதுடன் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்கள் வரிசையில் முதலிடத்தைப் பெற்று தொடர் நாயகன் விருதினையும் வென்றார்.

இந்நிலையில், கெய்லை இந்தியாவுடனான இத்தொடரில் மேற்கிந்தியதீவுகள் அணியின் தேர்வுக்குழு கழற்றிவிட்டிருப்பது அணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஐ.பி.எல். போட்டிகளில் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களுக்கு சவால் அளித்த இவர் இத்தொடரில் களமிறக்கப்பட்டால் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவார் என்பது மறுப்பதுக்கில்லை.

பாகிஸ்தானுடனான தொடரிலும் கெய்ல் அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அணியில் இடம்பெற்றுள்ள ஏனைய வீரர்கள் இந்தியாவுக்கு சவால் அளிக்கும் வகையிலேயே உள்ளன.

இது இவ்வாறு இருக்கையில் இந்திய அணியின் துடுப்பாட்டப் பலத்தினைப் பார்க்கும் போது சற்று பின்னடைவாகவே உள்ளது. இருந்தாலும் அது நீண்டதொரு இடைவெளியை ஏற்படுத்தாது என்றே கூறலாம். சச்சின், செவாக், கம்பீர் போன்ற இமாலய துடுப்பாட்ட வீரர்கள் இல்லாதது அணியின் துடுப்பாட்டப்பலத்தில் சற்றுத் தளர்வையே ஏற்படுத்தியுள்ளது. இது டெஸ்ட் தொடரிலேயே அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திலும் ஒரு நாள் தரப்படுத்தலில் 2 ஆ[illegible] இடத்திலும் இருக்கும் இந்திய அணியும்- டெஸ்ட் தரப்படுத்தலில் 7 ஆவது இடத்திலும் ஒரு நாள் தரப்படுத்தலில் 8 ஆவது இடத்திலும் இருக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையே நடைபெறுகின்ற இத் தொடர் இரு அணிகளுக்கும் சவால்நிறைந்த பலப்பரிட்சையாகவே அமையவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday June 03, 2011.